957
1380
1376
OFFICE OF THE ... 17 DEC 1940 MADRAS

நான்காம் புத்தகம்

TAMIL
FOURTH BOOK

S. G. DANIEL, B.A.

(Revised according to the New Elementary School Syllabus 1939)

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS

PRICE 5½ As. 1940 விலை, 5½ அணா

TAMIL
FOURTH BOOK

BY

S. G. DANIEL, B.A.

Madras Educational Service (Retired)

OFFICE OF THE ...
17 DEC 1940
MADRAS

நான்காம் புத்தகம்

494.8186

Revised according to the
New Elementary School Syllabus

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS BANGALORE SECUNDERABAD COLOMBO
1940

Number of Editions printed prior to 1930, Nine

Reprinted, 1931 (10th Edition)
Reprinted, 1933 (11th Edition)
Reprinted, 1934 (12th Edition)
Reprinted, 1936 (13th Edition)
Reprinted, 1937 (14th Edition)
Reprinted, 1938 (15th Edition)
Revised, 1938 (16th Edition)
Reprinted, 1938 (17th Edition)
Revised, 1940

உபாத்தியாயருக்குக் குறிப்புகள்

1. பாடத்தை வாசிக்க ஆரம்பிக்குமுன் உபாத்தியாயர் அப்பாடத்தில் சொல்லியிருக்கும் விஷயத்தைப் பிள்ளைகளுடைய வாழ்க்கைக்குச் சம்பந்தப்படுத்தி, அவர்களோடு அதைப்பற்றி சம்பாஷிக்கவேண்டும்.

2. அச்சமயத்தில் உபாத்தியாயரும் பிள்ளைகளும் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, பாடத்துக்குச் சம்பந்தமான பொருள்கள், உருவங்கள், படங்கள் முதலிய உபகரணங்களைக்கொண்டு சம்பாஷிக்க வேண்டும். புதிய பாட திட்டத்திற்கிணங்க இப்புத்தகத்தில் முதல் மூன்று புத்தகங்களிலு மில்லாத சுமார் எழுநூறு புதுச் சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் வரும் புதுச் சொற்களை அந்தந்தப் பாடத்தின் தலைப்பில் குறித்துக் காட்டியிருக்கிறது. சம்பாஷிக்கும்போது அப்புதுச் சொற்களையும் பிள்ளைகள் உபயோகிக்கும்படி உபாத்தியாயர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

3. சம்பாஷிக்கும்போது பாடத்துக்கு அதிக சம்பந்தமில்லாத விஷயங்களில் பிள்ளைகளுடைய கவனம் செல்லாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. விஷயங்கள் யாவும் பிள்ளைகள் மனதில் நன்றாய்ப் பதிந்த பின், அவற்றில் சில வாக்கியங்களைக் குறிப்பிட்டு அவைகளைப் பிள்ளைகள் பிழையின்றி எழுதும்படி செய்து, அதன்பின் புத்தகத்தைத் திறந்து வாசிக்கச் சொல்லவேண்டும்.

5. பிள்ளைகள் பிழையாய் வாசித்தால், உபாத்தியாயர் அவர்களைத் திருத்தி சரியாய் வாசித்து மாதிரி காட்டவேண்டும். சத்தமாய் வாசிக்கத் தெரிந்தபின், மௌனமாக வாசிக்கவும் பிள்ளைகள் பழக வேண்டும்.

6. கடின பதங்களுக்குப் பிள்ளைகளிடத்திலிருந்தே பொருளை வருவிக்கப் பிரயாசப்படவேண்டும். அர்த்தத்தை வருவித்தபின் அதைக் கறுப்புப்பலகையில் எழுதிக் காட்டவேண்டும்.

7. பாடங்களின் இறுதியில் கொடுத்திருக்கும் அப்பியாசங்களை நடத்துவதுமன்றி அவைபோன்ற இன்னும் பல அப்பியாசங்களையும் உபாத்தியாயர் தயார்செய்து போதிக்கவேண்டும். பிள்ளைகள் நன்ருய் எழுதும்படியாகவும், அவர்களுடைய எழுத்துக்கள் சுத்தமாயும் அழகாயும் இருக்கும்படியாகவும், உபாத்தியாயர் கவனித்துக்கொள்ள வேண்டும்.

8. பிள்ளைகளுக்குப் படிப்பில் உற்சாகமும் சந்தோஷமும உண்டாகவும் இயற்கையறிவு வளரவுந் தக்கதாக, ஒவ்வொரு பாடத்துக்கும் சமபந்தமான கிண்டாகாட்டன் தொழில்கள், சித்திரம் வரைதல், கதை. பாட்டு, ஆட்டம் முதலிய விஷயங்களும் கற்பிக்கவேண்டும்.

9. உபாத்தியாயர் ஒவ்வொரு பாடத்தையும் முன்னதாகவே வாசித்து, தயார்செய்து அதற்குப் பாடக்குறிப்புகள எழுதிவைத்துக் கொண்டு போதிக்கவேண்டும். ஒவ்வொரு உபாத்தியாயரிடத்திலும் நல்ல தமிழ் அகராதி ஒன்று இருக்கவேண்டும.

10. பிள்ளைகள் நல்லொழுக்க முறைகளை அனுசரிப்பதற்கு ஏதுவாக உபாத்தியாயர் தன் சம்பாஷணையையும், நடக்கையையும் வெகு கருத்தாய் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பொருள் அடக்கம்

பாடம்		பக்கம்
1.	ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தி	1
2.	புளிய மரம்	4
3.	பருத்தி	9
4.	டேவிட் லிவிங்ஸ்டன்	13
5.	தபால்	16
6.	ஜான் வீம்க்கின்	19
7.	கத்தரிக்காய்	22
8.	சிறந்த தருமம்	27
9.	ஆல்பிரெட் அரசனுடைய அரைரொட்டி	30
10.	சப்பாத்துக்கள்ளி	32
11.	பட்டி	36
12.	காற்று	39
13.	பவளம்	44
14.	திருட்டுக்கு மருந்து	49
15.	உப்பு	53
16.	ஈடித் காவல்	56
17.	முதல்தர முத்துக்கொட்டை	60
18.	சாரணச் சிறுவர்	65
19.	தோல்	69
20.	உலோகங்கள் (முதற் பாகம்)	72
21.	உலோகங்கள் (இரண்டாம் பாகம்)	76
22.	விதைக்கிறவன்	79
23.	பேபர்	83
24.	கெட்ட குமாரன் நல்ல குமாரனான விதம்	87
25.	கடிதம் எழுதுவது (மாதிரி 1)	90
26.	,, (மாதிரி 2)	91
27.	,, (மாதிரி 3)	93

பாடம் பக்கம்

28. பதிலுக்குப் பதில் 94
29. யூனியன் ஜாக் 97
30. இராஜ வாழ்த்து 100
31. வேத வாக்கியங்கள் 102
32. வெற்றிவேற்கை 103
33. அறப்பளீசுர சதகம் 107
34. செய்யுள் பாகத்தின் அரும்பத உரை 109

நான்காம் புத்தகம்

1. ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தி

பாட்டனர்	துறைமுகப்பட்டணம்	அழுக்து
அரசாட்சி	மாரிகாலம்	அவசரம்
தயாளசிந்தை	சேறு	விரித்து
வல்லாசுகள்	சுகதி	பாப்பி
சமாதானம்	படகு	முடிவு
கௌரவ நாமம்	பாதரட்சை	கொண்டாடி
சமுத்திர யாத்திரை	பதிந்து	சதா

ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தி இப்பொழுது நம்மை அரசாளும் ஆருவது ஜார்ஜ் சக்கரவர்த்தியி னுடைய பாட்டனர். இவர் சுமார் பத்து வருஷம்

இங்கிலாந்து தேசத்து அரசராகவும், இந்தியா தேசத்து சக்கரவர்த்தியாகவும் அரசாட்சிசெய்தார். இவர் தயாள சிந்தையும், குடிகள்பேரில் அன்பும் நிறைந்த அரசர். தன் காலத்தில் சண்டைகள் உண்டாகாதபடி உலகத்தி லுள்ள மற்ற வல்லரசுகள் யாவரோடும் சமாதானமா யிருந்தார். அதனல் இவருக்குச் சமாதான எட்வர்ட் சக்கர வர்த்தி யென்னும் கௌரவ நாமம் வழங்கி வருகிறது.

இவர் ஒருதடவை சமுத்திர யாத்திரை செய்து கொண்டிருக்கும்பொழுது, இத்தாலியா தேசத்துத் துறைமுகப்பட்டணம் ஒன்றில் இறங்கும்படி நேரிட் டது. அது மாரிகாலமானபடியால், அன்று பெருமழை பெய்து, வழியெல்லாம் சேறும் சகதியுமாயிருந்தது. படகிலிருந்திறங்கி, வண்டி யிருக்கும் இடம்வரைக்கும் போவதற்குள், அரசனுடைய பாதரட்சை சேற்றில் பதிந்து அழுக்காகிவிடுமென்றெண்ணி, இத்தாலிய உத்தி யோகஸ்தர்கள் ஒரு பெரிய கம்பளம் கொண்டுவந்து, வழியில் விரித்தார்கள். அந்தக் கம்பளம் நீளம் சற்று குறைவாயிருந்தபடியால், மீதி இடத்துக்கு அவசரத்தில் தங்கள் தேசத்துக்கொடிகளை கீழே பரப்பிவிட்டார்கள். சக்கரவர்த்தி கம்பளத்தின் முடிவுவரையில் நடந்துவந் தார். பின்பு எதிரில் இத்தாலியா தேசத்துக் கொடிகள் கீழே கிடப்பதைப் பார்த்து, உடனே கொடிகளை மிதிக்கா மல், தரையில் நடந்து, தலையிலிருந்த தொப்பியையும் எடுத்து மரியாதைசெய்தார். இதனல் அத்தேசத்து ஜனங்கள் யாவரும் எட்வர்ட் சக்கரவர்த்தியைக் கொண் டாடி அவர்பேரில் சதா அன்புள்ளவர்களானர்கள்.

அப்பியாசம்

1. ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தியின் கௌரவ நாமம் என்ன?
2. அந்தப் பெயர் அவருக்குக் கிடைத்ததற்குக் காரணம் என்ன?

3. இங்கிலாந்து, இத்தாலியா, இந்தியா இத்தேசங்களைப் பூகோளப் படத்தில் காட்டு.

4. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:— வல்லரசு, மாரிகாலம், சதா.

5. எட்வர்ட், ஜியார்ஜ், ஆடு, மாடு, படகு, வண்டி என்று பிராணிகளுக்கும் பொருள்களுக்கும் ஏன் வெவ்வேறு பெயரிட வேண்டும்?

[பல பொருள்களிலிருந்து ஒரு பொருளைக் குறிப்பாய் எளிதில் தெரிந்துகொள்வதற்காக இப்படிப் பெயரிடுகிறோம்.]

கவனிப்பு:—

(1) பிராணிகளின் அல்லது பொருள்களின் பெயரைக் காட்டும் சொற்களுக்குப் பொருட்பெயர் என்று பெயர்.

(2) பட்டணம், தேசம் என்னும் சொற்கள் இடத்தைக் காட்டுகிற படியால் அவை இடப்பெயர்கள். இடங்களின் பெயரைக் காட்டும் சொற்களுக்கு இடப்பெயர் என்று பெயர்.

(3) வருஷம், மாதம், தேதி என்னும் சொற்கள் காலத்தைக் காட்டு கிறபடியால் அவை காலப்பெயர். காலங்களின் பெயரைக் காட்டும் சொற்களுக்குக் காலப்பெயர் என்று பெயர்.

(4) தலை, கை, கால் என்னும் சொற்கள் உறுப்புகளைக் காட்டு கின்றன. உறுப்பு என்பதற்குப் பதிலாக சினை என்றும் சொல்லலாம். ஆகையால் இவை சினைப்பெயர்கள். உறுப்புகளின் பெயரைக் காட்டும் சொற்களுக்கு சினைப்பெயர் என்று பெயர்.

6. கீழ்க்கண்ட வாக்கியத்திலிருக்கும் பெயர்ச்சொற்களில் பொருட் பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர் எவையென்று எடுத்து எழுது:—

அச்சமயத்தில் சக்கரவர்த்தி இத்தாலியா தேசத்துக் கொடிகளை மிதிக்காமல், தரையில் நடந்து, தலையிலிருந்த தொப்பியையும் எடுத்து, மரியாதை செய்தார்.

2. புளிய மரம்

தேன்	ஆவி	சேக்து
இனிப்பு	நாலாபக்கங்கள்	துந்தாணி
புளிப்பு	சித்திரை	கோட்டாப்புளி
சுண்டைக்காய்	வைகாசி	பித்தளை
கசக்கும்	மாசி	செப்புப்பாத்திரம்
துவர்க்கும்	பிஞ்சு	விருட்சம்
கரிக்கும்	உலுக்கி	விறகு
உறைக்கும்	துரட்டுக்கோல்	வறுத்து
அறுசுவை	ஓடுகள்	ஊறவைத்து
வண்டிப்பாதை	சுளை	பன்றி
கமகு	குழம்பு	பசை
கஜம்	துவையல்	போஷிக்கும்
பாதுகாத்து	நசுக்கி	பூக்க
பட்டுப்போம்	கொழுந்து	பயப்பட

நாம் உண்ணும் உணவுப்பொருள்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான உருசி உண்டு. தேன் இனிப்பாயிருக்கும்; சுண்டைக்காய் கசக்கும்; விளாங்காய் துவர்க்கும்; உப்பு கரிக்கும்; மிளகாய் உறைக்கும்; புளியங்காய் புளிக்கும்; இந்த ஆறுவிதமான உருசிக்கும் அறுசுவை என்று பெயர். புளிப்பு என்பது அறுசுவையில் ஒன்று.

கறிபதார்த்தங்களுக்கு புளிப்பு வேண்டியதாயிருந்தால் நாம் புளியை உபயோகப்படுத்துகிறோம். புளி ஒரு பெரிய மரத்திலிருந்து கிடைக்கிறது. அம்மரத்துக்குப் புளிய மரம் என்று பெயர். புளிய மரம் எல்லா விதமான நிலங்களிலும் பயிராகும். நமது நாட்டில் புளிய மரம் இல்லாத ஊர் கிடையாது. சில விடங்களில் வண்டிப்பாதையின் இருபக்கங்களிலும் நிழலுக்காகக் கூட இம்மரங்களை வைத்துப் பயிராக்குகிறார்கள். ஏனென்றால், இம்மரத்துக்குக் கிளைகளும் இலைகளும் அதிகம்;



சுமார் நூறு வருஷம் வரையில் பட்டுப்போகாமல் பலன் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடியது. தென்னை, கமுகு முதலிய மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதுபோல எப்பொழுதும் தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியமும் இல்லை. கன்று சற்று பெரிதாக வளர்கிற வரையில் தண்ணீர் ஊற்றிப் பாதுகாத்துவந்தால் பின்பு தானாகவே வளர்ந்துவிடும்.

புளிய மரம் பெரிதானபடியால் அதன் வேர் நேராகக் கீழ்நோக்கிப் பத்து அல்லது பதினைந்து கஜ நீளம் செல்வதுமல்லாமல், பக்கங்களில் எழுபது எண்பது கஜ தூரம் பரவியும் இருக்கும். கிளைகளும் இலைகளும் அதிகமாயிருப்பதால், அதினின்று ஆவியாய் வெளியே செல்லுகிற நீர் மிக அதிகம். ஆகையால், மேன்மேலும் நீர் பூமியிலிருந்து மரத்துக்குச் சென்றுகொண்டிருந்தாலன்றி மரம் பட்டுப்போம். இவ்வித ஜலக்குறைவு மரங்களுக்கு நேரிடாதிருக்கும்படியாகவே, வேர்கள் நாலா பக்கங்களிலும் பரவி, ஜலத்தைத் தேடிக்கொள்ளும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரணமாய் சித்திரை வைகாசி மாதங்களில் புளி பூப்பூக்க ஆரம்பிக்கும். பின்பு பிஞ்சு பிடித்து, மாசி மாதத்துக்குள் காய் முற்றிப் பழுத்துவிடும். நன்றாய்ப் பழுத்தபின் காற்றினால் பழங்கள் கீழே ஒவ்வொன்றாய் விழுந்துகொண்டிருக்கும். சொந்தக்காரர் தினந்தோறும் மரத்தடியிற் சென்று, அவைகளைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். மரத்தில் ஏறி கிளைகளை உலுக்கி பழங்களைக் கீழே விழும்படியும் செய்வார்கள். துரட்டுக்கோலாலும் பழங்களைப் பறிப்பதுண்டு. இவ்விதமாகப் பழங்களைச் சேர்த்தபின் அவைகளை வெயிலில் காயவைத்து, ஓடுகளை நீக்கி, சுளைகளை வேறுபடுத்துவார்கள். பிறகு சுளைகளைக் காயவைத்து, கொட்டைகளை எடுத்துவிட்டு பழத்தை உபயோகப்படுத்துவார்கள்.

நமது நாட்டார் குழம்பு, இரசம், கறிகள் முதலியவற்றிற்குப் புளியை விசேஷமாக உபயோகப்படுத்துகிறார்கள். புளியம்பிஞ்சுகளைப் பக்குவப்படுத்தி ஒருவிதமான துவையல் செய்கிறார்கள். புளியங்காய்களை நசுக்கிப்போட்டுத் தெளிவான இரசம் வைத்து அன்னத்துடன் சாப்பிடுகிறார்கள். புளியம் இலைகளையும் சிலர்

இரசம் செய்ய உபயோகிக்கிருர்கள். புளியங்கொழுந்தை பருப்போடு சேர்த்து சமைத்து உண்பார்கள்.

இவ்விருட்சத்தின் அடிப்பாகத்தை செக்கு, குந்தாணி, உரல் முதலியவை செய்ய உபயோகிக்கிருர்கள். நல்ல வைரமாயிருந்தால் உலக்கை, உளிப்பிடி, கொட்டாப்புளி முதலியவைகள் செய்யலாம். கொஞ்சம் சாம்பலுடன் புளியிலேயைச் சேர்த்து நன்ருய்த் தேய்க்க பித்தளே செப்புப் பாத்திரங்கள் சுத்தமாகும். புளியமரத்தின் எல்லாப் பாகங்களும் நல்ல விறகாக உபயோகப்படும்.

புளியங்கொட்டைகளே வறுத்து, தோலேப்போக்கித் தண்ணீரில் ஊறவைத்து, கொஞ்சம் உப்புப்போட்டு ஏழைகள் தின்பதுண்டு. பன்றிகளுக்கு இக்கொட்டைகள் நல்ல ஆகாரமாகும். இவற்றைத் தண்ணீரில் ஊற வைத்து, அரைத்துக் காய்ச்சி ஒருவித பசையாகவும் உபயோகிக்கிருர்கள்.

புளி பதார்த்தங்களோடு சேர்வதால் வாய்க்கு ருசியைத் தந்து, தேகத்தைப் போஷிக்கும். ஆனல் நோயாளிகளுக்குப் புளியில்லாக் கறியே மேலானது. அவர்கள் புலிக்கு பயப்படுவதுபோல் புளிக்கும் பயப்படவேண்டுமென்று சொல்வது வழக்கம். புளிய மரம் அதிக உஷ்ணமானது. அதன் நிழலில் தங்கியிருப்பது சுகத்துக்குக் கெடுதல் என்று நமது நாட்டு வைத்தியர்கள் சொல்லுகிருர்கள்.

அப்பியாசம்

1. அறுசுவை என்ருல் என்ன? உதாரணத்துடன் விளக்கிக் காட்டு.

2. புளிய மரங்களே எப்படிப் பயிரிடுகிருர்கள்?

3. அதன் இலே, காய், பழம், கொட்டை, அடிமரம் ஒவ்வொன்றும் எவ்வாறு உபயோகப்படுகிறது?

4. இவ்வார்த்தைகளை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது:—

புலி, புளி; கரி, கறி; மரம், மறம்.

5. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

விருக்ஷம், கொழுந்து, பசை.

6. இச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன பெயர் என்று இந்த அட்டவணையில் எழுதிக் காட்டு:—

மரம், தேன், நாடு, ஊர், பாதை, கிளை, இலை, வேர், சித்திரை, வைகாசி, மாசி, பருப்பு, தோல், பன்றி.

பொருட்பெயர்	இடப்பெயர்	காலப்பெயர்	சினைப்பெயர்

7. தேன், புளி—இவற்றின் தன்மை அல்லது குணம் அல்லது பண்பு என்ன?

தேனின் தன்மை அல்லது பண்பு—இனிப்பு

புளியின் தன்மை அல்லது பண்பு—புளிப்பு

இனிப்பையும், புளிப்பையும், உருண்டை வடிவத்தையும் அந்தந்தப் பொருளை விட்டு வேருகப் பிரித்துக் காட்டமுடியாது. இப்படிப்பட்ட சொற்களுக்கு பண்புப்பெயர் என்று பெயர். **பொருளின் குணம் அல்லது தன்மையைக் காட்டும் பெயர் பண்புப்பெயர் என்று சொல்லப்படும்.**

8. பண்புப்பெயருக்கு வேறு சில உதாரணங்கள்:—

கசப்பு, துவர்ப்பு, கரிப்பு, உறைப்பு, பெருமை, சிறுமை, நன்மை, தீமை.

3. பருத்தி

நாடுகள்	பூசணி	முள்ளங்கி
உடுக்க	சுரை	தரித்து
சோளம்	வெண்டை	மற்றை
சாமை	முருங்கை	பள்ளியறை
தினை	அவரை	தலையணை
வரகு	பாகல்	திண்டு
துவரை	கக்கரி	கம்போடியா
காராமணி	வெள்ளரி	வெடிக்கும்
மொச்சை	தக்காளி	சருகு
உளுந்து	அறைக்கீரை	காம்பு
கடலை	முளைக்கீரை	தூசி
பட்டாணி	கோவிஸ்	மணை
வாதுமை	வள்ளிக்கிழங்கு	வில்
பீர்க்கு	உருளைக்கிழங்கு	நெசவு
புடல்	கருணைக்கிழங்கு	கரிசல்

மனிதருக்கு உண்ண உணவும், உடுக்க வஸ்திரமும் அவசியம் வேண்டும். நாம் உணவுக்காக நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, தினை, வரகு, கோதுமை முதலிய தானியங்களையும்; துவரை, காராமணி, மொச்சை, உளுந்து, கடலை, பட்டாணி, கொள் முதலிய பயறுகளையும்; முந்திரி, வாதுமை முதலிய பருப்புகளை யும்; கத்தரி, பீர்க்கு, புடல், பூசணி, சுரை, வெண்டை, முருங்கை, அவரை, பாகல், கக்கரி, வெள்ளரி, தக்காளி முதலிய காய்களையும்; அறைக்கீரை, முளைக்கீரை, கோவிஸ் முதலிய கீரைகளையும்; வள்ளி, உருளை, கருணை, முள்ளங்கி முதலிய கிழங்குகளையும்; மா, பலா, வாழை, திராக்ஷை, கிச்சிலி, மாதுளை, ஈந்து முதலிய பழங்களை யும் உபயோகிக்கிறோம். உடுக்கும் வஸ்திரங்கள் விசேஷ மாய்ப் பருத்தி என்னும் செடியிலிருந்து உண்டாகும்



பஞ்சினாலே செய்யப்படுகின்றன. குளிர்ந்த தேசத்தில் இருக்கிறவர்கள் ஆட்டுமயிரினால் நெய்த உடைகளைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். பணக்காரர் பட்டுவஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் எல்லா மனிதரும் சாதாரணமாய் உடுத்திக்கொள்ளும் வஸ்திரம் பருத்திச் செடியிலிருந்துதான் கிடைக்கிறது. ஆகையால் பருத்திச் செடி மற்றைச் செடிகளைவிட மிகவும் மேன்மை பொருந்திய செடியாய் இருக்கிறது.

பஞ்சானது வெண்பஞ்சு, செம்பஞ்சு, இலவம் பஞ்சு என மூன்று வகைப்படும். அவற்றில் இலவம் பஞ்சு உயரமாய் வளரும் இலவமரத்தினின்று கிடைக்கிறது. இலவம்பஞ்சு மிகவும் மிருதுவாயிருப்பதால் அதைக் கொண்டு பள்ளியறைக்குவேண்டிய மெத்தை, தலையணை, திண்டு முதலியவைகள் செய்வார்கள். மற்ற இருவகைப் பஞ்சுகளும் பருத்திச்செடியில் விளைகின்றன. பருத்திப் பஞ்சினால்தான் துணிகள் நெய்யப்படுகின்றன.

பருத்திச்செடியில் ஒரு ஜாதி இரண்டு மூன்று அடி உயரம் வளர்ந்து நிலத்திற் படரும். மற்றொரு ஜாதி மரமாக வளரும். தரையில் படருகிற ஜாதியே மேன்மை யானது. தற்காலத்தில் நமது நாட்டுப் பருத்தியைவிட அமெரிக்கன் பருத்தி என்று சொல்லப்படும் கம்போடியா பருத்தி விசேஷமாக மதிக்கப்பட்டு, அநேக இடங்களில் பயிரிடப்படுகிறது. ஏனென்றால், நாட்டுப் பருத்தியை விட கம்போடியா பருத்தியிலிருந்து நூற்கும் நூல் அதிக நீளமாயிருக்கும். ஆகையால், நூல் நூற்பவர்கள் அதற்கு அதிக விலை கொடுத்து வாங்குவார்கள். ஆனால், நாட்டுப் பருத்தியையும் கம்போடியா பருத்தியையும் கலந்துவிட்டால் விலை குறைந்துவிடும். ஏனென்றால், நூல் நூற்பதற்காக ஒவ்வொரு தினுசு பருத்திக்கும் ஒவ்வொரு விதமான இயந்திரம் வேண்டும். கலப்பான பருத்தியைக்கொண்டு நூல் நூற்பது மிகவும் கஷ்டம்.

பருத்திச் செடியின் இலைகள் பசுமையாயும், அகலமாயும், நுனியில் விரல்கள்போன்ற கூரிய பிரிவுகளையுடையனவாயும் இருக்கும். பருத்திப்பூ சுற்றிலும் மஞ்சள் நிறமாயும், மத்தியில் நீல நிறமாயும் இருக்கும். பூ உலர்ந்து விழுந்தவுடன் அடியில் காய் காணப்படும். காய்கள் முற்றினபின் சூரிய வெப்பத்தால் காய்ந்து வெடிக்கும். அப்பொழுது உள்ளிருக்கும் பஞ்சு வெளிப்படும். அக்காலத்தில் ஸ்திரீகளும் பிள்ளைகளும் பருத்தியை வெகு ஜாக்கிரதையாய் எடுத்துச் சேர்ப்பார்கள். பின்பு சருகு, காம்பு, தூசி முதலியவைகளை நீக்கி, பருத்தியை நன்றாய்ச் சுத்தப்படுத்தி, பருத்தி அரைக்கும் மனைகளில் கொடுத்து, பஞ்சு வேறு விதை வேறாகப் பிரிப்பார்கள். அதன் பின்பு பஞ்சை நன்றாய் வில்லால் அடித்துச் சேர்த்து ராட்டினத்தில் நூலாக நூற்பார்கள்.

நூலை நெசவுக்காரர் வாங்கிக்கொண்டுபோய் பலவிதமான வஸ்திரங்கள் நெய்கிறார்கள்.

பருத்தி மிகுதியாய்க் கரிசல் நிலத்தில் பயிராகும். இதற்கு அதிக ஜலம் வேண்டுவதில்லை. அப்போதைக்கப் போது பெய்யும் மழையினால் விளைந்துவிடும். இப்பயிருக்கு வெயில் அதிகமாய் வேண்டும். தமிழ் நாடுகளில் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் பருத்தி பயிராகிறது.

அப்பியாசம்

1. மனிதர் என்னென்னவிதமான உடைகள் உடுக்கிறார்கள்? அவை எவற்றினால் நெய்யப்பட்டவை?

2. நமது நாட்டில் சகலரும் சாதாரணமாய் உடுக்கும் உடைக்கு வேண்டிய நூல் எதிலிருந்து நமக்குக் கிடைக்கிறது?

3. எத்தனைவிதமான பஞ்சுகள் உண்டு? அவை ஒவ்வொன்றும் எதிலிருந்து கிடைக்கிறது? ஒவ்வொன்றின் பிரயோசனம் என்ன?

4. பருத்தியில் எத்தனை விதம் உண்டு? கம்போடியா பருத்தியின் விசேஷம் என்ன?

5. பருத்தி எப்பேர்ப்பட்ட இடங்களில் பயிராகும்?

6. தமிழ் நாட்டில் எந்தெந்த ஜில்லாக்களில் பருத்தி பயிராகிறது? அந்த ஜில்லாக்களை சென்னை இராஜதானியின் படத்தில் காட்டு.

7. கம்போடியா எங்கேயிருக்கிறது? அதைப் பூகோளப் படத்தில் காட்டு.

8. இப்பதங்களை உபயோகப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்கியம் எழுது:—

மணை, மனை, பட்டு, பாட்டு, பல்லி, பள்ளி, துணி, துளி.

9. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு:—

நூல், கம்பு, காம்பு, பள்ளி.

10. **சேய், வளர், உண்ணு, போ, வா** என்பவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு செய்கை அல்லது தொழிலைக் காட்டுவதால் வினைச்

சொற்கள். ஆனால் செய்தல், வளர்தல், உண்ணுதல், போதல், வருதல், போக்கு, வரத்து என்பவை பெயர்ச்சொற்கள். ஏனென்றால், இவை ஒவ்வொன்றும் வாக்கியத்தின் எழுவாயா யிருக்கக்கூடும். அவை அந்தந்தத் தொழிலினுடைய பெயர்களாதலால் தொழிற்பெயர்கள். **தொழிலின் பெயரைக் காட்டும் சொல் தொழிற்பெயராம்.**

கவனிப்பு:—

ஒன்று இன்னதெனக் குறிப்பிக்கும் சொல் பெயர்ச்சொல். இப்பெயர்கள் குறித்த விஷயம்பற்றி ஆறு வகைப்படும். அவை யாவன:—

1. பொருட்பெயர்—இராமன், மரம்.
2. இடப்பெயர்—மதுரை, தஞ்சாவூர்.
3. காலப்பெயர்—சித்திரை, திங்கள்.
4. சினைப்பெயர்—தலை, கிளை.
5. பண்புப்பெயர்—நன்மை, புளிப்பு.
6. தொழிற்பெயர்—உண்ணல், உடுத்தல்.

4. டேவிட் லிவிங்ஸ்டன்

அந்தகாரக்கண்டம்	பிராயம்	விடியற்காலம்
அழைக்கப்படும்	ஆலை	இளமை
பிரதான	கிரவுண்	லத்தீன்
பிரதேசம்	விராகன்	கிரேக்க பாஷை
நிபுணர்	அன்னை	கிரந்தங்கள்
உழைப்பாளி	ஆசீர்வாதம்	இராப்பாடசாலை
வனுந்தரம்	நள்ளிரவு	பிரசித்தி
நூதன	விழித்திருந்து	சாஸ்திரி

டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர் "அந்தகாரக்கண்டம்" என்றழைக்கப்படும் ஆப்ரிக்காக் கண்டத்தில் பல பிரதான பிரதேசங்களைக் கண்டுபிடித்தவர். இவர் பெரிய வைத்தியர், சிறந்த பக்திமான், கல்வியில் வல்ல நிபுணர், கடின உழைப்பாளி. ஆப்ரிக்காக் கண்டத்தில் எத்த

ஊயோ ஆயிரம் மைல்கள் ஜனசஞ்சாரமில்லாத வனாந் தரங்களில் கஷ்டத்துடன் பிரயாணம் செய்து அநேக நூதன இடங்களைக் கண்டுபிடித்தவர்.

இவர் பத்துப்பிராயமுள்ளவரா யிருக்கும்போது ஒரு பஞ்சு ஆலையில் கூலிவேலை செய்தார். முதலாவது வாரம் அவர் வாங்கின சம்பளம் அரை கிரவுண். அது நமது நாட்டுக் கணக்குப்படி ஏறக்குறைய அரை வராகனாகும். இச்சம்பளத்தை வாங்கினவுடனே அவர் அதிக சந் தோஷத்தோடு அதைத் தன் தாயாரிடத்தில் கொண்டு போய்க் கொடுத்து, அன்னையின் ஆசீர்வாதத்தைப் பெற் றுக்கொண்டார். பின்பு தான் சம்பாதித்த பணத்தில் ஒரு பாகத்திற்கு ஒரு லத்தீன் முதற்புத்தகம் வாங்கிக் கொண்டு, அவ்வூர் இராப் பாடசாலையில் 8 மணி முதல் 10 மணி வரைக்கும் கிரமமாய்ப் போய்ப் படித்துவந் தார். பாடசாலை முடிந்தபின் நள்ளிரவு 12 மணிவரை யில் விழித்திருந்து வாசிப்பார். விடியற்காலத்தில்

எழுந்து காலை 6 மணிக்கெல்லாம் பஞ்சு ஆலைக்கு வேலை செய்யப் போய்விடுவார். இவ்விதமாகத் தன் சாப்பாட்டுக்குச் சம்பாதித்துக்கொண்டு, படிப்பிலும் விருத்தியடைந்தார். கிரேக்க பாஷையிலும், லத்தீன் பாஷையிலும் அநேக கிரந்தங்களைப் படித்தார்.

இவர் இளமையிலேயே இவ்விதமாகக் கஷ்டப்பட்டு வேலையும் செய்து, கல்வியுங் கற்றுவந்ததால் பின்பு பிரசித்திபெற்ற பெரிய சாஸ்திரியானார்.

அப்பியாசம்

1. இந்தக் கதையை மௌனமாகப் படித்து சுருக்கமாகச் சொல்லு.

2. டேவிட் லிவிங்ஸ்டனுடைய சரித்திரத்திலிருந்து நீ கற்றுக் கொள்ளும் நீதி என்ன?

3. ஆப்ரிக்காக் கண்டத்தை அந்தகாரக்கண்டம் என்று ஏன் சொல்லுகிறார்கள்? அக்கண்டத்தைப் பூகோளப்படத்தில் காட்டு.

4. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

நிபுணர், வனாந்தரம், பிராயம், வராகன், நள்ளிரவு, ஆலை, கிரந்தங்கள்.

5. "அவர் கிரேக்க பாஷையிலும், லத்தீன் பாஷையிலும் அநேக கிரந்தங்களைப் படித்தார்."

(1) இவ்வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் சொல்லு.

(2) இதை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

(3) பயனிலை படித்தார்கள் என்று பன்மையாயிருக்கும்படி வாக்கியத்தை மாற்றி எழுது.

6. சம்பளம். இதின் அர்த்தம் என்ன? ளம்பசம் என்று மாற்றி எழுதினால் அர்த்தம் உண்டா? அர்த்தம் இல்லாவிட்டால் அது சொல்லாகாது. எழுத்துக்கள் ஒன்றுசேர்ந்து அர்த்தத்தைக்

கொடுத்தால் மாத்திரம் சொல்லாகும். அது ஒரே ஒரு எழுத்தாயிருந்தபோதிலும் அர்த்தத்தைக் கொடுத்தால் அதுவும் ஒரு சொல் தான். (உ—ம்.) ஈ, பூ, போ, வா. இவ்வாறு பொருளைத்தரும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஓரெழுத்தொருமொழி யென்று பெயர்.

உனக்குத் தெரிந்த ஒரெழுத்தொருமொழிகள் இரண்டு சொல்லு. இந்தப் பாடத்திலிருந்து ஈரெழுத்துக்களாலும், மூவெழுத்துக்களாலும் அமைந்த சொற்கள் இரண்டு சொல்லு. "போய்விடுவார்" இதில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன.

5. தபால்

துரைத்தனத்தார்	கார்டு	இன்ஷூர்
ஏற்பாடு	கவர்	மணி ஆர்டர்
பத்திரிகை	காலி	விகிதம்
சொற்ப	சமாசாரம்	கட்டணம்
வசூல்	பார்சல்	தேடும்
உறை	பத்திரமாய்	திரவியம்
திறப்பாய்	ரிஜிஸ்தர்	ஸேவிங்ஸ் பாங்கி
மிகுதி	நோட்டு	வட்டி

குடிகளுக்கு துரைத்தனத்தார் செய்துவரும் நன்மைகளில் தபால் மிகப் பிரயோஜனமான ஒரு ஏற்பாடு. ஏனென்றால் கடிதங்கள், பத்திரிகைகள், புஸ்தகங்கள், சிறு சாமான் மூட்டைகள், நகைகள், ரூபாய்கள் முதலியவைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு, இவ்வேற்பாடு இருப்பதால்தான், சொற்ப செலவில் அனுப்புகிறோம்.

கடிதம் முதலியவைகளைக் கொண்டுபோவதற்குச் செல்லும் செலவை சர்க்கார் நம்மிடமிருந்து தபால் முத்திரைகள் மூலமாக வசூல் செய்கிறார்கள். இதற்கென்று அவர்கள் பலவிதமான முத்திரைகள் அச்சடித்து தபால் ஆபீஸிலேயே விற்கிறார்கள். கால் அணு முதல் இருபத்

தைந்து ரூபாய்வரையில் முத்திரைகள் இருக்கின்றன. இவை தவிர, கடிதங்களை அடைத்து அனுப்பக்கூடிய முத்திரை பதித்த உறைகளும், திறப்பாய் அனுப்பக் கூடிய முத்திரை பதித்த கார்டுகளும் இருக்கின்றன. ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு நிறமாயிருக்கும். நாம் சாதாரணமாய் உபயோகப்படுத்தும் முத்திரைகள் கால் அணு, அரை அணு, முக்கால் அணு, ஒரு அணு, ஒன்றே கால் அணு, ஒன்றரை அணு, இரண்டணு, இரண்டரை அணு, மூன்றணு, நாலணு, ஆறணு, அரை ரூபாய், முக்கால் ரூபாய், ஒரு ரூபாய் விலையுள்ளவைகள். முக்கால் அணு கார்டும், ஒரு அணு கவரும் மிகுதியாக உபயோகப் படுகின்றன.

தபால் கார்டுகள் இரண்டு வகைப்படும். ஒன்று தனிக்கார்டு, மற்றொன்று பதில் எழுதுவதற்குரிய இரட்டைக்கார்டு; இந்தக் கார்டுகளில் ஒரு பக்கத்தின் வலது மூலையில் முத்திரை பதித்திருக்கும். இந்தப் பக்கத்தில் தான் மேல்விலாசம் எழுதவேண்டும். முத்திரையில்லாத பக்கத்திலும், முத்திரையிருக்கும் பக்கத்தின் இடது புறத்திலுள்ள காலியிடத்திலும், சமாசாரங்கள் எழுதலாம். நாமே கார்டுகள் செய்துகொண்டால் மேல் விலாசம் எழுதவேண்டிய பக்கத்தின் வலது மூலையில் தனியாக முத்திரை வாங்கி ஒட்டவேண்டும். கார்டுக்கு முத்திரை ஒட்டாமல் தபால் பெட்டியில் போட்டால் அதைத் தபால் அதிகாரிகள் கிழித்து எறிந்துவிடுவார்கள். கடிதத்துக்கு முத்திரை ஒட்டாவிட்டால் அதைப் பெற்றுக்கொள்பவரிடத்திலிருந்து ஒட்டவேண்டிய முத்திரையின் கிரயத்துக்கு இரட்டிப்பான தொகை வசூல் செய்துகொள்ளுவார்கள்.

கார்டாவது, கடிதமாவது, பார்சலாவது, பத்திரமாய்ப் போய்ச் சேரவேண்டுமென்று விரும்பினுல் அதை

ரிஜிஸ்தர் செய்யவேண்டும். அதற்காக மேலே மூன்றணு கட்டவேண்டும். பெற்றுக்கொள்பவருடைய கையெழுத்து நமக்கு அவசியமானுல் இன்னும் ஒரு அணு கூடக் கொடுக்கவேண்டும்.

நகை, நோட்டு, பணம் முதலிய விலையுயர்ந்த பொருள்களை இன்ஷூர் செய்தனுப்பவேண்டும். அதற்கு நூறு ரூபாய்க்கு மூன்றணுவும், 150 ரூபாய்க்கு நாலணுவும், 200 ரூபாய்க்கு ஐந்தணுவும், 200 ரூபாய்க்குமேல் 1,000 ரூபாய்வரை ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இரண்டணு வீதமும், 1,000 ரூபாய்க்குமேல் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ஒரு அணு வீதமும் மேலே செலுத்தவேண்டும். பணத்தை மணி ஆர்டர் மூலமாகவும் அனுப்பலாம். அதற்குக் கட்டவேண்டிய தபாற்கூலி பத்து ரூபாய்வரை இரண்டணு, பத்து முதல் இருபத்தைந்து ரூபாய் வரை நாலணு. இதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் இதே விகிதப்படி கட்டணம் செலுத்தவேண்டும்.

நாம் தேடும் திரவியத்தைக் காப்பாற்றி வைத்துக் கொள்வதற்கும் தபால் ஆபீஸில் ஒரு நல்ல ஏற்பாடு இருக்கிறது. அதற்கு ஸேவிங்ஸ் பாங்கியென்று பெயர். அதில் கால் ரூபாய் முதல், வருஷத்தில் 750 ரூபாய்க்கு மேற்படாமல், 5,000 ரூபாய் வரையில் போட்டு வைக்கலாம். அதற்கு சர்க்கார் சொற்பமான வட்டியும் கொடுக்கிறுர்கள்.

அப்பியாசம்

1. தபால் என்றுல் என்ன? அதனுல் ஜனங்களுக்கு என்ன பிரயோஜனம்?

2. அதற்குச் செல்லும் செலவை சர்க்கார் எப்படி வசூல் செய்கிறுர்கள்?

3. கடிதங்களை ரிஜிஸ்தர் செய்து அனுப்புவதினுல் என்ன நன்மை? அதற்காகக் கட்டவேண்டிய கட்டணம் எவ்வளவு?

4. எவற்றை இன்ஷூர் செய்தனுப்பவேண்டும்? அப்படிச் செய்வதால் என்ன நன்மை?

5. மணி ஆர்டர் என்ருல் என்ன? அதற்கேற்பட்ட தபால் கூலி எவ்வளவு?

6. ஸேவிங்ஸ் பாங்கி என்ருல் என்ன? அதில் வருஷத்தில் எவ்வளவு பணம் போடலாம்?

7. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

துரைத்தனத்தார், உறைகள், காலி, கட்டணம்.

8. கீழ்வரும் சொற்களைத் தொழிற்பெயராக்கு:—

அனுப்பு, எழுது, ஒட்டு, கிழித்தான், விரும்பினுன், கட்டினுன்.

9. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் எழுது:—

நகை, கால், குடி.

10. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் எழுது:—

சொற்பம், செலவு, திறப்பு, நல்ல.

11. கிழி, கிளி—இவ்விரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

12. கடிதம் எழுதி; கடிதம் எழுதினுன்.

கடிதம் எழுத; கடிதம் எழுதமாட்டான்.

கடிதம் அனுப்ப; கடிதம் அனுப்புகிறேன்.

இவற்றில் சொல் தொடர்கள் எவை? வாக்கியங்கள் எவை?

6. ஜான் ஸிம்க்கின்

கப்பல் ஓட்டி	தைத்தது	அடே
சம்பாதனை	உறுப்பினன்	இளைத்து
பாவனை	யோக்கியம்	வெளுத்து
பரிதாபம்	மனைவி	பூரிப்பு
நிரம்ப	அடிபிடி	சட்டைப்பை
மயக்கம்	ஏளனம்	நண்பன்

ஜான் ஸிம்க்கின் என்பவன் ஒரு கப்பல் ஓட்டி. அவனுடைய தோழர் யாவரும் குடிகாரர். ஸிம்க்கினும்

அவர்களோடு சேர்ந்து குடிக்கக் கற்றுக்கொண்டான். வரவரப் பெருங் குடிகாரனுகித் தன் சம்பாதனை முழுவதையும் குடியிலேயே செலவு செய்தான். நல்ல சாப்பாடு கிடையாது; நல்ல வஸ்திரங் கிடையாது. அவனுடைய வீட்டையும், அவனுடைய நடை உடை பாவனைகளையும் பார்த்தால் மிகப் பரிதாபமாயிருக்கும்.

ஒருநாள், அவன் தன் தோழரோடு நிரம்பக் குடித்துவிட்டுத் தெருவழியே போனுன். அங்கே ஒரு கட்டடத்தில் மதுவிலக்குச் சங்கக் கூட்டம் ஒன்று நடந்தது. குடி மயக்கத்தோடு அந்தக் கூட்டத்தில் போய் உட்கார்ந்தான். அங்கே குடியினுலுண்டாகுந் தீமைகளைப்பற்றி ஒரு பிரசங்கம் நடந்தது. அந்தப் பிரசங்கம் இவன் மனதில் நன்ருய்த் தைத்தது. பிரசங்கம் முடிந்தவுடன், மதுவிலக்குச் சங்கத்தில் தன்னையும் ஒரு உறுப்பினனுகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அதில் சேர்ந்துகொண்டான். அதுமுதல் குடியை விட்டுவிட்டான். யோக்கியமாய் ஜீவிக்க ஆரம்பித்தான். தன் மனைவி மக்களை அன்புடன் ஆதரித்தான். வீட்டில் அடி பிடி சண்டைகள் நீங்கி சமாதானமும் சந்தோஷமும் குடிகொண்டன. சாப்பாட்டுக்கும் வஸ்திரத்துக்கும் யாதொரு குறைவுமில்லை. சம்பளத்தில் கொஞ்சம் மீதி பிடித்து ஸேவிங்ஸ் பாங்கிலும் போட ஆரம்பித்தான். அவனுடைய பழைய குடிகாரத்தோழர் அவனை எவ்வளவோ ஏளனமாய்ப் பேசியும் அவன் மதுவிலக்குச் சங்கத்தை விடவில்லை.

ஒருநாள் ஸிம்க்கின் தெருவிற் போய்க்கொண்டிருக்கும்பொழுது பழைய சிநேகரிலொருவன், 'அடே, ஸிம்க்கின், சாராயத்தை விட்டுவிட்டதால் உன் உடம்பு மிகவும் இளைத்துப்போயிற்று; முகமெல்லாம் வெளுத்துப்

போயிருக்கிருயே; இதுதானு லாபம்?' என்று பரிகாசம் பண்ணினுன். ஸிம்க்கின், 'ஆம், மெய்தான் வெளுத்துத்தானிருக்கிறேன், என் சட்டைப்பைகூட அப்படித்தான் வெளுத்திருக்கிறது. இதோ பார், மதுவிலக்குச் சங்கத்தில் சேர்ந்ததால் ஸேவிங்ஸ் பாங்கில் போடப் போகிறேன்' என்று பூரிப்புடன் சொல்லிக்கொண்டு, தன் சட்டைப் பையிலிருந்த வெள்ளி ரூபாய்களை எடுத்துக் காட்டினுன். குடிகார நண்பன் வெட்கப்பட்டு, அது முதல் பரிகாசம் பண்ணுவதை விட்டுவிட்டான்.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து சுருக்கமாகச் சொல்லு.

2. ஜான் ஸிம்க்கின் எப்படி குடியை விட்டான்? குடியைவிட்ட பின் அவனுடைய வாழ்க்கை எப்படி யிருந்தது?

3. சுத்தம் > < அசுத்தம். இம்மாதிரி கீழே வரும் பதங்களுக்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:—

யோக்கியன், நியாயம், நீதி, சத்தியம், சுசி, சாத்தியம்.

4. அறுவகைப் பெயர்களில் இவை ஒவ்வொன்றும் எதைச் சேர்ந்ததென்று ஒரு அட்டவணையில் காட்டு:—

ஸிம்க்கின், கப்பல், சம்பாதனை, பிரசங்கம், வீடு, கட்டடம், முகம், சட்டைப்பை, தீமை, மயக்கம், நாள், ஞாயிறு.

5. வஸ்திரம், நண்பன், பரிகாசம். இவற்றிற்கு இப்பாடத்தில் வந்திருக்கும் இதே பொருளுள்ள வேறு வார்த்தைகளைச் சொல்லு.

6. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு:—

அடி, பிடி, நடை, உடை, மது.

7. கத்தரிக்காய்

துரைமகன்	பேர் சொல்லி	நாற்று
சீமை	பண்டிதர்	பிடுங்கி
திருவாளர்	துலுங்க	பாத்தி
சம்பாஷித்து	பலவாறாக	பாய்ச்சுவார்கள்
பங்களா	சமையற்காரன்	சாணி
மெத்தை	சொத்தை	ஆட்டுப்புழுக்கை
சுமந்து	துணைதுணங்கள்	துண்டு
வித்துவான்	சொல்லை	முள்ளுக்கத்தரி

கத்ரி என்று ஒரு துரைமகன் இருந்தார். அவர் புதி தாக சீமையிலிருந்து வந்தவர். அவருக்குத் தமிழ்ப் பாஷை தெரியாது. திருவாளர் முத்துக்குமார முதலியார் என்னும் சிறந்த வித்துவான் அவருக்குச் சிலகாலம் தமிழ் கற்றுக்கொடுத்து வந்தார்.

ஒருநாள் இருவரும் பங்களா மெத்தையில் சம்பா ஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தெரு வழியே ஒருவன் கத்தரிக்காய்க் கூடையைத் தலையில் சுமந்துகொண்டு "கத்தரிக்காய், கத்தரிக்காய்" என்று கூவிக்கொண்டு போனான். அதைக்கேட்ட கத்ரி துரை வித்துவானைப் பார்த்து, 'பண்டிதரே அதென்ன? தெரு வில் யாரோ ஒருவன் என்னைப் பேர்சொல்லிக் கூப்பிடு கிறதுபோல் இருக்கிறதே' என்றார். பண்டிதர் துரை யைப் பார்த்து, 'துரைகளே, தங்களை ஒருவரும் கூப்பிட வில்லை. தெருவில் ஒருவன் கத்தரிக்காய் விற்றுக்கொண்டு போகிறான். கத்தரி என்பது ஒரு செடி. அதன் காய்க் குக் கத்தரிக்காய் என்று பெயர். அதைச் சமைத்துச் சாப்பிட்டால் வெகு ருசியாய் இருக்கும். காய்களில் மிகச் சிறந்தது' என்று பலவாறாக அதைப்பற்றிப் புகழ்ந்துபேசி, கடைசியாக, இந்தப் பெயரைத் தாங்கள்



மறக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன் என்று சொன்ஞர். உடனே துரை அஃஹஃஹா என்று குலுங்கச் சிரித்தார். கத்தரிக்காய் சாப்பிடவேண்டும் என்கிற ஆசையும் கத்ரி துரைக்கு அதிகமாய் உண்டாயிற்று.

பின்பு சமையற்காரனைக் கூப்பிட்டு அன்று கத்தரிக்காய் சமையல் செய்யும்படி சொன்ஞர். சமையற்காரனும் உடனே கத்தரிக்காய்க்காரனைக் கூப்பிட்டு, சொத்தை யில்லாத நல்ல பிஞ்சுக்கத்தரிக்காய்கள் சில

வாங்கி நாவுக்கு வெகு உருசியாய் இருக்கும்படி சமைத்து வைத்தான். துரை சாப்பிட்டபின் கத்தரிக்காய் மிக்க உருசியாய் இருந்தது என்று சொல்லி சமையற்காரனை மெச்சிக்கொண்டார்.

அடுத்தநாள் முத்துக்குமார முதலியார் வழக்கம் போல தமிழ் கற்பிக்கும்படி பங்களாவுக்கு வந்தார். அவர் வந்தவுடன் கத்ரி துரை கத்தரிக்காயின் ருசியைப் பற்றி வெகு மேன்மையாகப் பேசினர். பின்பு கத்தரிக் காயின் குணுகுணங்களைப்பற்றியும், கத்தரிச்செடி பயி ராகும் விதத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும் பினர். முதலியார் துரையை ஒரு கத்தரித்தோட்டத் துக்குக் கூட்டிக்கொண்டுபோய் கத்தரியைப்பற்றி அநேக விஷயங்களை அவருக்குப் போதித்தார். அவைகளில் முக்கியமானவை எவையெனில்:

1. கத்தரிச்செடிகளைத் தோட்டங்களிலும், வீட்டுக் கொல்லைகளிலும் பயிரிடுவார்கள்.

2. கத்தரி விதைகளை முதலாவது ஓர் இடத்தில் விதைத்து, நாற்றுகள் உண்டாக்கி, சில இலைகள் விட்ட பின் அவைகளைப் பிடுங்கித் தூரம் தூரமாகப் பாத்தி களில் நட்டுத் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

3. அவைகள் செழிப்பாய் வளர்ந்து பலன்கொடுப் பதற்காகச் சாணி, சாம்பல், ஆட்டுப்புழுக்கை முதலிய எருப்போடுவார்கள்.

4. கத்தரிச்செடிகளை ஒவ்வொரு வருஷமும் புதிதாய் நட்டுக்கொண்டிருக்கவேண்டும். ஒரு வருஷத்திற்குமேல் அது பலன் கொடுக்கமாட்டாது.

5. கத்தரிக்காய்களில் அநேக விதங்கள் உண்டு. சில நீளமானவை, சில குட்டையானவை, சில முட்டை வடிவ மாய் இருக்கும், சில குண்டாயிருக்கும். நிறத்திலும்

பல விதங்கள் உண்டு. சில சிவப்பு, சில வெளுப்பு, சில பச்சை, இன்னும் சிலவற்றில் இரண்டு மூன்று நிறங்கள் கலந்து இருக்கும். சில கத்தரிக்காய்களின்மேல் முட்கள் இருக்கும். அவற்றிற்கு முள்ளுக் கத்தரிக்காய்கள் என்று பெயர். கத்தரிப்பழம் மஞ்சள் நிறமாயிருக்கும். அதற்குள் இருக்கும் விதைகள் வெண்மையாய் இருக்கும்.

6. கத்தரிக்காயை அநேகவிதமாகச் சமைத்துச் சாப்பிடலாம். பணக்காரர், தரித்திரர், பெரியவர், சிறியவர் யாவரும் சாப்பிடுவார்கள். வியாதியஸ்தர்கள்கூடச் சாப்பிடலாம்.

7. அநேகர் கத்தரிக்காய்களை வற்றலாக்கிப் பத்திரமாய் வைத்துக்கொண்டு, வருஷம் முழுவதும் உபயோகப்படுத்திக்கொள்வார்கள்.

அப்பியாசம்

1. இப்பாடத்தில் கத்தரிச்செடி பயிராகும் விதத்தைப்பற்றி சொல்லியிருக்கும் பிந்தின பாகத்தை மௌனமாகப் படித்து, சுருக்கமாகச் சொல்லு.

2. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு:—

கத்தரி, மெத்தை, புழுக்கை.

3. **துரை, துறை.** இவ்விரு சொற்களுக்கும் வித்தியாசம் என்ன?

4. திருவாளர், குணுகுணங்கள்—இவற்றின் அர்த்தம் என்ன? ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் உபயோகப்படுத்து.

5. சமையற்காரன் வந்தான்.

மாடு வந்தது.

இந்த வாக்கியங்களில் ஒன்றின் பயனிலையை இன்னொன்றுக்கு மாற்றிக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் சமையற்காரன், கத்தரிக்காய் என்னும் இரண்டு பெயர்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்

தவை. தமிழ்ப் பாஷையில் மனுஷரும், தேவரும், நரக வாசிகளும் உயர்ந்த ஜாதி அல்லது உயர்திணை எனப்படுவர். (திணை = ஜாதி). மற்றெல்லா வஸ்துக்களும் அஃறிணையாம். அதாவது, ஜாதியில்லா தவை. இங்கிலீஷ் பாஷையில் இந்த வித்தியாசம் கிடையாது.

பொருட்பெயர் தவிர மற்ற இடப்பெயர், காலப்பெயர், சினைப் பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் அனைத்தும் அஃறிணையே. பொருட்பெயரில் சில உயர்திணை, சில அஃறிணை.

(உதாரணம்.) தகப்பன் வந்தான்
இந்திரன் வந்தான்
எமன் வந்தான்
பசு வந்தது
வீடு எழும்பினது
சித்திரை பிறந்தது
கை உயர்ந்தது
சுகம் வந்தது
வருதல் நின்றுபோயிற்று.

உயர்திணைப் பெயர்கள் ஆறும், அஃறிணைப் பெயர்கள் பத்தும் சொல்லு.

6. "அஃஹஃஹா என்று குலுங்கச் சிரித்தார்." இதிலிருக்கும் வடமொழி எழுத்துக்கள் எவை? ஃ இது என்ன எழுத்து? இதற்கு ஆய்த எழுத்து என்று ஏன் பெயர்?

[ஆதியில் இவ்வெழுத்து (கூஃ) சூலாயுத வடிவமாய் எழுதப் பட்டதால் இதற்கு ஆய்தம் என்று பெயர். இதற்கு அஃகேனம், தனிநிலை, முப்புள்ளி என்றும் பெயர்.]

8. சிறந்த தருமம்

செல்வன்	பொருட்டு	பாதாளம்
குமாரர்	துதித்து	அதோகதி
அந்தியகாலம்	காப்பாற்றி	பள்ளத்தாக்கு
பிரித்து	இரக்ககுணம்	விசாலமான
அன்னியன்	பிராணசத்துரு	சபிக்கிறவர்
பணப்பை	செங்குத்தான	நிந்திக்கிறவர்
பத்திரமாய்	கற்பாறை	ஆசீர்வதி
ரசீது	அயர்ந்த	இரக்ஷகர்
அபகரித்து	அபாயகரம்	பிரகாரம்

ஒரு செல்வனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். அவன் தன் அந்திய காலத்தில் தன் ஆஸ்திகளில் விலையுயர்ந்த ஒரு ஆபரணத்தை எடுத்து வைத்துக் கொண்டு, மீதியைத் தன் பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்தான். பின்பு தன் மூன்று புத்திரரையுங் கூப்பிட்டு, 'மூன்று மாதங்களுக்குள் உங்களில் எவன் மேலான ஒரு சிறந்த தருமத்தைச் செய்வானோ அவனுக்கு இந்த ஆபரணத்தைக் கொடுப்பேன்' என்று சொன்னான்.

சில நாட்களுக்குப்பின் மூத்தவன் வந்து, 'ஐயா, ஒரு அன்னியன் என்னிடத்தில் ஒரு பெரிய பணப்பையைக் கொண்டுவந்து கொடுத்துப் பத்திரமாய் வைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். அவன் பணத்துக்காக என்னிடத்தில் யாதொரு ரசீதும் பெற்றுக் கொள்ளவில்லை. நான் அந்தப் பணம் முழுவதையும் அபகரித்துக்கொண்டிருக்கலாம். ஆகிலும் நான் அப்படிச் செய்யாமல் அந்த மனிதன் திரும்பிவந்து கேட்டவுடனே பணத்தைக் கொடுத்துவிட்டேன். அவன் நன்றியறிதலுடன் இனமாக எனக்குக் கொடுக்கவந்த பணத்

தையும் வேண்டாமென்று சொல்லிவிட்டேன்' என்றான். அப்பொழுது அவன் தந்தை, 'நீ செய்தது நியாயம்' என்றார்.

இரண்டாவது மகன், 'நான் குளக்கரையில் உலாவிக் கொண்டிருக்கும்போது ஒரு குழந்தை தவறிக் குளத்தில் விழுந்துவிட்டது. உடனே நான் என் உயிரையும் ஒரு பொருட்டென்று எண்ணாமல், குளத்தில் குதித்து, தண்ணீரில் நீந்தி, அந்தப் பிள்ளையின் உயிரைக் காப்பாற்றி, அதன் பெற்றோரிடத்தில் ஒப்புவித்தேன். இது எவ்வளவு சிறந்த தருமம்' என்றான். அதற்குத் தகப்பனார், 'மகனே, இது மனிதன் ஒவ்வொருவனுக்கும் சாதாரணமாய் இருக்கவேண்டிய இரக்க குணம்' என்றார்.

மூன்றாவது மகன், 'ஐயா, ஒருநாள் இரவில் என் பிராணசத்துரு ஒரு செங்குத்தான கற்பாறையோரத்தில் அயர்ந்த நித்திரை செய்துகொண்டிருந்தான். அந்த இடம் மகா அபாயகரமான இடம். அவன் விழிக்கும்பொழுது சற்று அசைவானானால் பாதாளத்தில் விழுந்து அதோகதியாய்ப் போய்விடும்படியான பரிதபிக்கப்படத்தக்க நிலைமையில் இருந்தான். அச்சமயத்தில் நான், அவன் பள்ளத்தாக்கில் விழுந்துவிடாதபடி தகுந்த ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டு, அவனை மெதுவாய்த் தட்டி எழுப்பி, நல்ல விசாலமான இடத்தில் படுக்கவைத்தேன்' என்றான். உடனே தகப்பனார், 'என் அருமைக் குமாரனே,' 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்' என்று உலக இரக்ஷகராகிய இயேசுகிறிஸ்து போதித்திருக்கிறபிரகாரம் இதுவே சிறந்த தருமம். ஆகையால், இந்த விலை

யுயர்ந்த ஆபரணம் உன்னுடையது' என்று சொல்லி அவன் கையில் ஆபரணத்தைக் கொடுத்துவிட்டார்.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து அம்மூன்று மக்களுடைய செய்கைகளில் எது நியாயம் என்றும், எது இரக்க குணம் என்றும், எது சிறந்த தருமம் என்றும் சொல்லு.

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:—

அந்தியகாலம், அபாயகரம், அதோகதி, பிராண சத்துரு, பொருட்டு.

3. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தை வைத்து வாசி:—

உங்கள் சத்துருக்களைச் ——, உங்களைச் சபிக்கிறவர்களை ——, உங்களைப் —— நன்மை செய்யுங்கள், உங்களை —— வும், —— வும் ஜெபம் பண்ணுங்கள்.

4. மகன், மகள், மக்கள், மாடு, மாடுகள். இவை ஒவ்வொன்றையும் எழுவாயாக வைத்து, தனித்தனியே வாக்கியங்கள் அமைத்துச் சொல்லு.

5. இந்தப் பயனிலைகளை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளக் கூடுமா?

மாற்றிக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் மகன் என்பது ஒரு ஆண் மகனின் பெயர். மகள் என்பது ஒரு பெண் மகளின் பெயர். மக்கள் என்பது ஒன்றுக்கு அதிகமானவர்களின் பெயர். இவை மூன்றும் உயர்திணைப் பெயர்கள். மாடு என்பது ஒன்றைக் குறிக்கும் ஒரு அஃறிணைப் பெயர். மாடுகள் என்பது ஒன்றுக்கு அதிகமானவைகளைக் குறிக்கும் அஃறிணைப் பெயர். ஆகையால் அவைகளுக்கு முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்று பெயர். (பால் = வகுப்பு.)

6. பின்வரும் சொற்களின் பாலைக் கூறு:—

செல்வன், குமாரர்கள், இருந்தார்கள், எவன், ஐயா, அவை, பணம், இது, அரசி, தாய், போனவை, ஓடினாள்.

9. ஆல்பிரேட் அரசனுடைய அரைரோட்டி

ஆண்டுகள்	பரதேசி	திருப்தி
குணசீலன்	அழைத்து	அபரிமிதம்
கானகம்	பிச்சை	இறைக்க
தங்கும்படி	மனதுருகி	ஊறும்
சிப்பந்திகள்	உள்ளங்கனிந்து	கேணி
வேட்டை	ஐயாயிரம்	ஈய
அரசி	போஷித்த	பெருகும்

ஆல்பிரெட் அரசன் அநேக ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலதேசத்தை யரசாண்ட ஒரு தயாள குணசீலன்.

ஒருதடவை அவர் தன் சத்துருக்களுக்குப் பயந்து, ஒரு கானகம் சென்று அங்கே தங்கும்படி நேரிட்டது. அது மழைகாலம். ஒருநாள் சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லாத தால் தன்னுடன்கூட இருந்த சிப்பந்திகளனைவரையும் காட்டில் போய் வேட்டையாடி உணவு தேடி வரும்படி யனுப்பிவிட்டார்.

அரசனும் அரசியும் மாத்திரம் தனிமையாய் இருந் தார்கள். அரசன் ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண் டிருந்தார். அரசி ஏதோ வீட்டுவேலை செய்துகொண் டிருந்தாள். அச்சமயத்தில் ஒரு ஏழைப் பரதேசி அதிகப் பசியுடன் அரசனிடத்தில் வந்து பிச்சை கேட்டான். அரசன் அரசியை யழைத்து, உண்பதற்கு ஏதாவது ஆகாரம் இருந்தால் அந்த ஏழை மனிதனுக்குக் கொஞ்சம் கொடுக்கும்படி சொன்னார். அரசி, 'ஒரே ஒரு ரொட்டி மாத்திரம் கையிலிருக்கிறது. அது நமக்கே போதாது. வேட்டைக்குப் போன வேலைக்காரர் ஒன்றுங் கிடைக் காமல் திரும்பிவருவார்களானால், அவர்களுக்கும் ஆகா ரம் வேண்டுமே' என்று சொல்லி, அந்த ஒரு ரொட்டியை யும் எடுத்துவந்து அரசனிடத்தில்கொடுத்தாள். அரசன் அந்த ஏழையின்பேரில் மனதுருகி, ரொட்டியில் பாதியை யறுத்துச் சந்தோஷமாய் அவனுக்குக் கொடுத்துவிட்டு, உள்ளங்களித்து மனைவியைப் பார்த்து: 'ஐந்து அப்பங் களையும் இரண்டு மீன்களையுங் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்த கடவுள், தமக்குச் சித்தமானால் இந்த அரைரொட்டியைக் கொண்டு நம்மையும் நம்மு டைய வேலைக்காரரையும் திருப்தியாய்ப் போஷிப்பார்' என்று சொன்னார்.

சற்றுநேரத்துக்குள் வேட்டைக்குப்போன வேலைக் காரர் உணவுக்கு வேண்டிய அபரிமிதமான பொருள் களைக் கொண்டுவந்து சேர்த்தார்கள். "இறைக்க ஊறும்

மணற்கேணி, ஈயப்பெருகும் பெருஞ்செல்வம்" என்பது போல அதுமுதல் அக்காட்டிலிருந்த காலங்களிலெல்லாம் சாப்பாட்டு விஷயமாக அவர்களுக்கு எவ்விதமான கஷ்டமும் நேரிடவில்லை.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, சுருக்கமாகச் சொல்லு.

2. இப்பதங்களுக்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:—

கானகம், சிப்பந்திகள், பரதேசி, அபரிமிதமான, கேணி.

3. ஐந்து அப்பங்களைக்கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்தது யார்? எப்பொழுது?

மத்தேயு சுவிசேஷம் 14-ம் அதிகாரம், 15–21 வாக்கியங்களை வாசி.

4. இவற்றின் பாலைக் கூறு:—

அரசன், உணவு, இருக்கிறது, கொடுத்தாள், பொருள்கள்.

5. இவற்றிற்குப் பெண்பால் பெயர்கள் சொல்லு:—

சீலன், அரசன், வேலைக்காரன், மனிதன், அவன், புருஷன், தந்தை, தம்பி, அப்பா, அண்ணன், மாப்பிள்ளை.

10. சப்பாத்துக்கள்ளி

கள்ளி	உறைவிடம்	புகையிலை
நாகதாளி	விஷம் தீண்டி	தோட்டப்பயிர்
தானுக	வாதரோகம்	கோடை
கட்டாந்தரை	கால்நடைகள்	சேத்தை
வறண்ட	ஜுவாலை	கொளுத்தி
நெருக்கி	போசுக்கி	புதைத்து
நாசம்	புன்செய்	குழி
விஷஜெந்து	கரும்பு	சாந்து

சப்பாத்துக்கள்ளி யென்பது சப்பாத்து அல்லது பாதரட்சையைப்போன்ற தடிப்பான இலைகளையுடைய



முட்கள் அடர்ந்த ஒரு காட்டுச் செடி. அதற்கு நாக தாளிக்கள்ளியென்றும் பெயர். அது பல வருஷங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ளும் தன்மையுடைய கள்ளி இனத்தைச் சேர்ந்தது. ஆகை யால், அது எல்லா ஊர்களிலும், எக்காலத்திலும், எப் பேர்ப்பட்ட கட்டாந்தரையிலும், வறண்ட நிலத்திலும், அடர்ந்து படர்ந்து வளர்ந்து நிற்பதைப் பார்க்கலாம். சில கிராமங்களில் பயிரிடக்கூடிய நிலங்களிலும், மற்றும் சில ஊர்களில் ஜனங்கள் நடக்கும்படியான பாதைகளி லும் சப்பாத்துக்கள்ளி வளர்ந்து மிகக் கெடுதல் செய் கிறது. சில காடுகளில் மரம், புல், செடி, கொடி முதலி யவை வளராதபடி அவைகளை நெருக்கி நாசம் செய்கின் றது. சப்பாத்துக்கள்ளிக் காடுகள் பாம்புகளுக்கும் மற்ற விஷ ஜெந்துக்களுக்கும் உறைவிடமாயிருப்பதால், வருஷா வருஷம் கள்ளியடர்ந்த கிராமங்களில் வசிக்கும் பலர் விஷம் தீண்டி சாகிறார்கள்.

சப்பாத்துக்கள்ளியால் இவ்வளவு கெடுதல்கள் இருந்த போதிலும், அது மனிதருக்கு உபயோகமான ஒரு செடியாயுமிருக்கிறது. ஜெந்து விஷம், தாவர விஷம், வாத ரோகம் முதலிய வியாதிகளுக்கு இதை ஒரு சிறந்த ஔஷதமாக வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். பஞ்ச காலத்தில் கால்நடைகளுக்குத் தீனியாகவும் பயன்படு கிறது. பெரிய ஜுவாலையாக எரியும் நெருப்பில் காட்டி, முட்களைப் பொசுக்கிவிட்டு, பின்பு சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அவற்றுடன் கொஞ்சம் பருத்திக்கொட்டையும் சேர்த்து ஆடுமாடுகளுக்குப் போட்டால் அவைகளுக்கு அது நல்ல தீனியாகும்.

சில விடங்களில் கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய புன்செய் பயிர்களுக்கும், வாழை, கரும்பு, புகையிலை, மிளகாய் முதலிய தோட்டப் பயிர்களுக்கும் இதை எருவாக உபயோகிக்கிறார்கள். சப்பாத்துக்கள்ளிச் செடி களை யழுகவைத்து, அவற்றின் சாரத்தை மண்ணுடன் கலந்து உபயோகித்தால் நல்ல எருவாகும். முதல் மழை ஆரம்பித்தவுடன் ஒரு பெரிய பள்ளத்தில் சப்பாத்துக் கள்ளிகளை வெட்டி நிரப்பி, மண்ணைப்போட்டு மூடிவிட் டால் அவை அழுகி மறுவருஷத்துக்குள் நல்ல எருவாகி விடும். இல்லாவிடில் கோடைகாலத்தில் அவைகளை வெட்டி குவியல்களாகக் குவித்து, பக்கத்தில் கிடைக்கக் கூடிய செத்தைகளை அவற்றின்மேல் போட்டுக் கொளுத்தி விடலாம். பின்பு கள்ளியின் அடியிலுள்ள மண்ணை யாவது, சமீபத்திலிருக்கும் மண்ணையாவது வெட்டிக் குவியல்கள்மேல் போட்டுச் சில மாதங்கள் வைத்திருந் தால் அவை அழுகிப்போய்விடும். சுண்ணும்புச் சாந்து அரைக்கும் சக்கரமான குழிகளில் போட்டு, சாந்து அரைப்பதுபோல அரைத்துப் பின் எடுத்துக்கொண்டு

போய் பள்ளங்களில் புதைத்து மண்ணைப்போட்டு மூடி வைத்தாலும் சீக்கிரம் அழுகி நல்ல எருவாகும்.

சப்பாத்துக்கள்ளிக் கஷாயத்தைச் சுண்ணும்புத் தண்ணீரோடு சேர்த்து வெள்ளையடித்தால், சுண்ணும்பு சுவரில் கெட்டியாய்ப்பிடித்துக்கொள்ளும். சுவரில் சாய்ந்தால் உடுப்பிலும் உடம்பிலும் சுண்ணும்பு ஒட்டாது.

அப்பியாசம்

1. சப்பாத்துக்கள்ளிக்கு என் அந்தப் பெயர் வந்தது? அது எக்காலத்திலும் எல்லா இடங்களிலும் செழிப்பாய் வளர்வதற்குக் காரணம் என்ன?

2. அதின் உபயோகங்கள் எவை? அதினல் உண்டாகும் கெடுதல்கள் எவை?

3. பின்வரும் வாக்கியங்களைக் கவனி:—

(1) நீ சப்பாத்துக்கள்ளியைப் பார்த்திருக்கிருயா?
(2) அதற்குத் தண்ணீர் இறைப்பவர் எவர்?
(3) என் அதற்குச் சப்பாத்துக்கள்ளியென்று பெயர்?
(4) சப்பாத்துக்கள்ளியைப் பயிரிடுவாருமுண்டோ?
(5) அப்படிப் பயிரிடுகிறவர்கள் யார்?
(6) அவனே அதைச் செய்தானு?

இவ்வாறு வாக்கியங்களும் கேள்விகள் அல்லது விஞக்கள். கேள்வி கேட்க உபயோகப்படுத்தும் எழுத்துக்கள் ஆ, எ, ஏ, ஓ, யா என்பவை. ஆ, ஓ இரண்டும் சொல்லுக்கு இறுதியில் வரும். எ, யா இரண்டும் சொல்லுக்கு முதலில் வரும். ஏ சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும்.

4. ஒருமைப் பால்கள் எவை?

[ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமைப் பால்கள் (உ–ம்.) அவன், அவள், அது.]

5. பன்மைப் பால்கள் எவை?

[பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மைப்பால்கள் (உ–ம்.) அவர்கள், அவைகள்.]

6. இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:—

காடு, புன்செய், மிகுதி.

11. பட்டி

பெரும்பான்மை	தாசில்தார்	அபாரதம்
கெடுதி	அடையாளம்	நகல்
மோசம்	வித்தியாசம்	தாலுகா
இராஜாங்கத்தார்	விவரங்கள்	கமிஷன்
யதேச்சை	ரிஜிஸ்தர்	அடைக்கப்பட்ட
பட்டி	பதிவு	பகிரங்கமாக
பவுண்டு	ஒப்புவிப்பது	தொகை
ஆங்கில வார்த்தை	கழுதை	விற்பனை
பொறுப்பு	பன்றி	கஜானு

நமது தேசத்தில் பெரும்பான்மையோர் பயிர்த் தொழில் செய்து பிழைக்கிறவர்கள். அவர்களுக்கு இத் தொழிலில் முக்கியமாய் உதவிசெய்கின்றவை ஆடுமாடுகள். ஆனால் ஆடுமாடுகளால் குடித்தனக்காரருக்குச் சில கெடுதிகளும் உண்டு. குடித்தனக்காரர் சற்று கவனமற்றவர்களாயிருந்தால், ஆடுமாடுகள் பயிர்களை மேய்ந்து அழித்துவிடும். ஆகையால், பயிர்களுக்கு அவ்விதமான கெடுதல்கள் உண்டாகாமலும், ஆடுமாடுகளுக்கு மோசம் நேரிடாமலும் இருக்கும்படி இராஜாங்கத்தார் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதென்னவென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் யதேச்சையாய்த் திரிந்து, பயிர்களை அழிக்கும் ஆடுமாடு முதலிய மிருகங்களை அடைத்து வைப்பதற்கு ஒரு கட்டடம் கட்டி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பட்டி அல்லது பவுண்டு என்று பெயர். பவுண்டு என்பது ஆங்கில வார்த்தை.

ஒவ்வொரு கிராமப்பட்டியும் அந்தந்தக் கிராம அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் அதிகாரி தாசில்தார்.

பட்டியில் அடைக்கக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு மிருகத்தினுடைய இனம், நிறம், அடையாளம், ஆண் பெண் வித்தியாசம் முதலிய விவரங்களை அதற்கென்று வைத்திருக்கும் ரிஜிஸ்தரில் பதிவுசெய்து, ஓட்டிக் கொண்டு வந்தவனுடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டு, பட்டியதிகாரி அவனுக்கு ஒரு ரசீது கொடுப்பான். சொந்தக்காரனிடத்தில் மிருகத்தை ஒப்புவிக்கிற வரையில், அதற்குத் தீனிபோட்டுத் தண்ணீர் காட்டிப் பத்திரமாய்ப் பாதுகாத்து, சொந்தக்காரன் வந்து கேட்கும்போது அதை அவனிடம் ஒப்புவிப்பது கிராம அதிகாரியின் கடமை. பட்டியில் ஆடு, மாடு, கழுதை, குதிரை, பன்றி, யானை, ஒட்டகம் முதலிய எல்லா மிருகங்களையும் அடைக்கலாம்.

சொந்தக்காரன் வந்து மிருகத்தை விடும்படி கேட்டால், அதற்கென்று ஏற்பட்டிருக்கும் அபராதத்தையும், தீனிச்செலவையும் பெற்றுக்கொண்டு பட்டியதிகாரி மிருகத்தை அவன் கையில் ஒப்புவித்துவிடுவான். மிருகத்தைச் சொந்தக்காரன் பெற்றுக்கொண்டதற்காக ரிஜிஸ்தரில் அவனுடைய கையெழுத்தை வாங்கிக்கொண்டு, தான் பெற்றுக்கொண்ட பணத்துக்கு ரசீதும் கொடுத்துவிடுவான். மாதம் முடிந்தவுடன் பட்டியில் அடைக்கப்பட்ட மிருகங்களின் விவரம் அடங்கிய ரிஜிஸ்தரின் நகலையும், வசூலான தொகையையும் தாசில்தாருக்கு அனுப்பிவிடவேண்டும்.

பட்டியதிகாரி செய்யும் வேலைக்குச் சம்பளமாக வசூல்செய்யப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தை அவனுக்குத் தாலுகா ஆபீசிலிருந்து அனுப்பிவிடுவார்கள். அதற்குக் கமிஷன் என்று பெயர். ஒரு மாதத்தில் வசூலான அபராதத் தொகை ஒரு ரூபாய்க்கு மேற்படாமலிருக்குமானால் அந்த முழுத்தொகையையும் பட்டி யதி

காரிக்குக் கொடுத்துவிடுவார்கள். ஒரு ரூபாய்க்கு மேலும் இரண்டு ரூபாய்க்குள்ளும் வசூலானால் ஒரு ரூபாய்தான் கொடுக்கப்படும். இரண்டு ரூபாய்முதல் பத்து ரூபாய் வரையில் வசூலாகிற பணத்தில் பாதிகொடுக்கப்படும். பத்து ரூபாய்க்கு மேல் எவ்வளவு வசூலானாலும் ஐந்து ரூபாய்தான் கொடுக்கப்படும். எவ்விதத்திலும் பட்டி யதிகாரிக்கு ஒரு மாதத்தில் ஐந்து ரூபாய்க்கு மேல் கமிஷன் கொடுக்கப்படமாட்டாது.

பட்டியிலடைக்கப்பட்ட தேதி முதல் பதினைந்து நாட்களுக்குள்ளாகச் சொந்தக்காரன் மிருகத்தைத்தேடி வராவிட்டால், அதைப் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்து, பணத்தைக் கஜானாவில் கட்டிவிடுவார்கள்.

அப்பியாசம்

1. பட்டி என்றால் என்ன? அதனால் குடிகளுக்குப் பிரயோஜனம் என்ன?

2. பட்டி யதிகாரி எவர்? அவருக்கு ஏற்பட்ட சம்பளம் எவ்வளவு? அதை அவர் எவ்விதமாகப் பெற்றுக்கொள்ளுகிறார்?

3. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:—

யதேச்சையாய், நகல், கமிஷன், பகிரங்கமாக, கஜானா.

4. கீழுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலுமிருக்கும் எழுவாயைப் பன்மையாக்கி அவற்றைத் திருப்பி எழுது:—

(1) மாடு பட்டியில் அடைக்கப்பட்டிருந்தது.

(2) அவள் மாட்டைப் பட்டியில் அடைத்தாள்.

(3) அவன் மாட்டைத் திருப்பிக்கொண்டுவந்தான்.

5. இவ்வாக்கியங்களைக் கவனி:—

(1) நான் பட்டியில் அடைத்தேன்.

(2) நீ பட்டியில் அடைத்தாய்.

(3) அவன் பட்டியில் அடைத்தான்.

நான், நீ, அவன் என்னும் சொற்கள் குறிக்கிற மூன்று பொருள் களும் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பயனிலைகளை ஒன்றுக் கொன்று மாற்றிக்கொள்ளக்கூடாது.

நான் என்பது ஒருவன் தன்னை நான் என்று பேசும் இடத்தில் அதாவது **தன்மை** இடத்திலிருக்கிறது. **நீ** என்பது தன்மை இடத்துக்குமுன் நிலை கொண்ட இடத்தில், அதாவது **முன்னிலை** இடத்திலிருக்கிறது. **அவன்** என்று அழைக்கப்படுகிறவன், தன்மை முன்னிலை இரண்டும் அல்லாத மூன்ருவது இடத்துக்குச் சென்று அங்கிருப்பதால், அச்சொல் **படர்க்கை** இடத்தில் இருக்கிறது. (படர்க்கை = செல்லுதல்.)

பெயர்கள் இடவகையால் **தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர்** என்று மூன்று வகைப்படும்.

தன்மை ஒருமை	—நான், யான்.
தன்மைப் பன்மை	—நாம், நாங்கள், யாம், யாங்கள்.
முன்னிலை ஒருமை	—நீ
முன்னிலைப் பன்மை	—நீர், நீயிர், நீவிர், நீங்கள்.
படர்க்கை ஒருமை	—அவன், அவள், அது, மனிதன், மரம்.
படர்க்கைப் பன்மை	—அவர், அவர்கள், அவை, மனிதர், மரங்கள்.

12. காற்று

பருமன்	வாடை	குமிழி
அடிக்கிறது	சுழல்காற்று	தள்ளுகிறது
புழுக்கம்	வியாபித்து	நிமிஷங்கள்
உணர்ச்சி	கலைக்கியானி	எடை
ஒடுக்கம்	வெறுமை	வளராது
தளிர்	சந்தேகிக்கலாம்	பெய்யாது
விளைகின்றன	நுபிக்கலாம்	எரியாது
வீசுகிறது	அமிழ்த்தி	இலவசம்
கொண்டல்	முழுதும்	இறைவன்
தென்றல்	சாய்த்து	அடியார்

சிறுபிள்ளைகள் காற்று அடிக்கும் காலங்களில் காற்ருடி விட்டு விளையாடுவார்கள். ஆனல் காற்றை யாராவது கண்ணுல் பார்த்ததுண்டா? காற்றின் நிறம் என்ன?

அதன் உருவம் என்ன? அதன் உயரம் என்ன? அதன் பருமன் என்ன? என்று யாராவது சொல்லக்கூடுமோ? நாம் காற்றைக் கண்ணால் காணாவிட்டாலும், காற்று என்னும் ஒரு வஸ்து இருக்கிறதென்பதை அதன் செய்கைகளால் அறிந்துகொள்ளுகிறோம்.

காற்றடி பறக்கும்பொழுதும், மரத்தின் இலைகள் அசையும்பொழுதும், காற்று அடிக்கிறது என்று தெரிந்துகொள்ளுகிறோம். நமக்குப் புழுக்கம் உண்டாகும்பொழுது நாம் விசிறியால் வீசி நமது உடம்பில் காற்றுபடும்படி செய்து சுகம் உண்டாக்கிக்கொள்ளுகிறோம். காற்று அசையும்பொழுதுமாத்திரம் உணர்ச்சியினால் காற்று இருக்கிறதென்று தெரிந்துகொள்ளுகிறோம். காற்று அசையாமல் இருக்கும்பொழுது நமக்குத் தெரிகிறதில்லை. அப்பொழுதுதான் நாம் காற்றேயில்லை, ஓடுக்கமாயிருக்கிறது என்று சொல்லுகிறோம்.

மரக்கிளைகளின் உச்சியிலிருக்கும் மெல்லிய தளிர்கள் எப்பக்கமாய் வளைகின்றனவென்று சற்று கவனித்துப் பார்ப்போமானால், எந்தத் திசையிலிருந்து எந்தத் திசையாய்க் காற்று வீசுகிறதென்று நாம் தெரிந்துகொள்ளலாம். காற்று அடிக்கும் திசையைக்கொண்டு ஒவ்வொரு விதமான காற்றுக்கும் ஒவ்வொரு பேரிடப்பட்டிருக்கிறது. கீழ்காற்றுக்குக் கோண்டல் என்றும், தென்காற்றுக்குத் தேன்றல் என்றும், மேல்காற்றுக்குக் கோடை என்றும், வடகாற்றுக்கு வாடை என்றும், சுற்றிச் சுற்றி அடிக்கும் காற்றுக்குச் சுழல்காற்று என்றும் பெயர்.

காற்று வீசும்பொழுது மாத்திரம் நாம் காற்று இருக்கிறதாக உணர்ந்துகொள்ளுகிறோம். ஆனால் மற்ற நேரங்களில் காற்று இருக்கிறதா? இல்லையா? இருந்தால் எங்கே யிருக்கிறது என்று பார்ப்போம். பூமியைச்

சுற்றிலும் அநேக மைல்கள் உயரம் காற்று வியாபித்திருப்பதாகக் கலைக்கியானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வுலகத்திலே காற்று இல்லாத இடம் இல்லை. வெறுமையான ஒரு குடத்தை நாம் பார்க்கும்போது அதற்குள் காற்று ஏதேனும் இருக்குமோவென்று சந்தேகிக்கலாம். ஆனால் அந்தக் குடத்துக்குள்கூட காற்று இருப்பது உண்மை. அதை எப்படி ரூபிக்கலாம்? குடத்தைக்கொண்டுபோய்க் குளத்தில் தலைகீழாய்த் தண்ணீருக்குள் அமிழ்த்தினால் தண்ணீர் அதற்குள் முழுதும் ஏறுகிறதில்லை. ஏனென்றால் குடத்துக்குள் காற்று இருப்பதால் தண்ணீர் உட்செல்வதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால் குடத்தைச் சற்று சாய்த்துப் பிடித்தால் ஜலத்திலிருந்து குமிழிகள் புறப்படும். குடத்துக்குள்ளும் ஜலம் போகும். குடத்தைச் சாய்க்கும்போது, குடத்திற்குள்ளிருக்கும் காற்று முன்போல் அவ்வளவு பலமாய் ஜலத்தை எதிர்க்கமுடியாது. அதனால் ஜலம் குடத்திற்குள்ளே பாய்ந்து, அங்குள்ள காற்றை வெளியில் தள்ளுகிறது. அதனால் குமிழிகள் உண்டாகின்றன.

காற்றுக்கு நிறமும் இல்லை, ருசியும் இல்லை, மணமும் இல்லை. எனினும் அதற்குக் கனம் உண்டு. ரப்பர்ப் பைகளில் காற்றை அடைத்து, நிறுத்துப்பார்த்து, அதற்குள் இருக்கும் காற்று எவ்வளவு எடையுள்ளது என்று தெரிந்துகொள்ளலாம்.

நாம் உயிர்வாழ்வதற்கு காற்று, நீர், உணவு இம் மூன்றும் அவசியம் வேண்டும். இம்மூன்றில் காற்று மிகவும் விசேஷமானது. நீரும் உணவும் இல்லாமல் ஒருவன் சில நாட்கள் உயிரோடிருக்கக்கூடும், காற்றில்லாமலோ சில நிமிஷங்கள்கூட உயிரோடிருக்கமுடியாது. காற்று இல்லாவிட்டால் செடிகள் வளரா; மழை பெய்யாது; நெருப்பு எரியாது; சூரியவெளிச்சம் பிரகாசிக்

காது; ஒருவர் பேசும் சத்தம் ஒருவருக்குக் கேட்காது. இவ்வித ஆச்சரிய சக்தியுடைய காற்றைக் கடவுள் நம் மெல்லாருக்கும் இலவசமாய்க்கொடுத்திருக்கிறார். 'இறைவனே! உமது செயல்கள் எவ்வளவு மிகுதியாயிருக்கின்றன! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர். பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது' என்று அடியார் ஒருவர் சொல்லுகிறார்.

அப்பியாசம்

1. 'காற்று இல்லாத இடம் இல்லை.' இதை எப்படி ரூபிப்பாய்?

2. காற்றுக்குக் கனம் இருப்பதை எப்படி கண்டுபிடிப்பாய்?

3. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகள் வைத்து வாசி:— கீழ் காற்றுக்குக்———என்றும், தென் காற்றுக்குத்———என்றும், மேல் காற்றுக்குக்———என்றும், வட காற்றுக்கு———என்றும், சுற்றிச்சுற்றி அடிக்கிற காற்றுக்குச்———என்றும் பெயர்.

4. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

கலைக்கியானி, வியாபித்து, புழுக்கம்.

5. காற்று இல்லாவிட்டால் என்னென்ன கெடுதல்கள் உண்டாகும்?

6. காற்றாடி, காற்றாடியை, காற்றாடியால், காற்றாடிக்கு, காற்றாடியிலிருந்து, காற்றாடியினது, காற்றாடியின்கண், காற்றாடியே. இச்சொற்கள் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

(1) காற்றாடி ஆகாயத்தில் பறக்கிறது.
(2) காற்றாடியைக் கிழித்துவிட்டான்.
(3) காற்றாடியால் பிழைக்கிறான்.
(4) காற்றாடிக்கு வால் இல்லை.
(5) காற்றாடியிலிருந்து இரைச்சல் கேட்கிறது.
(6) காற்றாடியினது நூல் அறுந்துபோயிற்று.
(7) காற்றாடியின்கண் ஆசை வைத்தான்.
(8) காற்றாடியே, உயரப் பறந்து போ.

நாம் எடுத்துக்கொண்டது காற்றுடி என்னும் ஒரே பெயராயிருந்த போதிலும் இவ்வாக்கியங்கள் அர்த்தத்தில் ஒற்றுமையின்றி வேற்றுமை யடைந்திருப்பது, காற்றுடி என்னும் பெயரோடு சில உருவங்கள் அல்லது உருபுகளைச் சேர்த்ததால் என்று தெரிந்துகொள்ளுகிறோம். இந்த எட்டு வேற்றுமைகளில் முதல் வேற்றுமை தவிர மற்றெல்லா வேற்றுமைகளுக்கும் உருபுகள் இருக்கின்றன. அவை யாவன:—

இரண்டாம்	வேற்றுமை	உருபு	ஐ	காற்றுடியை
மூன்றும்	,,	,,	ஆல்	காற்றுடியால்
நான்காம்	,,	,,	கு	காற்றுடிக்கு
ஐந்தாம்	,,	,,	இருந்து	காற்றுடியிலிருந்து
ஆறும்	,,	,,	அது	காற்றுடியினது
ஏழாம்	,,	,,	கண்	காற்றுடியின்கண்
எட்டாம்	,,	,,	ஏ	காற்றுடியே

எட்டாம் வேற்றுமைக்கு விளிவேற்றுமை என்றும் பெயர். (விளித்தல் = அழைத்தல்.)

7. தடித்த எழுத்திலுள்ள சொற்களின் வேற்றுமையைக் கூறு:—

(1) **காற்று** வீசுகிறது.

(2) **காற்றை** யாராவது பார்த்ததுண்டா?

(3) **காற்றுக்கு** கனம் உண்டு.

(4) **இறைவனே,** உமது செயல்கள் எவ்வளவு மிகுதியா யிருக்கின்றன.

(5) நாம் **விசிறியால்** வீசி காற்று வரும்படி செய்கிறோம்.

(6) கீழ் **திசையிலிருந்து** வரும் காற்றுக்குக் கொண்டல் என்று பெயர்.

(7) **காற்றினது** வேகம் மரக்கிளைகளின் அசைவினால் தெரியும்.

(8) **இவ்வுலகின்கண்** காற்று இல்லாத இடம் இல்லை.

13. பவளம்

உற்பத்தி	சிற்சில	மாணிக்கம்
பவளப்பூச்சி	சிறுசிறு	வைடூரியம்
ஏற்கனவே	அந்தசந்தம்	முத்து
மீசை	பூண்டுகள்	சிப்பி
பழமை	சிலுவை	தேனீ
மரத்து	வலை	விகாரரூபம்
விஸ்தாரமாய்	பளு	சவரம்
சொற்பமாய்	துணை	கோரோசனை
தீவு	நவரத்தினங்கள்	புனுகு
பேர்போன	கோமேதகம்	சவ்வாது
ஊடே	புட்பராகம்	அழல்
கவர்கவராய்	மரகதம்	எள்ளார்

நமது தேசத்துப் பெண்களிற் பலர் பவளத்தால் செய்யப்பட்ட பலவித ஆபரணங்களை அணிந்துகொள்ளுகிறார்கள். ஆனால், அதை ஆபரணமாக அணிந்து கொள்ளும் அநேகருக்கு அது எங்கிருந்து உற்பத்தியாகிறதென்று தெரியாது.

பவளமானது சமுத்திரத்தில் வசிக்கும் ஒருவிதப் பூச்சியிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. அந்தப் பூச்சிக்கு பவளப்பூச்சி என்று பெயர். அது ஏதாவது ஒரு கல்லையாவது, அல்லது ஏற்கனவே உண்டான பவளக் கொடியையாவது பற்றிக்கொண்டிருக்கும். அதற்கு மிருதுவான தேகமும் எட்டு மீசைகளும் உண்டு. அந்த மீசைகளை ஆட்டுவதினால் அது தன் ஆகாரத்தைக் கண்டு பிடிக்கும். சமுத்திரத்தில் செத்து அழுகிக்கிடக்கும் வஸ்துக்களையே அது தின்று ஜீவிக்கும். பவளப் பூச்சியிலிருந்து ஒருவிதச் சுண்ணும்பு வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கும். அந்தச் சுண்ணும்பினால் அது தன் வீட்டின்

சுவரைக் கட்டிக்கொள்ளும். சுவர் வளர வளர பவளப் பூச்சியின் பழமையான பாகம் உயிரற்று மாத்துப்போய்க்



கல்லைப்போல் கட்டியாகிவிடும். இவ்விதமாகப் பூச்சியின் அவயவத்திலிருந்து உலர்ந்துபோகும் பாகத்துக்குத்தான் பவளம் என்று பெயர்.

பவளங்களில் வெள்ளைப் பவளங்கள் விஸ்தாரமாய்க் கிடைக்கின்றன. சிவப்புப் பவளங்களும், கறுப்புப் பவளங்களும் சொற்பமாய்த்தான் அகப்படும். அநேகமாய்ச் சிவந்த நிறமுள்ள பவளங்கள் யாவும் இத்தாலியா தேசத்திலிருந்து நமது தேசத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. சிசிலி என்னும் ஓர் தீவு பவளத்துக்கு மிகப் பேர்போன இடம்.

வெவ்வேறு உருவமுள்ள பவளங்கள் கடலில் அகப்படுகின்றன. சில பவளங்கள் பெரிய கிண்ணத்தைப் போன்ற வட்டவடிவுள்ளவை. ஆனால் அவற்றின் ஊடே கிளைகள் ஓடி கவர் கவராய்த் தோன்றும். சில முட்டை வடிவமாயிருக்கும். முட்டை வடிவமான பவளத்தில்

பூச்சிகள் இருந்துகொண்டு வெளியே எட்டிப்பார்க்கும் பாவனையைப் பக்கத்திலிருக்கும் படத்தில் பார்க்கலாம்.



சமுத்திரத்தில் சிற்சில இடங்களில் பவளப்பூச்சிகளால் உண்டாகிய சிறுசிறு துண்டு நிலங்கள் இருக்கின்றன. பவளக்கொடிகளாகிய இப்பவளத்தீவுகள் பார்ப்பதற்கு வெகு விந்தையாயும் அந்தசந்தமாயுமிருக்கும். சில தீவுகள் சமுத்திரத்தின் மத்தியில் நேர்த்தியான நந்தவனங்கள் போல் காணப்படும். தண்ணீர் மட்டத்திற்கு இரண்டொரு கஜம் மேல் எடுப்பாயிருக்கும். இச்சிறு பவளத் தீவுகளில் புல் பூண்டுகள் செழிப்பாய் வளர்ந்து பசுமையாகத் தோன்றும். அங்கங்கே அழகான தென்னந்தோப்புகளும் உண்டாம்.

சமுத்திரத்திலுள்ள பவளத்தை எடுக்கும் விதம் எப்படியென்ருல், இரண்டு மரங்களைக் குறுக்கு நெடுக்காகவைத்து ஒரு பெரிய சிலுவைபோல் அமைத்துக் கொள்வார்கள். அதன் நான்கு மூலைகளிலும் வலைகளைத் தொங்கவிட்டுக் கட்டிக்கொள்வார்கள். பின்பு அம்மரச் சிலுவையின் மத்தியில் பளுவை ஏற்றி ஒரு கயிற்றின் துணையால் அதைக் கடலுக்குள் இறக்குவார்கள். அது தரை தட்டினவுடன் விட்ட கயிற்றை ஒரு படகில் பலமாய் இழுத்துக் கட்டிவிடுவார்கள். பின்பு பவளம் இருக்கும் இடங்களின்மேல் படகைத் தள்ளிக்கொண்டே போவார்கள். இப்படித் தள்ளிக்கொண்டு போவதினல்



பவளக்கொடிகளும், கிளைகளும் அறுபட்டு வலைகளில் சிக்கிக்கொள்ளும்.

பவளப் பூச்சியிலிருந்து உண்டாகும் பவளம் நவரத்தினங்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. நவரத்தினங்கள் எவையென்றால் கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம் என்பவைகளே. பார்வைக்கு அற்பமாய்த் தோன்றும் தேனீ மதுரமான தேனைக் கொடுக்கிறது. விகார ரூபமாய்க் காணப்படும் புழுவடிவாகிய பட்டுப்பூச்சியிலிருந்து அரசரும் ஆசைப்படும் அழகான பட்டு உற்பத்தியாகிறது. சமுத்திரத்தில் வசிக்கும் முத்துச்சிப்பி முதல்தரமான முத்தையும், பவளப்பூச்சி பளபளப்பான பவளத்தையும் பிறப்பிக்கின்றன. இயற்கையில் அற்பமாய்க் காணப்படும் பூச்சிகளிலிருந்துகூட மனிதர் மேன்மையாய் மதிக்

கும் வஸ்துக்கள் உண்டாகின்றன. இது என்ன ஆச்சரியம்! உலகத்தில் உபயோகமற்ற பொருள் ஒன்றும் இல்லை.

தாமரை பொன்முத்துச் [1]சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாம [2]ழன்மற்
றெங்கே பிறந்தாலும் [3]எள்ளாரே, நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்? (நீதிவெண்பா)

அப்பியாசம்

1. நவரத்தினங்கள் எவை?

2. பவளம் எதிலிருந்து உற்பத்தியாகிறது?

3. பவளத்துக்குப் பேர்போன இடங்கள் எவை? அவற்றைப் பூகோளப்படத்தில் காட்டு.

4. சமுத்திரத்திலிருந்து பவளத்தை எடுக்கும் விதம் எப்படி?

5. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

அந்தசந்தம், சவரம், அழல், எள்ளார்.

6. இவ்வாக்கியத்திலிருக்கும் வினைச்சொற்களை எடுத்தெழுது:—

'சமுத்திரத்தில் அழுகிக் கிடக்கும் வஸ்துக்களைப் பவளப் பூச்சி தின்று ஜீவிக்கும்.'

இந்த வினைச்சொற்களில் ஜீவிக்கும் என்பது முற்றுப்பெற்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வினைச்சொல். ஆகையால் அதற்கு வினை முற்று என்று பெயர். தின்று, அழுகிக்கிடக்கும் என்னும் இரண்டு வினைச்சொற்களும் முற்றுப்பெற்ற அர்த்தத்தைக் கொடாமல் குறைவாய் நிற்கின்றன. ஆகையால் அவை எச்சம் எனப்படும். (எச்சம் = குறைவு.) தின்று ஜீவிக்கும் என்பதில் தின்று என்னும் எச்சம் ஜீவிக்கும் என்னும் வினையைக்கொண்டு முடிவதால் அதற்கு வினையெச்சம் என்று பெயர். அழுகிக்கிடக்கும் என்னும் எச்சம் வஸ்துக்கள் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால் அதற்குப் பெயரெச்சம் என்று பெயர்.

1. பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சவினை பெயரெச்சம்.

---

[1] சவரம் = சாமரை. [2] அழல் = நெருப்பு. [3] எள்ளார் = இகழார்.

2. வினைச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சவினை வினையெச்சம்.

3. ஒரு வாக்கியத்தில் முற்றுப்பெற்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வினைச்சொல் வினைமுற்று. இதற்குப் பயனிலையென்றும் பெயர்.

7. இவ்வாக்கியங்களிலிருக்கும் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்றுகளை எடுத்தெழுது:—

(1) 'பவளக்கொடிகளால் உண்டான பவளத் தீவுகள் பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.'

(2) ''பவளக்கொடிகள் அறுபட்டு வலைகளில் சிக்கிக்கொள்ளும்.'

(3) 'அற்பமாய்த் தோன்றும் தேனீ மதுரமான தேனைக் கொடுக்கிறது.'

14. திருட்டுக்கு மருந்து

தரங்கம்பாடி	வேதனை	நெடுஞ்சாண்கிடை
பல்லாண்டுகள்	ஐயோ	தென்னங்கன்று
பக்தர்	பிரவேசித்தார்	நமஸ்காரம்
மகாத்துமா	ஓட்டம்பிடித்தான்	ஆசை
நுழைந்தார்கள்	அனாற்றிக்கொண்டு	கட்டாயப்படுத்தி
நறுக்கென்று	நடுநடுங்கி	மகாநுபாவன்
கொட்டிவிட்டது	ஸ்வாமி	நல்வழி

தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த தரங்கம்பாடி என்னும் ஊரில் பல்லாண்டுகளுக்குமுன் சிறந்த பக்தர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய மகாத்துமா. ஏழைகள் மேல் இரக்கம் உள்ளவர். தன்னைப்போல் மற்றவர்களைச் சிநேகித்துவந்தவர். அவர் வீட்டுத் தோட்டத்தில் சில தென்னமரங்கள் இருந்தன. ஒருநாள் இரவு பத்து மணிக்குமேல் இரண்டு திருடர் தேங்காய் திருடப் புறப்பட்டார்கள். திருடர் இருவரும் மெதுவாய் அவர்

வீட்டுப் பக்கம் சென்று யாவரும் தூங்கிவிட்டார்களா வென்று பார்த்துக்கொண்டு தோட்டத்துக்குள் நுழைந் தார்கள். பின்பு ஒருவன் கீழே நிற்க மற்றவன் நன்ருய்க் காய்த்திருந்த ஒரு தென்னமரத்தின்மேல் ஏறினுன். ஏறி ஒரு குலை தேங்காய்களை அறுத்து, ஒரு கயிற்றில் கட்டி, சந்தடியில்லாமல் மெதுவாய்க் கீழே இறக்கினுன். அச்சமயத்தில் தென்னமரத்திலிருந்த ஒரு பெரிய தேள் நறுக்கென்று அவனைக் கொட்டிவிட்டது. உடனே வேதனை பொறுக்கக்கூடாமல் ஐயோ! தேள் கொட்டி விட்டதே! என்று கத்தினுன். இச் சத்தம் பக்கத்து அறையில் படுத்திருந்த பக்தர் காதில் விழுந்தது. அவர் உடனே எழுந்திருந்து தன் வேலைக்காரனை எழுப்பி, 'தோட்டத்தில் யாரோ ஒருவன் தேள் கொட்டிவிட்ட தாகக் கத்துகிருன்; வா, அவனுக்கு மருந்து போடலாம்' என்று சொல்லிக்கொண்டே, கையில் விளக்கையும் தேள் மருந்தையும் எடுத்துக்கொண்டு, தோட்டத்துக்குள் பிர வேசித்தார்.

கீழே நின்ற திருடன் வெளிச்சத்தைப் பார்த்தவுடன் ஓட்டம்பிடித்தான். மேலே ஏறினவன் கீழே இறங்கினுல் என்ன நடக்குமோ என்று பயந்து, நடு நடுங்கி, வேதனை யையும் பொறுத்துக்கொண்டு, மட்டைக்குள் பதுங்கி உட்கார்ந்துகொண்டான். ஆனுல் சில நிமிஷங்களுக்குள் அந்த பக்தர் அவனைக் கண்டுபிடித்துக்கொண்டார். ஏனென்றுல் திருடன் தேள் கொட்டின வேதனையைச் சகிக்கக்கூடாமல், அம்மா அஅ! அப்பா அஅ! என்று மேல் இருந்தே அனற்றிக்கொண்டிருந்தான். அவர் திரு டனைப் பார்த்து, 'சிநேகிதனே! கீழே இறங்கிவா, தேள் கடிக்கு மருந்துபோடுகிறேன். நீ ஏன் இப்படி இரவில் வந்து மரத்தில் ஏறிஞய்? உனக்குத் தேங்காய் வேண்டிய தாயிருந்தால் பகலில் வந்து என்னைக் கேட்கக்கூடாதா?'

என்ருர். திருடன் நடுநடுங்கி, 'ஸ்வாமி, மன்னிக்கவேண்டும். புத்தியில்லாமல் செய்யத்தகாத காரியத்தைச் செய்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே மரத்திலிருந்து இறங்கி, அவர் பாதத்தில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தான். அவர் அவனை எழுந்திருக்கச் செய்து அவனுக்கு மருந்துபோட்டு விஷத்தைக் கீழே இறக்கினுர். விஷம் சற்று இறங்கினவுடனே வேலைக்காரனைக் கூப்பிட்டு, ஒரு கூடை கொண்டுவரச் சொல்லி கீழே கிடந்த தேங்காய்களையெல்லாம் அக்கூடையில் போடச் சொன்னுர். பின்பு அக்கூடையை வேலைக்காரன் தலையில் ஏற்றி, 'நீ இந்தத் தேங்காய்களை இவனோடு எடுத்துக்கொண்டுபோய் இவன் வீட்டில் வைத்துவிட்டு வா. ஐயோ பாவம்! இவனுக்குத் தேங்காய்மேல் இருந்த ஆசையால் இவ்வளவு கஷ்டத்துக்குள் ஆகிவிட்டானே' என்ருர். பின்பு, திருடனைப்பார்த்து 'சிநேகிதனே! உனக்குத் தேங்காய் வேண்டியதாயிருந்தால் பகலில் வந்து என்னைக் கேள். இப்படி இரவில் வந்து திருடாதே. உனக்கு நிலம் இருந்தால் இரண்டு தென்னங்கன்றுகள் தருகிறேன். அவைகளைக் கொண்டுபோய் வைத்துப் பயிராக்கு' என்று சில புத்திமதிகளைச் சொன்னுர். திருடன் திரும்பவும் அவரை நமஸ்காரம் பண்ணி, 'ஸ்வாமி, எனக்குத் தேங்காய் வேண்டாம். என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்' என்று வணங்கிக் கேட்டான். ஆனுல் அந்த தர்மகுண சீலனே தேங்காய்க் கூடையை அவன் எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்று கட்டாயப்படுத்தி, வேலைக்காரனைத் திரும்பவும் கூப்பிட்டுத் தேங்காயைக் கொண்டுபோய் அவன் வீட்டில் கொடுத்துவிட்டு வரும்படி சொன்னுர். இம்மகாநுபாவனுடைய தயாள சிந்தையையும், இரக்கத்தையும், அன்பையும் பார்த்து, திருடன் அன்று முதல் தன் திருட்டுத்தொழிலை விட்டு நல்வழியில் நடந்தான்.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, சுருக்கமாகச் சொல்லு.

2. பூகோளப் படத்தில் தஞ்சாவூர் ஜில்லாவையும், தரங்கம்பாடி என்னும் ஊரையும் காட்டு.

3. தரங்கம்பாடி என்னும் வார்த்தையை இரண்டு வார்த்தைகளாகப் பிரித்து அதின் அர்த்தத்தைச் சொல்லு. நெடுஞ்சாண்கிடை, மகாநுபாவன். இவ்விரண்டு சொற்களுக்கும் அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு.

4. 'தென்னமரத்தில் இருந்த ஒரு பெரிய தேள் நறுக்கென்று அவனைக் கொட்டிவிட்டது.'

(1) இவ்வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் சொல்லு.

(2) வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் கூறு.

(3) தென்னமரத்தில், தேள், அவனை—இவற்றின் வேற்றுமை சொல்லு.

5. இம்மூன்று வாக்கியங்களையும் கவனி:—

(1) திருடன் திருடப்போனான்.

(2) திருடன் திருடப்போகிறான்.

(3) திருடன் திருடப்போவான்.

போனான் என்பது முன் நடந்த காரியத்தையும், **போகிறான்** என்பது இப்பொழுது நடந்துகொண்டிருக்கிற காரியத்தையும், **போவான்** என்பது இனி நடக்கப்போகும் காரியத்தையும் காட்டுகின்றன. அவைகளுக்கு முறையே **இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்** என்று பெயர்.

6. கீழே கொடுத்திருக்கும் இறந்தகால வினைச்சொற்களுக்கு நிகழ்காலமும், எதிர்காலமும் எழுது:

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
இருந்தார்		
விழுந்தான்		
கொட்டினது		
நடந்தார்கள்		
கத்தினான்		
சிநேகித்தார்		

15. உப்பு

வெவ்வேறு	மனையாள்	உப்புக்கண்டம்
மூட்டை	சப்பென்று	ஊறுகாய்
சோவென்று	கரைந்து	உண்பொருள்
கொங்கணி	மறைந்து	பூமி
சாவடி	நாற்றம்	வற்றி
நனைந்து	கருவாடு	பெருமான்

ஒருநாள் எளிய குடியானவன் ஒருவன் மூன்றுபடி அரிசியையும் ஒருபடி உப்பையும் வெவ்வேறு மூட்டையாகக் கட்டி, பெரிய மூட்டையைக் கீழும் சிறிய மூட்டையை மேலுமாகத் தலையில் வைத்துக்கொண்டு, ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போனான். சிறிது தூரம் சென்றவுடனே சோவென்று மழைபெய்ய ஆரம்பித்தது. ஏழை மனிதனிடத்தில் குடையும் இல்லை, கொங்கணியும் இல்லை. வழியில் தங்குவதற்கு சத்திரமாவது சாவடியாவது கிடையாது. என்ன செய்வான்! மழையில் நனைந்துகொண்டே ஊர்போய்ச் சேர்ந்தான். சேர்ந்தவுடன் மனையாளைப் பார்த்து, 'இதோ மூன்று படி அரிசியும் ஒருபடி உப்பும் இருக்கிறது, எடுத்துக் கொள்' என்று சொன்னான். அவள் மூட்டைகளை அவிழ்த்துப் பார்க்கும்பொழுது, மேல் மூட்டையிலிருந்த உப்பெல்லாங் கரைந்துபோய்விட்டதாகக் கண்டு மிகவும் விசனப்பட்டாள். உப்பு சிறு கற்கள்போன்ற கடினமான பொருளாகக் காணப்பட்டாலும் இலேசாய்க் கரையக்கூடியது.

நாம் சாப்பிடுகிற பதார்த்தங்கள் ருசியாயிருப்பதற்காக ஒவ்வொரு பதார்த்தத்தோடும் கொஞ்சம் உப்பு சேர்த்துக்கொள்ளுகிறோம். உப்பில்லாப் பண்டத்

தைச் சப்பென்றிருக்கிறதென்றும், உப்பு அதிகமாகிவிட்டால் உப்புக் கரிக்கிறதென்றும் நாம் சாதாரணமாகச் சொல்வது வழக்கம். ஆனல் சேர்க்கிற உப்பு பதார்த்தங்களிலிருக்கும் ஜலத்தில் கரைந்து மறைந்துபோனல் மாத்திரம் சுவைதருமேயொழிய கரையாமலிருந்தால் சுவைதரமாட்டாது.

உப்பு, பதார்த்தங்களுக்கு ருசி கொடுக்கிற வஸ்துவாய் மாத்திரம் இராமல், அவைகள் நாற்றமெடுத்துக் கெட்டுப்போகாமல் காப்பாற்றுகிற வஸ்துவாயும் இருக்கிறது. ஆகையால்தான் கருவாடு, உப்புக்கண்டம், ஊறுகாய் முதலிய உண்பொருள்களுக்கு உப்பிட்டுவைக்கிருர்கள். சாம்பலுடன் கலந்த உப்பு தென்னங்கன்றுகளைக் கறையான் தின்றுவிடாமல் காப்பாற்றுகிறது. இயேசுபெருமான் தமது சீஷரிடத்தில் உப்புக்குரிய குணங்கள் யாவும் இருக்கவேண்டும் என்பதைக் கருதி, 'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்' என்று சொல்லியிருக்கிருர்.

உப்பு சாதாரணமாக சமுத்திர நீரிலிருந்து எடுக்கப்படுகிறது. சமுத்திரக் கரைகளில் பாத்திகள் கட்டி, சமுத்திர நீரை இறைத்து அப்பாத்திகளில் விடுவார்கள். அந்த ஜலம் சூரிய உஷ்ணத்தால் வற்றிப்போனபின், பாத்திகளில் உப்பு மாத்திரம் தங்கி நிற்கும். உப்பு விளையும் இடத்துக்கு உப்பளம் என்று பெயர்.

அப்பியாசம்

1. உப்பு எப்பேர்ப்பட்ட பொருள்?
2. உப்பின் குணங்கள் எவை?
3. உப்பு எதிலிருந்து எப்படி செய்யப்படுகிறது?
4. 'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்' என்ருல் அர்த்தம் என்ன?

5. கரை என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் கூறு.

6. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்கள் என்ன காலங்களைக் குறிக்கின்றன? அவற்றிற்கு மற்றக் காலங்களைச் சொல்லு.

(1) மழை பெய்ய ஆரம்பித்தது.

(2) அவன் என்ன செய்வான்?

(3) உப்பு இருக்கிறது.

(4) மனையாள் விசனப்பட்டாள்.

(5) உப்பு சமுத்திர நீரிலிருந்து எடுக்கப்படுகிறது.

7. இவ்வாக்கியங்களைக் கவனி:—

(1) அவன் ஊர்போய்ச் சேர்ந்தான்.

(2) அவன் ஊர்போய்ச் சேரவில்லை.

முதல் வாக்கியம் நடைபெற்ற ஒரு காரியத்தைக் காட்டுகிறது. இரண்டாவது வாக்கியம் அக்காரியம் நடைபெறவில்லையென்று தெரிவிக்கிறது.

கீழ்க்கண்ட வாக்கியங்களை இரண்டாம் வாக்கியத்தைப்போல் மாற்றி எழுது:—

(1) அவள் மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்தாள்.

(2) அவள் விசனப்பட்டாள்.

(3) அவன் சத்திரத்தில் தங்கினான்.

(4) சமுத்திர நீரை இறைப்பார்கள்.

(5) பாத்திகளில் விடுவார்கள்.

8. இத்தொடர்களை வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு:—

நனைந்துகொண்டு, கரையாமல், நாற்றமெடுத்து, சமுத்திரக் கரை.

16. ஈடித் காவல்

நூற்றண்டு	திறமை	சாமானியமான
யுத்தம்	குணதிசயங்கள்	கர்பலங்காரி
போர் புரிந்தன	வியவாதவர்	மாசில்லா
பல்லாயிரம்	காயப்பட்டவர்	மாற்றில்லா
மடிந்தார்கள்	கன்னிகை	மங்காத
ஆங்கிலமாது	கணக்கற்ற	வாடாத
விளக்கொளி	வீரர்	கோதில்லா
விளங்குகிறள்	குருவாக்கு	இறுதி
வைத்தியமுறை	பரோபகாரம்	புண்ணியவதி
உபகாரி	தேசாபிமானம்	சுடப்பட்டு
ஊக்கத்துடன்	சுயதேசம்	பின்வாங்க
கலாசாலை	சிறைச்சாலை	நித்தியம்
தலைவி	மாணதண்டனை	தத்தம்
மனேற்சாகம்	தீர்ப்பு	குடும்பம்

இந்த நூற்றுண்டின் முதற்பத்தாண்டுகள் முடிந்து கொஞ்சகாலத்துக்குள் ஜெர்மனி என்னும் தேசம் ஒரு பெரிய யுத்தத்தை ஆரம்பித்து நடத்தினது. அந்த யுத்தத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய தேசங்கள் ஜெர்மனியோடு எதிர்த்துப் போர்புரிந்தன. பல்லாயிர மக்கள் அப்பெரும்போரில் மடிந்தார்கள். அவர்களுள் ஈடித் காவல் என்னும் ஆங்கிலமாது மங்காத விளக்கொளிபோல் விளங்குகிறுள்.

ஈடித் காவல் என்னும் அம்மை ஓர் ஆங்கில குருவி னுடைய முதல் மகள். சிறு பிராயத்தில் அவள் பெற்றோர் அவளுக்கு வீட்டிலேயே கல்வி கற்பித்து அவளை நல்வழியில் நடத்திவந்தார்கள். பதினேழு வயதான பின் லண்டன் பட்டணத்திலுள்ள ஓர் வைத்தியசாலை யில் சேர்ந்து நோயாளிகளுக்கு உதவிசெய்யும்படியான

வைத்திய முறைகளைக் கற்றுக்கொண்டாள். அதன்பின் அநேக வியாதியஸ்தருக்கு உபகாரியாக, ஊக்கத்துடன் உழைத்துவந்தாள். கடைசியாக பெல்ஜியம் என்னும் தேசத்தில் ஓர் வைத்திய கலாசாலைக்குத் தலைவியாக

நியமிக்கப்பட்டாள். அங்கே சுமார் ஒன்பது வருஷங்களாக மனோற்சாகமாய் வெகு திறமையுடன் தன் வைத்தியவேலையைச் செய்துவந்தாள். அவள் அங்கிருந்த காலத்தில் அவளுடைய குணாதிசயங்களைக் கண்டு வியவாதவர் எவரும் இலர்.

ஈடித் காவல் பெல்ஜியத்தில் இருந்த காலத்தில்தான் அந்த ஜெர்மானிய யுத்தம் நடந்தது. ஜெர்மானியர் பெல்ஜியத்தைப் பிடித்துக்கொண்டார்கள். பெல்ஜியத்தி

விருந்த மற்ற தேசத்து ஜனங்கள் யாவரும் ஓட்டம் பிடித்தார்கள். சண்டையில் காயப்பட்டவர்களுக்கும், நோயாளிகளுக்கும் உதவிசெய்யக்கூடிய வைத்திய கலா சாலைப் பெண்களும் தங்கள் உயிர் தப்பினால் போதும் என்று ஓடி ஒளித்துக்கொண்டார்கள். ஆனால் காவல் என்னும் கன்னிகையோ ஊரைவிட்டு ஓடவுமில்லை, ஆபத்துக்கு அஞ்சவுமில்லை. வைத்தியசாலையிலேயே வழக்கம்போல் வேலைசெய்து வந்தாள். காயப்பட்டுக்கிடந்த கணக்கற்ற வீரருக்குக் கருத்துடன் காயங்கட்டி, அன்புடன் அநேக உபகாரங்கள் செய்தாள். ஜெர்மானியர் சத்துருக்களா யிருந்தபோதிலும் அவர்களில் காயப்பட்டவர்களுக்குங் கூட அன்பு பாராட்டி உபகாரம் செய்தாள். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் என்னும் குருவாக்கைத் தலைமேற்கொண்டு, அதன்படியே நடந்தாள். எந்த உயிரையும் தன் உயிர்போல் எண்ணி உபகாரம் செய் தாள்.

அவள் அன்பு நிறைந்த பரோபகார சிந்தையும், தேசாபிமானமும் உடையவளாயிருந்தபடியால், காயப் பட்ட ஆங்கில வீரர் பலருக்கு உபகாரம் செய்தாள். அவர்கள் சத்துருக்களுக்குத் தப்பி தங்கள் சுயதேசம் சேர்வதற்கும் உதவிபுரிந்தாள். இந்தக் காரணத்தால் ஜெர்மானியர் அவள்மேல் கோபங்கொண்டு அவளைச் சிறைச்சாலையில் பத்துவாரம் அடைத்து வைத்தார்கள். அதன் பின்பு அவளுக்கு மரண தண்டனை விதித்தார்கள். எத்தனையோ பிரபுக்கள் அவளுக்காகப் பேசியும் மரணத் தீர்ப்பு மாற்றப்படவில்லை. 'பெண் என்றால் பேயும் இரங் கும்' என்பது நமது தேசத்தில் சாதாரணமாய் வழங்கும் பழமொழி. ஈடித் காவல் சாமானியமான பெண் அல்ல. அவள் கற்பலங்காரி; பேர் உபகாரி; தேசாபிமானி; மாசில்லா மாணிக்கம்; மாற்றில்லாத் தங்கம்; மங்காத

தீபம்; வாடாத புஷ்பம்; கோதில்லாக் கரும்பு. இப் பேர்ப்பட்ட பெண்ணுக்குக்கூட இரக்கங்காட்டுவதற்கு ஜெர்மானியருடைய மனம் சற்றுகிலும் இளகவில்லை. இறுதியில் இப்புண்ணியவதி ஜெர்மானிய வீரன் ஒருவனால் சுடப்பட்டு மரணமடைந்தாள்.

ஈடித் காவல் மரணநேரம் வரையில் சந்தோஷமாகவும் தைரியமாகவும் பேசிக்கொண்டிருந்தாள். தன் தேசத்துக்காகவும், சத்தியத்துக்காகவும், தன் உயிரைக் கொடுக்கச் சற்றுகிலும் பின்வாங்கவில்லை. அவள் தன் உயிரை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. சத்தியமே நித்தியமான பொருள் என்று நம்பி அதற்குத் தன் உயிரைத் தத்தம் செய்தாள். இவ்வித குணதிசயங்களையுடைய பெண்ணைப் பெற்ற குடும்பத்தையும், அவள் பிறந்த நாட்டையும் யார்தான் புகழ்ந்து பேசமாட்டார்?

அப்பியாசம்

1. ஜெர்மன் தேசத்தோடு முன்நடந்த பெரிய யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தேசங்கள் எவை? அந்த தேசங்களைப் பூகோளப்படத்தில் காட்டு.

2. ஈடித் காவல் அம்மையின் குணதிசயங்கள் எவை?

3. நித்தியமான பொருள் எது?

4. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகள் வைத்துப் படி:—

ஈடித் காவல் —— பெண் அல்ல; அவள் ——; பேர் ——; ——; மாசில்லா ——; —— தங்கம்; —— தீபம்; —— புஷ்பம்; —— கரும்பு.

5. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

நூற்றுண்டு, பரோபகாரம், கோது, தத்தம்.

6. இப்பதங்களைச் சேர்த்து எழுது:—

(1) விளக்கு + ஒளி.
(2) பட்டணத்தில் + உள்ள.
(3) கணக்கு + அற்ற.
(4) கோபம் + கொண்டு.
(5) காயம் + கட்டி.
(6) மாசு + இல்லா.

7. இச்சொல் தொடர்கள் ஒவ்வொன்றையும் இரண்டு சொற்களாகப் பிரித்து எழுது:—

(1) கற்பலங்காரி.
(2) மாற்றில்லா.
(3) கோதில்லா.
(4) சற்ருகிலும்.
(5) இரக்கங்காட்ட.
(6) நூற்ருண்டு.

17. முதல்தர முத்துக்கோட்டை

தரம்	கிரயம்	திடமனது
முத்துக்கோட்டை	கணக்கப்பிள்ளை	யார்த்தம்
நாட்டுப்புறம்	வாலிபன்	கலப்பு
பீப்பாய்	பரிசோதித்து	வணிகன்
அன்னிய	கிடந்த	வாணிபம்
ஏற்றுமதி	மலிவு	நஷ்டம்
ஆணி	திகைத்து	கண்ணியம்

ஓர் ஊரில் ஒரு பெரிய முத்துக்கொட்டை வியாபாரி இருந்தான். அவன் பலவகை முத்துக்கொட்டைகளை நாட்டுப்புறங்களிலிருந்து சொற்பவிலைக்கு வாங்கி, அவைகளைப் பீப்பாய்களில் அடைத்து, அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்து அதிகப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தான். அவன் முத்துக்கொட்டைகளை வெகு

தந்திரமாகப் பீப்பாய்களில் அடைப்பான். பீப்பாயின் மேற்பக்கத்திலும் அடிப்பக்கத்திலும் முதல்தரமான கொட்டைகளையும், நடுவில் தாழ்ந்த வகைக் கொட்டை களையும் போட்டு மூடி ஆணி அடித்துவிடுவான். வாங்கு



கிற வியாபாரிகள் எந்தப் பக்கத்தைத் திறந்து பார்த்த போதிலும், முதல்தரமான கொட்டைகள் இருப்பதைக் கண்டு உயர்ந்த கிரயங்கொடுத்து வாங்கிக்கொண்டு போவார்கள்.

ஒருநாள் முத்துக்கொட்டைகளைப் பீப்பாய்களில் அடைக்கும் சமயத்தில் அவனுடைய கணக்கப்பிள்ளை யும் கூட இருந்தான். அவன் உண்மையுள்ள ஒரு சிறு வாலிபன். 'முதல்தர முத்துக்கோட்டை' என்று பெரிய எழுத்துக்களால் அச்சடித்து வைத்திருந்த விலாசங்களை ஒவ்வொரு பீப்பாயின்மேலும் ஒட்டும்படி வியாபாரி கணக்கப்பிள்ளையிடத்தில் சொன்னான். கணக்கப் பிள்ளைக்கு அது மனதுக்கு வருத்தமாயிருந்தது; முத லாளியிடம் அது சரியல்லவென்றும் சொல்லிப் பார்த் தான். முதலாளியோ இவன் பேச்சைக் கேட்கவில்லை.

எல்லாப் பீப்பாய்களிலும் 'முதல்தர முத்துக்கொட்டை' என்னும் விலாசம் ஒட்டப்பட்டது.

சில நாட்களுக்குப்பின், பெருத்த வியாபாரி ஒருவன் முத்துக்கொட்டை வாங்கும்படி இந்தக் கடைக்கு வந்தான். அவனுக்கு முதல்தரமான முத்துக்கொட்டை காட்டப்பட்டது. அவன் அவைகளைப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு, பீப்பாய்களில் அடைத்துவைத்திருக்கும் கொட்டை முத்துக்களிலும் சிலவற்றைப் பரிசோதித்துப் பார்க்கும்படி விரும்பினான். முதலாளி கணக்கப்பிள்ளையைப் பார்த்து வியாபாரியைக் கிடங்குக்குக் கூட்டிக்கொண்டுபோய்க்காட்டும்படி சொன்னான். கணக்கப்பிள்ளை எஜமானின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து வியாபாரியைக் கூட்டிக்கொண்டுபோய்க் காண்பித்தான். வியாபாரி பீப்பாயின் ஒரு பக்கத்தைத் திறந்து பார்த்தான். முத்துமுதல்தரமானதாகவே இருந்தது. உடனே வியாபாரி வாலிபனைப் பார்த்து, 'இந்தக் கொட்டை முத்து முதல்தரமானதுதான். ஆனால் நீங்கள் சொல்லுகிற விலை அதிக மலிவாய்க் காணப்படுகிறது. இந்தப் பீப்பாயில் மேலே இருக்கிறதுபோல அடிவரையில் முழுவதும் ஒரே தினுசாய் இருக்குமா?' என்று கேட்டான். வாலிபன் தன் எஜமானுடைய வியாபாரம் கெட்டுப்போகுமேயென்று எண்ணி ஒரு பொய் சொல்லலாமா என்று சற்றுநேரம் திகைத்துக்கொண்டு நின்றான். பின்பு, 'இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்' என்று நான் படித்திருக்கிறேன் அல்லவா! ஆகையால் நான் உண்மையே பேசவேண்டும் என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு, திடமனதுடன், தைரியமாய், 'எல்லாம் முதல்தரமான முத்தல்ல, தாழ்ந்த தினுசு முத்துக்களும் நடுவில் கலந்திருக்கும்' என்று யதார்த்தத்தைச் சொன்னான். வியாபாரி, 'அப்படியானால் இது

எனக்கு வேண்டாம்' என்று சொல்லிப் போய்விட்டான். கணக்கப்பிள்ளை திரும்பக் கடைக்கு வந்தவுடன் எஜமான் அவனைப்பார்த்து, 'அந்த வியாபாரி எத்தனை பீப்பாய்கள் வாங்கிக்கொண்டான்?' என்று கேட்டான். அதற்கு அவன், 'அவ்வியாபாரி ஒன்றும் வாங்கவில்லை. ஏனென்றால் அவன் என்னிடத்தில் உண்மையைச் சொல்லும்படி கேட்டான். நானும் உண்மையைச் சொல்லிவிட்டேன். ஆகையால் அவன் கலப்புக் கொட்டைமுத்து தனக்கு வேண்டியதில்லையென்று போய்விட்டான்' என்று சொன்னான். உடனே எஜமான் அதிகக் கோபமடைந்து, கணக்கப்பிள்ளையைப் பலவிதமாய்த் திட்டி, நீ இந்த வேலைக்கு உதவமாட்டாய் என்று சொல்லி அவனை வேலையைவிட்டு நீக்கிவிட்டான்.

வணிகனுக்கு வரவர வாணிபம் குறைந்துகொண்டே வந்தது. ஏனென்றால் அவனிடத்தில் முத்துக்கொட்டை வாங்கினவர்கள் ஒவ்வொருவரும், அவன் உண்மையுள்ளவன் அல்லவென்று தெரிந்துகொண்டு அவனோடு வியாபாரம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். அதனால் அவன் நஷ்டமடைந்து கடையை மூட நேர்ந்தது.

சில மாதங்களுக்குப் பின், முதலாளி மறுபடியும் இந்தக் கணக்கப்பிள்ளையை வரவழைத்து, 'நாங்கள் புதிதாய் வேறொரு கடை திறக்கப்போகிறோம். அதற்கு உண்மையுள்ள ஒரு கணக்கப்பிள்ளை வேண்டும். அதற்கு நீதான் ஏற்றவன். உனக்கு இப்போது கிடைக்கிற சம்பளத்தைவிட இரண்டுமடங்கு அதிகச் சம்பளம் தருகிறேன். தயவுசெய்து வேலையை ஒப்புக்கொள்' என்று கேட்டுக்கொண்டான். அப்படியே அவன் வேலையை ஒப்புக்கொண்டு, உண்மையுடன் வியாபாரம் நடத்தி, அக்கடையை அதிக உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு

வந்து, அதற்கு அவனே முதல் அதிகாரியானான். வியாபாரிகள் எல்லாராலும் அவன் மிகவும் கண்ணியமுள்ளவனாகவும் யோக்கியமுள்ளவனாகவும் மதிக்கப்பட்டான்.

'சத்தியமே ஜேயம்'

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, சுருக்கமாகச் சொல்லு.

2. இக்கதையிலிருந்து கற்றுக்கொள்ளும் நீதி என்ன?

3. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் கூறு:—

முத்து, கிடங்கு, திட்டி.

4. முத்து, முற்று, முட்டு—இவற்றின் வித்தியாசம் என்ன? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

5. இப்பதங்களைச் சேர்த்து எழுது:—

(1) முத்து + கொட்டை.
(2) வாங்கி + கொண்டு.
(3) உண்மை + உள்ள.
(4) சரி + அல்ல.
(5) வாங்க + இல்லை.

6. இவை ஒவ்வொன்றையும் இரண்டு சொற்களாகப் பிரித்து எழுது:—

(1) படித்திருக்கிறேன்.
(2) அடிப்பக்கம்.
(3) அச்சடித்து.
(4) சந்தோஷப்பட்டு.
(5) எஜமானுடைய.

7. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:—

லாபம், நாட்டுப்புறம், சந்தோஷம், எஜமான், பொய்.

18. சாரணச் சிறுவர்

சாரணர்	கண்ணுங்கருத்தும்	வீண்செலவு
முயலுகிறர்கள்	வேவுகாரர்	கசரத்து
பாலிய	ஸ்தாபிக்க	தேகாப்பியாகம்
சகாயம்	விசுவாசம்	அக்கினி
படை	சரீவா	சாந்தி
பிரதிதினமும்	கொள்கை	சிகிச்சை
அபாயம்	பிரதிபலன்	ஒழுகி

சாதாரணமாய் நமது பள்ளிக்கூடங்களில் படித்து வரும் மாணுக்கர் புத்தகங்களிலிருக்கும் பற்பல விஷயங்களைக் கற்று, வருஷாவருஷம் பரீட்சையில் தேறிக்கொண்டு வர முயலுகிருர்கள். இது மிகவும் வியந்து கொள்ளத்தக்க விஷயம். ஆனுல் புத்தகப் படிப்பைவிட மேலான படிப்பு இன்னென்றிருக்கிறது. அதற்கு நல்லோழுக்கப் படிப்பு என்று பெயர். நல்லொழுக்கத்திலும், பரோபகார சிந்தையிலும், நாளுக்குநாள் வளர்ந்து கொண்டுவரும் மாணுக்கனே பரீட்சையில்மாத்திரம் தேறிக்கொண்டு வருகிற மாணுக்கனைவிடச் சிறந்தவனுக மதிக்கப்படுகிருன்.

தற்காலத்தில் மாணுக்கருக்குள் நல்லொழுக்கமும் காருணிய சிந்தையும் விருத்தியாகும்பொருட்டு, பள்ளிக்கூடங்களில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. தங்கள் தேசத்துக்காகவும், அரசனுக்காகவும், பொது நன்மைக்காகவும் பாலிய மாணுக்கர்கூட பல இடங்களில் வேலைசெய்து வருகிருர்கள். அவர்கள் சுயநன்மையைக் கருதாமல் பிறர்நன்மையையே கருதி உழைக்கிருர்கள். சம்பளமின்றி சந்தோஷமாக சகலருக்கும் சகாயம் செய்கிருர்கள். இவ்விதமாக வேலைசெய்துவரும் மாணுக்கரின் கூட்டத்துக்கு சாரணச் சிறுவர் படை என்று பெயர். ஆங்கி



லத்தில் அவர்களை பாய் ஸ்கவுட்ஸ் (Boy Scouts) என்றும், கேர்ள் கைட்ஸ் (Girl Guides) என்றும் சொல்வார்கள். அதாவது பிறருக்குண்டாகுங் கஷ்டங்களையும் அபாயங்களையும் நீக்கும்பொருட்டு, கண்ணுங்கருத்துமாய் வேவுகாரரைப்போல் முன்செல்லும் சிறுவர்கள்.

'சாரணச் சிறுவர்' என்றழைக்கப்படும் படை முதலாவது ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஜெனரல் பேடன் பவேல் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக இது உலகம் எங்கும் பரவிக்கொண்டு வருகிறது. நமது நாட்டிலுங்கூடப் பெரிய பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் 'சாரணச் சிறுவர்' கூட்டத்தைப் பார்க்கலாம்.

'சாரணர் படை'யைச் சேர்ந்த மாணாக்கன் ஒவ்வொருவனிடத்திலும் இராஜ விசுவாசமும், தன் கௌரவத்தைக்

காத்துக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணமும், ஊருக்காக உழைக்கவேண்டுமென்கிற ஆசையும் இருக்கவேண்டும். கடவுளுக்கும், மக்களுக்கும், தன் தேசத்துக்கும், அரசனுக்கும், பெற்ருேருக்கும், பெரியோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்துமுடிக்கப் பிரயாசப்படவேண்டும். தன் பேரும், தன் பாடசாலையின் பேரும், தன் படையின் பேரும் கெட்டுப்போகாதபடி உண்மையுள்ளவனுய் நடந்துகொள்ளவேண்டும். ஜாதி மதபேதமின்றி, எல்லாரிடத்திலும் அன்பும் சிநேகமும் மரியாதையுமாய் நடந்துகொண்டு, பிரதிபலனை எதிர்பாராமல், சந்தோஷத்துடன் அவர்களுக்கு உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். நடை, உடை, பாவனையில் சுத்தமுள்ளவனுயும், தைரியமுள்ளவனுயும், வீண்செலவு செய்யாதவனுயும், முகமலர்ச்சியுள்ளவனுயும் இருக்கவேண்டும்.

பிறருக்காக உழைக்கவேண்டும் என்னும் எண்ணமுடையவன் முதலாவது தேகபலமுள்ளவனுய் இருக்கவேண்டியது அவசியம். பலவீனனுயாவது வியாதியஸ்தனுயாவது இருந்தால் அவனுல் அவ்வளவு நன்மை செய்ய முடியாது. ஆகையால், இப்படையைச் சேர்ந்த ஒவ்வொரு மாணுக்கனும் பலவிதமான விளையாட்டுகள், கசரத்துகள் முதலிய தேகாப்பியாசங்கள் செய்யவேண்டும். தண்ணீரில் நன்ருய் நீந்துகிறதற்கும் கற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் ஜலத்தில் விழுந்துவிட்டவர்களுக்கு உதவிசெய்யக்கூடும். காயப்பட்டவர்கள், அக்கினியில் அகப்பட்டவர்கள், வியாதியஸ்தர்கள் முதலியவர்களுக்கு தற்கால சாந்திக்காகச் சிகிச்சை செய்யவும் தெரியவேண்டும். கைத்தொழில்களிலும் சில கற்றுக்கொள்வது நலம்.

இராஜ விசுவாசமும், தேசபக்தியும், பிறருக்கு உதவி செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும் என்பதுவும், பிரதி தினமும் யாருக்காவது ஏதாவது ஒரு நன்மைசெய்ய வேண்டும் என்பதுவும் சாரணச் சிறுவருடைய முக்கிய கொள்கை. இவ்விதிகளுக்கிணங்க மாணுக்கர் ஒழுகி வந்தால் அவர்கள் மேன்மையான பதவியை அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

அப்பியாசம்

1. சாரணச் சிறுவர் படை முதலாவது யாரால் ஸ்தாபிக்கப் பட்டது?

2. அவர்களுடைய முக்கிய கொள்கை என்ன?

3. கோடிட்ட இடங்களில், கீழுள்ள சொற்களில் சரியான சொல்லை அமைத்து எழுது:—

சாரணச் சிறுவர், சாரணச் சிறுவரை, சாரணச் சிறுவரால், சாரணச் சிறுவருக்கு, சாரணச் சிறுவரில், சாரணச் சிறுவருடைய, சாரணச் சிறுவரிடத்தில், சாரணச் சிறுவரே.

(1) பிறருக்கு உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதே——முக்கிய கொள்கை.

(2) ஊருக்காக உழைக்கவேண்டும் என்கிற ஆசை—— அதிகம் உண்டு.

(3) ——ஜாதி மதபேதம் கிடையாது.

(4) ——சகலருக்கும் சகாயம் செய்கிருர்கள்.

(5) அக்கினியில் அகப்பட்ட குழந்தை——இரட்சிக்கப் பட்டது.

(6) உற்சவத்தில் உதவிசெய்ய——வரவழைத்தார்கள்.

(7) ——பலருக்கு நன்ருய் நீந்தத்தெரியும்.

(8) ——, உங்களுக்கு வந்தனம்.

4. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு:—

படை, கண், மதம், உடை, சாந்தி.



1. புறத்தோல்
2. அகத்தோல்
3. வியர்வைப்பைகள்
4. தோலுக்குக் கீழுள்ள கொழுப்பு

19. தோல்

இறுக	மயிர்க்கால்	பரிசக்கருவி
மேலுறை	வேர்வைக்கோளம்	குளிர்மை
அடுக்குகள்	நெய்க்கோளம்	சொரசொரப்பு
புறத்தோல்	கோடிக்கணக்கு	மழமழப்பு
அகத்தோல்	கழிவுபதார்த்தம்	பளபளப்பு
நரம்பு	நுண்ணிய	வன்மை
இரத்தக்குழாய்	கிழி	மென்மை
சேதில்	மேனி	சீதளம்
தூள்	சிரங்கு	தாமிரம்
உரோமம்	ஆடை	காப்பிரி

நமது தேகம் முழுவதையும் இறுக மூடிக்கொண்டிருக்கும் மேலுறைக்குத் தோல் என்று பெயர். அது இரண்டு அடுக்குகளாக அமைந்திருக்கிறது. மேலே காணப்படும் தோலுக்குப் புறத்தோல் என்றும், அடியிலிருக்கும் தோலுக்கு அகத்தோல் என்றும் பெயர்.

புறத்தோலில் நரம்புகளாவது, இரத்தக் குழாய்களாவது கிடையாது. ஆதலால் அதற்கு உணர்ச்சியில்லை. அது மிகவும் மிருதுவானது. நாம் உடம்பைத் தேய்க்கத் தேய்க்க அது செதில்போன்ற தூளாக உதிர்ந்து திரும்பவும் வளரும் தன்மையுடையது.

அகத்தோலில் நரம்புகளும், இரத்தக் குழாய்களும் நிறைந்திருப்பதால் நமது தேகத்தின்மேல் ஒரு சிறு எறும்பு கடித்தாலும், ஈ உட்கார்ந்தாலும், உடனே அதற்கு உணர்ந்துகொள்ளும் சக்தி உண்டு. ஒரு சிறு காயம்பட்டால் உடனே இரத்தம் வருவதுடன் நோவும் உண்டாகும். அகத்தோல் தடிப்பானது, எளிதில் கிழிபடாது. நமது உடம்பின்மேல் காணப்படும் உரோமங்களின் வேர்கள், அதாவது மயிர்க்கால்கள் இந்த அகத்தோலில்தானிருக்கின்றன. அதில் அநேக வேர்வைக் கோளங்களும், நெய்க்கோளங்களும், கோடிக்கணக்கான துவாரங்களும் உண்டு.

வேர்வைக் கோளங்களிலிருந்து தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்கள் வேர்வை ரூபமாய்ப் பிரிந்து நுண்ணிய துவாரங்களின் வழியாய் வெளிப்படுகின்றன. நெய்க்கோளங்களிலிருந்து கசிந்துவரும் எண்ணெய்ப் பதார்த்தம் நமது தோலை மிருதுவாக்கி அதற்கு மேனியையும் பளபளப்பையுங் கொடுக்கிறது. இந்த எண்ணெய்ப் பதார்த்தம் இல்லாவிட்டால் நமது தோல் உலர்ந்து வெடித்துப்போகும்.

தோலிலுள்ள துவாரங்கள் அடைபட்டால் எண்ணெய்ப் பதார்த்தமும், கழிவு பதார்த்தங்களும் வெளியே வரக்கூடாமல் தேகத்திற்குள்ளேயே நின்றுவிடும். அப்பொழுது சிரங்கு முதலிய தோலைப்பற்றின வியாதிகள் பல உண்டாகும். ஆகையால் நாம் நாள்தோறும்

குளித்து, சுத்தமான ஆடைகளை யணிந்து, இத்துவாரங்கள் அடைபட்டுப் போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

தோல் நம்முடைய எல்லா அவயவங்களையும் மூடிக் காப்பாற்றுகிறது. அது தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்களை வெளியேற்றுங் கருவியாக மாத்திரமல்ல, பரிசக் கருவியாகவுமிருக்கிறது. தோலின் உதவியினால்தான் பொருள்களின் சூடு, குளிர்மை, சொரசொரப்பு, மழமழப்பு, வன்மை, மென்மை முதலிய குணங்களை யறிந்து கொள்ளுகிறோம்.

சாதாரணமாய் சீதள தேசத்தில் வசிப்பவர்களும், நிழலிலிருந்து வேலை செய்பவர்களும் வெண்மையாயும், உஷ்ணதேசத்தில் வசிப்பவர்களும் வெயிலில் திரிந்து வேலை செய்பவர்களும் கறுப்பாயும் இருப்பார்கள். அகத்தோலுக்கும் புறத்தோலுக்கும் மத்தியில் தேகத்திற்கு நிறம் கொடுக்கும் பதார்த்தம் இருக்கிறது. அந்தப் பதார்த்தம் எல்லா மனிதருக்கும் ஒரேவிதமாயிராமல் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாயிருக்கும். ஆகையினால்தான், ஐரோப்பியர் வெண்ணிறமாயும், அமெரிக்க இந்தியர் தாமிர நிறமாயும், ஆப்ரிக்க காப்பிரிகள் கறுப்பு நிறமாயு மிருக்கிறார்கள்.

அப்பியாசம்

1. அகத்தோலுக்கும் புறத்தோலுக்கும் என்ன வித்தியாசம்?

2. தோலுக்கு மேனியும் பளபளப்பும் எதினால் உண்டாகிறது?

3. தோலிலுள்ள துவாரங்கள் அடைபட்டுப்போனால் என்ன கெடுதல்கள் விளையும்?

4. தோல் மனிதருக்கு எவ்விதமாக உபயோகப்படுகிறது?

5. தேகத்திற்கு நிறம் கொடுக்கும் பதார்த்தம் எங்கிருக்கிறது? ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு நிறமாயிருப்பதற்குக் காரணம் என்ன?

6. இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:—

மிருது, சூடு, சொரசொரப்பு, வன்மை, சீதளம், நிழல், அகம்.

7. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் கூறு:—

அடை, ஆடை, பரிசம்.

8. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

உரோமம், கழிவு, நுண்ணிய.

9. 'சீதளதேசத்தில் வசிப்பவர்கள் வெண்மையாயும், உஷ்ண தேசத்தில் வசிப்பவர்கள் கறுப்பாயும் இருப்பார்கள்.'

(1) இவ்வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

(2) எழுவாயை ஆண்பால் ஒருமையாக்கி இரண்டு வாக்கியங்களாக எழுது.

(3) தேசத்தில்—எத்தனையாவது வேற்றுமை?

20. உலோகங்கள் (முதற் பாகம்)

பஞ்சலோகங்கள்	அரிய	நாளாவட்டம்
நிக்கல்	களிம்பு	மங்கல்
அலுமினியம்	புடம்	கரண்டி
உலே	கள்வர்	முள்ளு
உருகி	மூலம்	சாவிக்கோலுசு
கனி	ஆட்கொல்லி	கடியாரச்சங்கிலி
சுரங்கம்	ஏறது	அரைக்கால்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவ்வைந்தையும் நமது தேசத்தில் பஞ்சலோகங்கள் என்று சொல்வார்கள். ஏனென்றால் முற்காலத்தில் இந்த ஐந்து உலோகங்கள்தான் எல்லாருக்கும் தெரிந்திருந்தன. தற்காலத்தில் நிக்கெல், அலுமினியம் முதலிய வேறு சில உலோகங்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். உலோகங்கள் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. அவைகள்

பூமியில் கல் மண் முதலியவைகளோடு கலந்திருக்கும். அவைகளை வெட்டியெடுத்து, உலையில்போட்டு, சில உப்புகளுடன் கலந்து காய்ச்சினுல் அவற்றில் இருக்கும் உலோகம் உருகி மற்றப் பொருள்களிலிருந்து பிரிந்துவிடும். உலோகங்கள் இருக்கும் இடம் கனி என்றும் சுரங்கம் என்றும் சொல்லப்படும்.

உலோகங்களுக்குள் சிறந்தது பொன். அது மஞ்சள் நிறமானது. மிகவும் பளுவுள்ளது. பார்ப்பதற்கு வெகு அழகாயும் பிரகாசமாயும் இருக்கும். கிடைப்பதற்கு அரிய பொருள். அதிக விலைபெற்றது. அதில் களிம்பு ஏருது. அதைப் புடம் போடப்போட எடை கொஞ்சம் குறைந்தாலும் மாற்று உயர்ந்துகொண்டே வரும். உயர்ந்த பொன்னுக்குத் தங்கம் என்று பெயர். தங்கம் மெழுகுபோல் மகா மென்மையாக இருக்கும். தங்கத்துடன் சிறிதளவு செம்பையாவது வெள்ளியையாவது சேர்த்து உருக்கிக்கொண்டால் அது கடினமாகிவிடும். அதனுல் பவுன், அரைப்பவுன், கால்பவுன் முதலிய நாணயங்களும், அநேகவிதமான நகைகளும் செய்கிருர்கள். பவுனில் பதிஞெரு பங்கு தங்கமும் ஒரு பங்கு செம்பும் சேர்ந்திருக்கின்றன. பொன்னினுல் சரிகையும் செய்வதுண்டு.

பொதுவாகப் பெண்கள் பொன் ஆபரணங்களைப் பெரிதும் விரும்பி அணிகிருர்கள். கழுத்து, காது, கை, தலை, நெற்றி, மூக்கு, இடுப்பு முதலிய ஒவ்வொரு பாகத்திலும் நமது தேசத்துப் பெண்கள் பொன் நகைகள் அணிந்துகொண்டிருப்பதை நாம் சாதாரணமாய்ப் பார்க்கலாம். சிறு குழந்தைகளுக்குக்கூட பெற்ரேர் விலை உயர்ந்த நகைகளைப்போட்டு அழகுபார்ப்பார்கள். அதனுல் பல கெடுதிகள் விளைவதுமுண்டு. அப்பேர்ப்பட்ட குழந்தைகளைக் கள்வர் கண்டால் அவர்களை

ஏமாற்றித் தூர இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நகைகளை அபகரித்துக்கொண்டு, பிள்ளைகளையும் சில சமயங்களில் கொன்றுவிடுகிறார்கள். பொன்னாசை அநேக தீமைகளுக்கு மூலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொன்னுக்கு ஆட்கோல்லி என்று ஒரு பெயரும் உண்டு.

வெள்ளி பொன்னைவிடக் குறைந்த விலையுள்ள உலோகம். அது வெள்ளை நிறமாயிருப்பதால் அதற்கு வெள்ளியென்று பெயர். பொன்னைப்போலவே வெள்ளியிலும் துரு ஏறாது. ஆனால் அடிக்கடி சுத்தம்பண்ணாவிட்டால் அதன் நிறம் நாளாவட்டத்தில் சற்று மங்கலாய்க் காணப்படும். சீமைச் சுண்ணாம்பினால் அடிக்கடி அதைத் தேய்த்துத் துலக்கினால் எப்பொழுதும் பளபளப்பாயிருக்கும். நமது தேசத்துப் பெண்கள் காலில் அணிந்துகொள்ளும் நகைகள் யாவும் சாதாரணமாய் வெள்ளியினாலேயே செய்யப்படுகின்றன. அழகான கிண்ணங்கள், சிறந்த போஜனபாத்திரங்கள், விதவிதமான தட்டுகள், கரண்டிகள், முள்ளுகள், சாவிக்கொலுசுகள், கடியாரச் சங்கிலிகள், கைப்பிடிகள் முதலிய அநேக ஆபரணங்களும் சாமான்களும் வெள்ளியினால் செய்யப்படுகின்றன. நாம் உபயோகப்படுத்துகிற முழு ரூபாயும், அரைரூபாயும், கால் ரூபாயும் வெள்ளியினால் செய்யப்பட்டவை. முன்காலத்தில் அரைக்கால் ரூபாயும் வெள்ளியினாலேயே செய்யப்பட்டது. தற்காலத்திலோ அரைக்கால் ரூபாயும், ஒரு அணாவும் நிக்கெல் என்னும் உலோகத்தால் செய்யப்படுகின்றன. நிக்கெலினால் செய்யப்பட்ட கால் ரூபாயும் உண்டு.

அப்பியாசம்

1. பஞ்சலோகங்கள் எவை?
2. தங்கத்துக்கும் பொன்னுக்கும் என்ன வித்தியாசம்?
3. ஆட்கோல்லி என்று எதற்குப் பெயர்? ஏன்?

4. வெள்ளியினாலாகிய நாணயங்கள் எவை?

5. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு:—
உலை, உலோகம், கனி, மாற்று, மூலம்.

6. 'அரைக்கால் ரூபாயும், ஒரு அணாவும், நிக்கெல் என்னும் உலோகத்தால் செய்யப்படுகின்றன.'

(1) பயனிலை செய்கிறார்கள் என்று வரும்படி இவ்வாக்கியத்தை மாற்றி எழுது.

(2) உலோகத்தால்—எத்தனையாவது வேற்றுமை?

(3) இச்சொல்லிலிருக்கும் ஆல் என்னும் உருபுக்குத் தனியாக அர்த்தமுண்டா?

(4) ஐ முதலிய வேற்றுமை உருபுகளுக்குத் தனியாக அர்த்த முண்டா?

(5) நட என்னும் வினைச்சொல்லோடு ந், த், ஆன், அன் என்னும் சொற்கள் சேர்வதால் நடந்தான், நடந்தனன் என்னும் சொற்கள் உண்டாகின்றன. ந், த் என்னும் இடை நிலைகளுக்கும், அன், ஆன் என்னும் விகுதிகளுக்கும், தனியாக அர்த்தம் கிடையாது. தமக்கு என்று அர்த்தம் இல்லாத இச்சிறு சொற்கள், பெயர் அல்லது வினைச்சொற்கள் இடை அல்லது இடம் சேர்ந்து வந்தால் மாத்திரம் அர்த்தம் கொடுக்கும். ஆகையால், அவற்றிற்கு இடைச்சொல் என்று பெயர். பெயர் வினைகளைப்போல் தனித்து வாராமல் அவைகளைச் சார்ந்து பொருளை யுணர்த்திவரும் சொற்கள் இடைச்சொற்களாம்.

(1) இராமனே செய்தான்.
(2) இராமனோ செய்தான்?
(3) இராமனும் வந்தான்.
(4) இவனுக்கு இராமன் என்று பெயர்.
(5) மழை சோரெனப் பெய்தது.
(6) எனக்கு அதுதான் வேண்டும்.
(7) அவன் புலிபோலப் பாய்ந்தான்.
(8) ஐயோ! அடிபட்டுக் கிடக்கிறான்.

இவ்வுதாரணங்களில் வரும் ஏ, ஓ, உம், என்று, என, தான், போல, ஐயோ என்பவைகளும் இடைச்சொற்கள்தான்.

21. உலோகங்கள் (இரண்டாம் பாகம்)

துத்தநாகம்	வார்க்கிறார்கள்	கோடரி
பித்தளை	காந்தவிளக்கு	அரிவாள்
வெண்கலம்	கரும்பொன்	கலாயி
சதங்கை	வார்ப்பிரும்பு	தோஷம்
அண்டா	தேனிரும்பு	திராவகம்
தவலை	தகடு	செந்தூரம்
விக்கிரகம்	திறவுகோல்	இளைத்தவன்

செம்பு வெள்ளியைப் பார்க்கிலும் தாழ்ந்த விலையுள்ள உலோகம். அது சிவப்பு நிறமுள்ளது. வெள்ளியைவிட இலேசானது. அதில் துரு ஏறும். செம்பில் இருக்கிற பச்சை நிறமான களிம்பு நஞ்சின் குணமுள்ளது. ஆதலால்தான் செப்புப் பாத்திரங்களுக்கு நாம் ஈயம் பூசுகிறோம். கலாயி பூசாத செப்புப் பாத்திரங்களில் வைத்த பதார்த்தங்களைத் தின்று அநேகர் இறந்துபோயிருக்கிறார்கள்.

செம்போடு துத்தநாகம் சேர்ந்தால் பித்தளையாகும். பித்தளையானது அழகும், இலேசும், மஞ்சள் நிறமுமுள்ள ஒரு உலோகம். பித்தளை செம்பைப்பார்க்கிலும் பலமுள்ளது.

செம்பையும் தகரத்தையும் எடைப்படி கலந்தால் வெண்கலமாகும். வெண்கலத்தால் பலவித சமையல் பாத்திரங்கள், மணிகள், சதங்கைகள் முதலியவைகள் வார்க்கிறார்கள். பித்தளையினால் குடம், அண்டா, தவலை, செம்பு முதலிய பாத்திரங்களைச் செய்கிறார்கள். செம்பினால் விக்கிரகங்கள் வார்க்கப்படுகின்றன. செப்புக் கம்பிகள் காந்த விளக்குகள் போடுவதற்கும் உபயோகப்படுகின்றன. செம்புக்குத் தாமிரம் என்று ஒரு பெயர் உண்டு.

இரும்பு மற்றெல்லா உலோகங்களைப் பார்க்கிலும் அதிக உபயோகமுள்ளது. ஆதலால் அதற்கு இராஜ உலோகம் என்று பெயர். அது கருமை நிறமாயிருப்பதால் அதைக் கரும்பொன் என்று சொல்வார்கள். இரும்பு எல்லாத் தேசங்களிலும் அகப்படும். அது மிகவும் உறுதியும் கனமுமான உலோகம். ஆயினும், பொன், வெள்ளி இவ்விரண்டிற்கும் சமமான கனமுள்ளதன்று. இரும்பு தண்ணீரைவிட எட்டுமடங்கு கனமுள்ளது. வெள்ளி தண்ணீரைப்போல் பத்தரைமடங்கும், பொன் பத்தொன்பது மடங்கும் கனமுள்ளவை.

இரும்பில் வார்ப்பிரும்பு, தேனிரும்பு, எஃகு என்று மூன்றுவிதமுண்டு. வார்ப்பிரும்பு மற்ற இருவகை இரும்பைக்காட்டிலும் சீக்கிரம் உருகக்கூடியது. மிக்க உறுதியும் கனமும் உள்ளது. ஆனால் உடையும் தன்மையுள்ளது. அதைத் தகடாக அடிக்கவும் முடியாது. வார்ப்பிரும்பினால் பலவிதமான இயந்திரங்கள், குழாய்கள், தூண்கள் முதலியவை செய்கிறார்கள்.

வார்ப்பிரும்பைக் காய்ச்சி அதில் கலந்திருக்கும் கரியை நீக்கினால் அது தேனிரும்பாகும். தேனிரும்பைத் தகடாய் அடிக்கலாம், கம்பியாகவும் இழுக்கலாம். ஆனால் இலேசாய் உருக்கமுடியாது. பழுக்கக் காயவைத்து ஒன்றோடொன்று ஒட்டலாம். இவ்வித இரும்பினாலேதான் இருப்புப்பாளம், ஆணி, பூட்டு, திறவுகோல் முதலிய கருவிகள் செய்யப்படுகின்றன.

நல்ல இரும்போடு சிறிதளவு கரி சேர்த்து, காற்றுப் போகாத உலையிலிட்டு உருக்கினால் எஃகு ஆகும். கூரிய ஊசி, கத்தி, உளி, பேனாமுள் முதலிய ஆயுதங்கள் எஃகினால் செய்யப்படுகின்றன. அரிவாள், கோடரி முதலிய ஆயுதங்களைத் தேனிரும்பினால் செய்து எஃகு கூர் வைப்பார்கள்.

இரும்பில் துரு ஏறும். ஆனால் இந்தத் துரு செம்பில் காணப்படும் களிம்பைப்போல் தோஷமுள்ளதல்ல. இரும்பைத் திராவகமாகவும், செந்தூரமாகவும் செய்து மனிதர் மருந்தாக உபயோகிக்கிறார்கள். 'இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்' என்னும் பழமொழியினால் அந்த மருந்தின் குணம் விளங்கும்.

ஈயம் அதிக மெதுவும் கனமுமுள்ள உலோகம். அது மங்கின சாம்பல் நிறமுள்ளது. ஒரு நிமிஷநேரத்தில் உருகும் குணமுள்ளது. அதைத் தகடாய் அடிக்கலாம். ஆனால் கம்பியாக இழுக்கமுடியாது. ஈயத்தினால் நீர்க் குழாய்களும், தொட்டிகளும், துப்பாக்கிக் குண்டுகளும், அச்செழுத்துக்களும், வேறு பல கருவிகளும் செய்யப் படுகின்றன.

நமது வீடுகளில் நாம் உபயோகப்படுத்தும் ஈயப் பாத்திரங்கள் தகரத்தால் செய்தவை. தகரத்தை வெள்ளீயம் என்றும் சொல்லுவார்கள். வெள்ளீயப் பாத்திரங்களில் புளிப்புள்ள வஸ்துக்களை வைத்தால் களிம்பு பிடிக்கிறதில்லை.

அப்பியாசம்

1. கரும்பொன் என்று எதற்குப் பெயர்? அதற்கு இன்னொரு பெயர் என்ன? ஏன் அந்தப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன?

2. இரும்புகளில் எத்தனை விதம் உண்டு? அவை ஒவ்வொன்றின் குணம் என்ன?

3. 'இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்'. இந்தப் பழமொழியின் பொருள் என்ன?

4. ஈயம் எப்பேர்ப்பட்ட உலோகம்? அதினால் என்னென்ன செய்கிறார்கள்? கலாயி பூசுவது என்றால் என்ன?

5. இச்சொற்றொடர்களை இரண்டு சொற்களாகப் பிரித்து எழுது:—

உபயோகமுள்ளது, வார்ப்பிரும்பு, கலந்திருக்கும், இருப்புப்பானை, செப்புக்குடம்.

6. 'செம்புக்குத் தாமிரம் என்று ஒரு பெயர் உண்டு.'

இவ்வாக்கியத்திலிருக்கும் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொற்களை எடுத்து எழுது.

7. இவ்விரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்கு:—

(1) இரும்பு மங்கின சாம்பல் நிறமுள்ளது.

(2) இரும்பு ஒரு நிமிஷத்தில் உருகுங் குணமுள்ளது.

22. விதைக்கிறவன்

அள்ளி	சகவாசம்	கால்கூறு
தீய்ந்து	அசைபோடுவது	பற்றலன்
உவமானம்	அன்னப்பட்சி	கற்க
உளர்	குற்றம்	கசடு
மனநிலை	ஆசான்	அற
இல்லி	உரைத்தது	நிற்க
முட்செடி	அமைவா	தக

விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதையை அள்ளித் தெளிக்கும்பொழுது சில விதைகள் வழியருகே விழுந்தன. பறவைகள் வந்து அவைகளைப் பொறுக்கித் தின்றுவிட்டன. சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தன. மண் ஆழமாயிராததினாலே அவை சீக்கிரமாய் முளைத்தன; வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேர் இல்லாமையால் உலர்ந்துபோயின. சில விதைகள் முள் உள்ள இடங்களில் விழுந்தன. முள் கூடவளர்ந்து, பலன் கொடாதபடி அவைகளை நெருக்கிப்போட்டது. சில விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து, செழித்து, ஓங்கிவளர்ந்து, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தன.

இது மாணுக்கருக்கேற்ற ஒரு நல்ல உவமானம். ஒவ்வொரு வகுப்பிலும் நான்குவிதமான மாணுக்கர் உளர். சில மாணுக்கர்களுடைய மனநிலே மனிதர் எப்பொழுதும் நடந்துகொண்டிருக்கும் பாதையைப்போல் இருக்கிறது. அவர்களுக்குக் கவனம் என்பது சற்றென்கிலும் கிடையாது. வழியில் விழும் தானியங்கள் சில நிமிஷங்களுக்குள்ளே அங்கே காணப்படாமல் மறைந்துபோவது போல, உபாத்தியாயர் போதிக்கும் மணிகள்போன்ற நல்ல போதனைகள் அந்த மாணுக்கருடைய மனதில் தங்காமல், சில நிமிஷங்களுக்குள் பறந்து செல்லுகின்றன. அவர்கள் ஒரு காதால் கேட்டு மற்ருெரு காதால் விட்டு விடுகிறவர்கள். இல்லிக் குடத்தைப் போன்றவர்கள் என்றும் சொல்லலாம்.

சில மாணுக்கர்களுடைய மனநிலை மண் இல்லாத கற்பாறையைப்போல் இருக்கிறது. இவர்கள் உபாத்தியாயர் கற்பிக்கும் விஷயங்களைச் சந்தோஷத்தோடு கவனிக்கிற மாணுக்கர். ஆனால் அவர்கள் வகுப்பைவிட்டு வெளியே போனபின் அவைகளைப்பற்றிச் சற்றாகிலும் சிந்திக்கிறதில்லை. கேட்ட விஷயங்கள் விருத்தியாகத்தக்க விதமாய், மேலும் மேலும் கவனத்தைச் செலுத்தி, தங்கள் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளாமல், அதை கற்பாறையைப்போல் கடினம் ஆக்கிவிடுகிறார்கள். ஆகையால், உபாத்தியாயருடைய போதனைகள் வேர்க்கொள்ளாமல், உலர்ந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றன.

வேறு சில மாணுக்கர்களுடைய மனநிலை முட்செடிகளுள்ள இடங்களைப்போல் இருக்கிறது. இவர்கள் உபாத்தியாயருடைய நல்ல போதனைகளைக் கவனத்தோடும் சந்தோஷத்தோடும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் கெட்ட தோழரோடு சேர்வதினாலும், கெட்ட சகவாசம் செய்வதினாலும், கெடுதலான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பதினாலும், உபாத்தியாயர் தங்களுக்குக் கற்பித்த நல்ல விஷயங்களோடு தீய விஷயங்களையும் சேர்த்து விருத்திசெய்கிறார்கள். கடைசியில் உபாத்தியாயருடைய மணிகள் போன்ற நல்ல உபதேசங்கள் இத் தீய உபதேசங்களாகிய முட்செடிகளால் நெருக்கப்பட்டு பலன் கொடாமற் போகின்றன.

சில மாணுக்கர்களுடைய மனநிலையோ, பக்குவப்படுத்தப்பட்ட நல்ல நிலத்தைப்போல் இருக்கிறது. அவர்கள் கவனத்தோடு உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டு, மனதில் வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடத்தை விட்டுப் போனபின், பசு அசைபோடுவதுபோலச் சிறிது சிறிதாக திரும்ப அவைகளை ஞாபகத்தில் கொண்டுவந்து

சிந்தித்து, அன்னப்பட்சி பாலேயும் நீரையும் வேறுபிரித்துப் பாலேமாத்திரம் குடித்தல்போல, குணத்தையும் குற்றத்தையும் வேறுபிரித்து குணத்தை மாத்திரம் உட்கொள்வார்கள். இப்பேர்ப்பட்ட நல்ல மாணுக்கர்கூட ஆசான் கற்பித்ததில் கால்பங்குக்கு அதிகமாகக் கற்றிருக்கமாட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'[1]ஆசான் உரைத்த [2]தமைவரக் கொளினும்
[3]காற்கூ றல்லது [4]பற்றல ஞகும்.'

ஆகையால்,

'கற்க [5]கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் [6]தக.'

அப்பியாசம்

1. குடியானவன் தெளித்த விதை எப்பேர்ப்பட்ட நிலங்களிலெல்லாம் விழுந்தது?

2. மாணுக்கருக்கு இது எப்படி ஒரு உவமானமாகும்?

3. நல்ல மாணுக்கருக்கிருக்கவேண்டிய குணங்கள் எவை?

4. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

பறவை, உவமானம், பாதை, இல்லி, ஆசான், அமைவர, கூறு, கசடு.

5. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு:—

அசை, கால், நிலே.

6. பாறை, பாரை. இவ்விரண்டிற்கும் என்ன வித்தியாசம்? ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் உபயோகப்படுத்து.

7. இவ்வினைச்சொற்களினின்று வரும் தொழிற்பெயர்கள் எவை?

புறப்பட்டான், விழுந்தன, கற்க, தந்தன, உலர்ந்து, மறைந்து, முளேத்தன.

---

[1]ஆசான் = ஆசிரியன். [2]அமைவர = நிறைய. [3]காற்கூறு = கால்பங்கு. [4]பற்றலன் = பெறுதவன். [5]கசடு அற = குற்றம் நீங்க. [6] தக = தக்கபடி.

8. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தன.

இவ்வாக்கியத்திலிருக்கும் நிறுத்தல் குறிகளைக் கவனி. . இது முற்றுப்புள்ளி. , இது காற்புள்ளி, ஆங்கிலத்தில் இதற்குக் கமா என்று பெயர். நாம் எழுதும்பொழுது பொருள் தெளிவாகத் தெரியும்படி இப்புள்ளிகளை வைக்கிறோம். முற்றுப்பெற்ற அர்த்தத்தையுடைய வாக்கியத்தின் முடிவிலே முற்றுப்புள்ளியை வைக்கிறோம். முடிவுபெறாமல் அடைமொழிகளாய் வரும் சொற்களுக்கு இடையிலும், ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்கள் எழுவாயாக வரும்பொழுது அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலும், ஒரு பெயர்ச்சொல் விளிவேற்றுமை யடையும்பொழுதும் கால்புள்ளி வைக்க வேண்டும்.

(உ-ம்.) (1) பித்தளையானது அழகும், இலேசும், மஞ்சள் நிறமுமுள்ள ஒரு உலோகம். (2) பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவ்வைந்தும் பஞ்சலோகங்கள் எனப்படும். (3) மாணுக்கரே, கவனியுங்கள்.

23. பேபர்

பேபர்	திடகாத்திரம்	முழங்கால்படியிட்டு
நாமம்	வீரசூரன்	புத்திரன்
பூண்ட	துயரக்கடல்	மும்முறை
மதம்	காணிக்கை	அடைக்கும்
கவர்ந்து	பிரார்த்தித்து	தாள்
பிரக்கியாதி	அரும்பொருள்	நாயனார்

அநேக ஆண்டுகளுக்குமுன் நமது தேசத்தில் பேபர் என்னும் நாமம்பூண்ட ஓர் அரசன் இருந்தார். அவர் மகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர். மிகவும் நல்லவர். குடிகளுக்குப் பல நன்மைகள் செய்து அவர்கள் மனதைக் கவர்ந்துகொண்டவர். பிரக்கியாதி பெற்றவர்.

பேபர் என்ற வார்த்தைக்குச் சிங்கம் என்று அர்த்தம். பேபர் என்னும் பேர் அவருக்கே தகும். ஏனென்ருல், அவர் சிங்கத்தைப்போன்ற தேகபலமும், தைரிய நெஞ்சும், திடகாத்திரமும் உள்ளவர். அவர் இரண்டு பெரிய மனிதர்களைத் தமது இரு தோள்களிலும் தூக்கி வைத்துக்கொண்டு ஓடக்கூடியவர். ஓரேநாளில் நூறு மைல் தூரம் குதிரைச்சவாரி செய்யக்கூடியவர். எப்பேர்ப்பட்ட வெள்ளத்திலும் நன்ருய் நீந்திச் செல்லக்கூடியவர். பேபர் இவ்வளவு தைரியமும், பலமுமுள்ள வீரசூரனு யிருந்தபோதிலும் கடின நெஞ்சுடையவர் அல்லர். இரக்கம் நிறைந்தவர்; இளகிய மனம் உடையவர்.

பேபருக்கு அருமையான ஒரு குமாரன் இருந்தார். அவருக்கு ஹுமாயூன் என்று பெயர். ஒரு தடவை ஹுமாயூன் அதிக வியாதிப்பட்டு சாகும் நிலைமையில் இருந்தார். அதைக்கண்டு பேபர் மிக வருந்தி துயரக் கடலில் மூழ்கியிருந்தார். அப்பொழுது பக்தர் ஒருவர் அவரைப் பார்த்து, 'மகாராஜாவே, தங்களுக்கு அருமை யாயிருக்கும் ஏதாவது ஒரு பொருளைக் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிடுவதாகப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். எல்லாம் வல்ல இறைவன் தங்கள் குமா ரனைக் காப்பாற்றுவார்' என்று சொன்னார். பேபர் தனக்கு அருமையான பொருள் எதுவென்று ஒவ்வொன் ருய் யோசித்துப் பார்த்தார். அச்சமயத்தில் பக்கத்தில் இருந்த மந்திரி, 'தங்களுக்கு ஆக்ராவில் கிடைத்த வைரம் அதிக விலைபெற்றது, மிகவும் அருமையானது', என்று சொன்னார். அதைக் கேட்ட பேபர், 'ஆம், நீர் சொல் வது உண்மைதான். அந்த வைரம் அருமபொருள்தான். ஆனால், அந்த வைரத்தைப் பார்க்கிலும் என் உயிர் எனக்கு வெகு அருமையானது. ஆகையால், கடவுள் என் மகன் உயிரைக் காப்பாற்றுவாரானால், நான் உயி ருக்கு உயிராக என் உயிரைக் கொடுத்துவிடுவேன்' என்று சொன்னார்.

பின்பு பேபர், ஹுமாயூன் படுக்கைக்குப் பக்கத்தில் முழங்கால்படியிட்டு, கடவுள் தன்னை எடுத்துக்கொண்டு, தன் புத்திரனைக் காப்பாற்றவேண்டும் என்று மிகுந்த ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். ஜெபம்பண்ணி முடித்தபின் ஹுமாயூனுடைய படுக்கையை மும்முறை சுற்றிவந்து, 'ஹுமாயூனுடைய வியாதியை நான் ஏற் றுக்கொண்டேன், நான் ஏற்றுக்கொண்டேன்' என்று சொன்னார். ஆச்சரியமானவிதமாக அன்றுமுதல் ஹுமா யூனுக்கு வியாதி குறைந்து, சில நாட்களுக்குள் பூரண

சுகமும் உண்டாகிவிட்டது. பேபர் அரசனே வியாதிப்பட்டு, நாளுக்குநாள் உடல் மெலிந்து, இறந்துபோய் விட்டார்.

பேபர் தன் மகன்மேற் கொண்ட அன்பினல் தன் உயிரைக்கொடுத்து தன் மகனை இரட்சித்தார். இதனுல் தான் ‘அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள்’ என்று திருவள்ளுவநாயனர் சொல்லியிருக்கிறர்.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து சுருக்கமாகச் சொல்லு.

2. பேபர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?

3. அந்த மதத்தை ஸ்தாபித்தவர் எவர்?

4. பேபர் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன? அவர் அந்தப் பெயருக்குத் தகுதியுள்ளவர்தானு?

5. திருவள்ளுவ நாயனரைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? அவர் என்ன தொழில் செய்து வந்தார்? அவர் எழுதின முக்கியமான நூல் எது?

6. ‘அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள்.’ இதன் பொருள் என்ன? இவ்வாக்கியத்தை அடைத்துக் காட்டியிருக்குங் குறிகளைக் கவனி. (‘ ’) இவற்றிற்கு அடைப்புக்குறிகள் என்று பெயர். பேசினவருடைய சொற்களை அப்படியே எடுத்துரைக்கும்பொழுது இக்குறிகளை உபயோகிக்கிறேம்.

7. பின்வரும் வாக்கியத்தில் தகுந்த இடங்களில் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, அடைப்புக்குறிகள்—இவைகளையிட்டுக் காட்டு.

பேபர் ஹுமாயூனுடைய படுக்கையை மும்முறை சுற்றி வந்து ஹுமாயூனுடைய வியாதியை நான் ஏற்றுக்கொண்டேன் நான் ஏற்றுக்கொண்டேன் என்று சொன்னர்.



24. கெட்ட குமாரன் நல்ல குமாரனான விதம்

ஐசுவரியம்	துன்மார்க்கர்	சம்பிரமமாய்
சம்பன்னன்	இடம்பாச்சாரி	வடை
தனிக்குடித்தனம்	வயிறு வளர்க்க	பாயசம்
தனயன்	கோலமாகி	கொடுத்து வைக்க
வேண்டுதல்	அமர்ந்தான்	ததுதி
இசைந்து	பரிதாபம்	ஆயத்தம்
பாகம்	அவதி	மகிழ்ச்சி

ஓர் ஐசுவரிய சம்பன்னனுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் தகப்பனார் சொல் தட்டாமல் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தான். இளையவன் தகப்பன் பேச்சைக் கேட்கிறதில்லை. ஒருநாள் அவன் தந்தையிடம் வந்து, 'அப்பா, ஆஸ்தியில் எனக்கு வரும் பாகத்தை இப்பொழுதே பிரித்துத் தந்துவிடுங்கள், நான் தனிக் குடித்தனம் செய்துகொள்ளுகிறேன்' என்று சொன்னான். தந்தை தனயனை நோக்கி, 'மகனே, அது நல்லதல்ல' என்று எவ்வளவோ புத்திசொல்லியும் அவன் கேட்கவில்லை. கடைசியாக, அவர் அதிக விசனப்

பட்டபோதிலும் மகனுடைய வேண்டுதலுக்கிசைந்து ஆஸ்தியைப் பாகம் செய்து கொடுத்துவிட்டார்.

சிலநாள் சென்றபின், அவன் தனக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு ஒரு தூரமான தேசத்துக்குப் போய்விட்டான். அங்கே குடிகாரரோடும், துன்மார்க்கரோடும், இடம்பாச்சாரிகளோடும் சேர்ந்து, தன் பொருள் முழுவதையும் அழித்துவிட்டான். பின்பு, வயிறு வளர்க்க வழியில்லாமல் பிச்சைக்காரக் கோலமாகி கூலிவேலை செய்யும்படி நேரிட்டது. கடைசியாக, வேலை ஒன்றும் அகப்படாமல், ஒரு குடியானவனிடத்தில் போய் பன்றி மேய்க்கும் வேலையில் அமர்ந்தான். அவ்வேலை செய்யும் சமயத்தில் அடிக்கடி பசியினால் வருந்தி பன்றிகள் தின்கிற தீனியினால் தன் வயிற்றை நிரப்ப ஆசைப்படுவான். என்ன பரிதாபம்! 'நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியும்' என்று சொல்வது எவ்வளவு சரியாயிருக்கிறது.

இப்படிச் சிலகாலம் அவதிப்பட்டபின், அவன் தன் தகப்பன் வீட்டைப்பற்றி நினைக்க ஆரம்பித்தான். அவன் தனக்குள்ளே, 'ஆ! என் தகப்பன் வீட்டு வேலைக்காரர் எவ்வளவு சம்பிரமமாய் வடை பாயசத்துடன் உயர்ந்த சாப்பாடு சாப்பிடுகிறார்கள். அவர்கள் இலையில் மீதிவைக்கிற சாப்பாடுகூட எனக்குக் கொடுத்துவைக்கவில்லையே! நான் ஏன் இப்படிப் பசியினாலே சாகவேண்டும்? நான் எழுந்து என் தகப்பனண்டை போய், தகப்பனே, கடவுளுக்கும் உங்களுக்கும் விரோதமாய்ப் பாவம் செய்தேன். இனி நான் உங்கள் குமாரன் என்று அழைக்கப்படத் தகுதியுள்ளவன் அல்ல. என் குற்றத்தை மன்னித்து என்னை ஒரு வேலைக்காரனைப்போலாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் பாதத்தில் போய் விழுவேன்' என்று தீர்மானித்தான். இப்படித் தீர்மா

னித்துவுடனே, பன்றி மேய்க்கிற வேலையை விட்டுப் புறப்பட்டு, கால்நடையாய் நடந்து தன் தகப்பனுர் வீடு நோக்கிச் சென்ருன்.

வீட்டின் மேல்மெத்தையில் உட்கார்ந்திருந்த தகப்பனுர், தூரத்திலே தன் மகன் வருவதைக்கண்டு, அவசரமாய்க் கீழே இறங்கி, தெருவுக்கு ஓடிப்போய், அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டார். பின்பு வேலைக்காரரைக் கூப்பிட்டு, விலை உயர்ந்த உடுப்புகள் கொண்டுவரச் சொல்லி அவனுக்கு உடுத்தினுர். பெரிய விருந்தும் ஆயத்தப்படுத்தி எல்லாரும் சாப்பிட்டுச் சந்தோஷம் கொண்டாடினுர்கள். தகப்பனுர் மிகுந்த ஆனந்தங்கொண்டு, 'என் குமாரனுகிய இவன் மரித்தான், இப்பொழுது உயிரோடிருக்கிருன்; காணுமற்போனுன், இப்பொழுது காணப்பட்டான்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு மகிழ்ச்சியடைந்தார்.

அப்பியாசம்

1. இளையகுமாரன் தரித்திரக்கோலம் ஆனதற்குக் காரணம் என்ன?

2. இக்கதையிலிருந்து நீ படித்துக்கொள்ளும் படிப்பினை என்ன?

3. இது இயேசுநாதர் சொன்ன ஒரு உவமை.

லூக்கா சுவிசேஷம் 15-ம் அதிகாரம், 11-32 வசனம் வரை வாசித்துப் பார்.

4. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

தனையன், சம்பன்னன், மாடி.

5. வயிறு வளர்க்க—இதின் அர்த்தம் என்ன? இச்சொல் தொடரை உபயோகித்து ஒரு வாக்கியம் எழுது.

6. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் வேண்டும்:—

கெட்ட, துன்மார்க்கன், மூத்தவன், பாவம், மகிழ்ச்சி.

7. தகப்பனார் வேலைக்காரரைக் கூப்பிட்டு, விலை உயர்ந்த உடுப்புகள் கொண்டுவரச் சொல்லி, அவனுக்கு உடுத்தினார்.

இதை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

8. மகனே அது நல்லதல்ல என்று தந்தை சொன்னான்.

(1) இந்த வாக்கியத்தில் தகுந்த இடங்களில் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, அடைப்புக்குறிகள் இட்டு திருப்பி எழுது.

(2) மகனே—எத்தனையாவது வேற்றுமை?

(3) நல்லதல்ல—இதை இரண்டு வார்த்தைகளாகப் பிரித்து எழுது.

25. கடிதம் எழுதுவது (மாதிரி 1)

[தமையன் தம்பிக்கு எழுதுவது]

சிரஞ்சீவி	விளங்காத
ஆசீர்வாதம்	சச்சரவு
சுகசெய்தி	சாயங்காலம்
அத்தை	தமையன்

பல்லாவரம்,

15, செப்டெம்பர் 1940.

பிரியமுள்ள தம்பி சிரஞ்சீவி சிங்காரவேலுக்கு அநேக ஆசீர்வாதம்.

இவ்விடம் நாங்கள் யாவரும் கடவுள் கிருபையால் சௌக்கியமாய் இருக்கிறோம். அவ்விடத்துச் சுகசெய்திகளைப்பற்றி அடிக்கடி கடிதம் எழுது.

நீ தனியாய்ப்போய் மாமா வீட்டில் படித்துக்கொண்டிருப்பது எங்கள் யாவருக்கும் அதிக சந்தோஷம். மாமாவுக்கும் அத்தைக்கும் யாதொரு தொந்தரவும் கொடாமல், அவர்கள் சொற்படி செய். உன் பாடங்களை

நன்ருய்ப் படி. பாடங்களில் உனக்கு விளங்காத விஷயங்களை மாமாவிடத்தில் கேட்டுக்கொள். சண்டை சச்சரவுக்கு இடங்கொடாமல், யாவரோடும் சிநேகமாயிரு. எப்பொழுதும், எல்லாரிடத்திலும் உண்மையே பேசு. சாயங்காலம் இருட்டாகுமுன் வீட்டுக்கு வந்துவிடு.

உனக்குப் புஸ்தகமாவது, வேஷ்டியாவது, சட்டையாவது, வேறெதுவாவது வேண்டியதாயிருந்தால் எழுதியனுப்பு.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தமையன்,
தியாகராஜன்.

26. கடிதம் எழுதுவது (மாதிரி 2)

[கிராமத்திலிருந்து சென்னப்பட்டணம் சென்றிருக்கும் தகப்பனருக்கு மகன் எழுதுவது]

அன்பார்ந்த	நாற்றங்கால்	டசன்
நமஸ்காரம்	சம்பா	ரிபன்
எருவடித்து	ஓழுங்க	மார்க்கெட்
கிடை வைத்து	பனியன்	தேதி

ஆலக்குடி,
தஞ்சாவூர் ஜில்லா,
20–6–1940.

க்ஷேமம்.

அன்பார்ந்த அப்பா அவர்களுக்கு நமஸ்காரம் செய்து எழுதிக்கொள்ளும் செய்தி யென்னவென்ருல்:—

உங்களுடைய அன்பான கடிதம் நேற்று வந்து சேர்ந்தது. இங்கு நாங்கள் யாவரும் கடவுள் கிருபையால்

சுகமே யிருக்கிறோம். நீங்கள் புறப்படும்போது என்னிடத்தில் சொன்ன விஷயங்கள் யாவையும் கவனித்துக் கொண்டு வருகிறேன். வயல்களுக்கு எருவடித்து கிடையும் வைத்தாயிற்று. நாற்றங்காலில் ஏற்கனவே கட்டி வைத்திருந்த சம்பா விதையை விதைக்கும்படி ஒழுங்கு செய்திருக்கிறேன்.

இன்னும் ஒரு வாரத்துக்குள் நீங்கள் திரும்பிவிடுவதாக உங்கள் கடிதத்தில் எழுதியிருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறோம். நீங்கள் புறப்பட்டு வரும்பொழுது தம்பிக்கு இரண்டு பனியனும், தங்கைக்கு ஒவ்வொன்று ஒரு கஜ நீளத்தில் அரை டசன் பட்டு ரிபன்களும், வாங்கிக்கொண்டு வரும்படி அம்மா எழுதச் சொல்லுகிறார்கள். கூடுமானால், மூர்மார்க்கெட்டில் எனக்கேற்ற நூதன விளையாட்டுச் சாமான் ஏதாவது வாங்கிக் கொண்டு வாருங்கள்.

நீங்கள் புறப்பட்டு வரும் தேதியைக் குறித்து திட்டமாய்க் கடிதம் எழுதுங்கள். நான் ரயில்வே ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்புகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள மகன்,
மா. கனகராஜ்.

தந்தை விலாசம்:—

மகா-ா-ா-ஸ்ரீ
அ. மாசிலாமணி பிள்ளை அவர்கள்,
47, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை,
சென்னப்பட்டணம்.

27. கடிதம் எழுதுவது (மாதிரி 3)

[தந்தையின் பதில்]

பிற்பகல்	அனுக்கிரகம்
காரியம்	யோசித்திருக்கிறேன்

47, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை,
சென்னப்பட்டணம்.
22–6–40

செல்வச் சிரஞ்சீவி கனகராஜுக்கு அநேக ஆசீர்வாதம்.

நீ, 20–6–40 ல் எழுதின அன்பான கடிதம் நேற்று பிற்பகல் எனக்குக் கிடைத்தது. நான் இங்கு வந்த காரியம், கடவுளுடைய அனுக்கிரகத்தால், இந்த வாரக் கடைசிக்குள் முடிந்துவிடுமென்று நம்புகிறேன். ஆகையால், நான் இந்த மாதம் 30உ இரவு 9 மணிக்கு இங்கிருந்து புறப்படும் வண்டியில் புறப்பட்டு வரும்படி யோசித்திருக்கிறேன்.

நீ எழுதியிருக்கிற சாமான்கள் யாவையும் வாங்கிக் கொண்டுவருகிறேன். அவ்விடம் நீங்கள் யாவரும் சுகமேயிருப்பீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தந்தை,
அ. மாசிலாமணி.

அப்பியாசம்

1. வருகிற பண்டிகை லீவுக்கு மானாமதுரையிலிருக்கும் உன் மாமா வீட்டுக்குப் போய் அங்கே மூன்று நாட்கள் தங்கும்படி நீ உத்தேசித்திருப்பதாக அவருக்கு ஒரு கடிதம் எழுது.

2. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

நமஸ்காரம், கிடை, மார்க்கெட், டசன், ரிபன், நாற்றங்கால்.

3. இவற்றிற்குப் பெண்பால் எழுது:—

மாமா, தமையன், தம்பி, குமாரன்.

28. பதிலுக்குப் பதில்

தேவதத்தன்	மீண்டும்	ஒளித்து
சாவகாரி	துராசை	நகைத்து
திரவியவீனன்	அபூர்வம்	அசம்பவம்
சம்பாதிக்க	இருக்கட்டும்	ஆச்சரியம்
தேசாந்தரம்	கொடுப்பிக்க	சம்பவித்தது
தன்வசம்	கிலேசப்பட்டு	ஆண்டவனே

ஒரு பட்டணத்தில் தேவதத்தன் என்னும் ஒரு சாவகாரி தான் திரவியவீனனாய்ப் போனதினால் மறுபடி திரவியம் சம்பாதிக்க நினைத்து, தேசாந்தரம் போகப் புறப்படும்போது, தன் வசத்திலிருந்த ஆயிரம் இரும்புக் கம்பிகளை அவ்விடத்திலிருந்த தன் சிநேகிதனிடத்தில் வைத்துவிட்டுப் போனான். போனவிடத்தில் திரவிய சம்பாத்தியத்தைக் குறித்து அநேக உபாயம் பண்ணியும், பணம் அகப்படாமையால், மீண்டும் வீட்டுக்கு வந்து, தன்னுடைய இரும்புக்கம்பிகளைக் கேட்டான். வைத்துக்கொண்ட சிநேகிதன் மிகுந்த துராசையினால் ‘இரும்புக்கம்பிகளை எலிகள் தின்றுவிட்டன’ என்றான். இவன் இந்த அபூர்வத்தைக் கேட்டு, ‘நல்லது, இருக்கட்டும்’ என்று சொல்லி வீட்டுக்குப் போய்விட்டான். பிறகு ஒருநாள் சிநேகிதன் பிள்ளையை விளையாடுகிறதற்காக அவனிடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய் மற்

ரொரு வீட்டில் ஒளித்துவைத்துவிட்டுப் பின்பு சிநேகிதனிடத்தில் வந்து உட்கார்ந்தான். அவன் 'உன்னிடத்தில் இருந்த என் பிள்ளை எங்கே?' என, சாவகாரி 'உன் பிள்ளையைப் பறவை தூக்கிக்கொண்டு போயிற்று' என்ருன். இதை அவன் கேட்டு மிகவும் கிலேசப்பட்டு, இவனை இழுத்துக்கொண்டு ஊர் அதிகாரியண்டைபோய், 'இந்தத் துஷ்டன் என் பிள்ளையைக் கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டுப் பிள்ளையைப் பட்சி எடுத்துக் கொண்டுபோயிற்று என்கிருன்; என் பிள்ளையை எனக்குக் கொடுப்பிக்கவேண்டும்' என, அதிகாரி இதைக் கேட்டுச் சாவகாரியை அழைத்து, 'இவன் பிள்ளை எங்கேயிருக்கிறது? சொல்' என, அவன் 'இவன் பிள்ளையைப் பட்சி கொண்டுபோயிற்று' என, அதிகாரி இதைக் கேட்டுக் குலுங்க நகைத்து, 'இந்த அசம்பவம் இதுவரைக்கும் உலகத்தில் இல்லை; அப்படியிருக்க, நீ எப்படிச் சொல்லுகிருய்?' என, அப்போது அவன், 'இது ஒரு ஆச்சரியமா? எப்படி இரும்புக்கம்பிகளை எலிகள் தின்று விட்டனவோ அப்படியே இதுவும் சம்பவித்தது ஆண்டவனே!' என, இதைக் கேட்டு நியாயாதிபதி முன் நடந்தவைகளை விசாரித்து அறிந்துகொண்டு, 'அவனுடைய இரும்புக்கம்பிகளை நீ கொண்டுவந்து கொடுத்தால், அவன் உன் பிள்ளையைக் கொண்டுவந்து கொடுப்பான்' என்றவுடனே அவ்விருவரும் அப்படியே செய்து தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.

(பஞ்சதந்திரம்)

அப்பியாசம்

1. இந்தக் கதையை மௌனமாகப் படித்து சுருக்கமாகச் சொல்லு.

2. இவற்றிற்கு அர்த்தம் சொல்லு:—

சாவகாரி, திரவியவீனன், தேசாந்தரம், கிலேசம்.

3. இப்பாடத்திலிருக்கும் முதல் வாக்கியத்தை ஐந்து சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

4. சிநேகிதன் **மிகுந்த** துராசையினால் 'இரும்புக்கம்பிகளை எலிகள் தின்றுவிட்டன' என்றான். இதை அவன் கேட்டு **மிகவும்** கிலேசப்பட்டான்.

இவ்வாக்கியங்களிலிருக்கும் மிகுந்த, மிகவும் என்னும் இரண்டு சொற்களும் உரிச்சொற்கள். பெயரையாவது வினையையாவது தழுவி அவற்றின் குணத்தை அல்லது விசேஷத்தை விளக்கும் சொல் உரிச்சொல் எனப்படும். மிகுந்த என்பது துராசை என்னும் பெயரைத் தழுவி வந்ததால் பெயர் உரிச்சொல். மிகவும் என்பது கிலேசப்பட்டான் என்னும் வினையைத் தழுவி வந்ததால் வினை உரிச்சொல். இவற்றிற்குத் திணை, பால், இடம், வேற்றுமை, காலம் முதலிய பாகுபாடுகள் இல்லை.

பண்புப்பெயர், தொழிற்பெயர், பெயரெச்ச வினையெச்சங்கள் இவ்வுரிச்சொற்கள்போல பெயர் வினைகளின் குணங்கூறுகளை விளக்குமாயினும் அவைகள் தம்தம் பாகுபாடுகளைப் பெற்று வருவதால் அவைகளை உரிச்சொல் எனப்படாது.

உரிச்சொற்கள் செய்யுளில் விசேஷமாய் வரும்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று.' இங்கே சால என்பது உரிச்சொல்.

தமிழ்ச் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று நான்கு வகைப்படும்.

29. யூனியன் ஜாக்

யூனியன் ஜாக்	பரிசோதனை	ஓயாத
சேரன்	பிரமாண்டம்	கூட்டத்தார்
சோழன்	குலதரு	ஜாக்கெட்
பாண்டியன்	மகத்துவம்	தர்பார்
விறகோடி	வலுசர்ப்பம்	வருஷோற்சவம்
அரவக்கோடி	ஈட்டி	ஆட்சி
இராஜ்யம்	அதர்மம்	நிலவுகின்ற
சவரன்	அசத்தியம்	சின்னங்கள்
பவுன்	அநீதி	உட்கருத்து

தேசம் ஆளும் ஒவ்வொரு அரசனுக்கும் ஒவ்வொரு விதமான கொடி உண்டு. முன்காலத்தில் நமது நாட்டில் அரசுசெய்த மன்னர்கள் பலவிதமான கொடிகளை உபயோகப்படுத்தி வந்தார்கள். சேரன் விற்கொடியோன். சோழன் புலிக்கொடியோன். பாண்டியன் மீன்கொடியோன். வீடுமன் பனைக்கொடியோன். துரியோதனன் அரவக்கொடியோன். வீமன் சிங்கக்கொடியோன். அருச்சுனன் குரங்குக்கொடியோன். இப்பொழுது நமது தேசத்தை அரசாட்சிசெய்யும் இங்கிலீஷ் இராஜ்யக் கொடிக்கு யூனியன் ஜாக் என்று பெயர்.

நாம் ஒரு சவரன் அல்லது பவுனை எடுத்துப் பரிசோதனை செய்வோமானால் அதன் ஒரு பக்கத்தில் போர் வீரன் ஒருவன் குதிரையின்மீது சவாரிசெய்துகொண்டு

ஒரு பிரமாண்டமான சர்ப்பத்தோடு போர்புரிவதைப் போன்ற ரூபத்தைப் பார்க்கலாம். இந்த ரூபம் இங்கிலீஷ்காரர் குலகுருவாக மதித்துவரும் செய்ன்ற் ஜார்ஜ் என்னும் மகத்துவம் பொருந்திய மகானுடைய ரூபம். ஒரு வலு சர்ப்பத்தை ஈட்டியால் குத்தி அதோடு சண்டை செய்யும் பாவனையாகக் காட்டியிருக்கிறது. அதாவது புண்ணியத்துக்கும் பாவத்துக்கும், சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும், நீதிக்கும் அநீதிக்கும், தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இவ்வுலகத்தில் ஓயாத போர் இருக்கும் என்னும் உண்மையை அந்த ரூபம் விளக்கிக் காட்டுகிறது.

செய்ன்ற் ஜார்ஜ் என்பவர் ஒரு கிறிஸ்தவ சன்னியாசி. அவரைச் சேர்ந்த கூட்டத்தார் ஒரு வெள்ளைத் துணியின் நடுவில் சிவப்புச் சிலுவை போட்ட கொடியை உபயோகித்துவந்தார்கள். இந்தச் சிலுவைக்கொடிதான் இங்கிலாந்து தேசத்தின் கொடி. ஸ்காத்லாந்து தேசம் இங்கிலாந்து தேசத்தோடு சேர்ந்தபோது அந்த தேசத்துக் கொடியையும் தங்கள் கொடியோடு சேர்த்துக் கொண்டார்கள். ஸ்காத்லாந்து தேசத்துக் கொடி ஒரு நீலத்துணியில் மூலைக்கு மூலையாக வெள்ளைச் சிலுவை போடப்பட்டது. அதன்பின் அயர்லாந்து தேசம் இங்கிலாந்து தேசத்தோடு சேர்ந்தபொழுது அந்த தேசத்துக் கொடியையும் சேர்த்துக்கொண்டார்கள். அயர்லாந்து தேசத்துக் கொடி ஒரு வெள்ளைத் துணியில் மூலைக்கு மூலையாக சிவப்புச் சிலுவை போடப்பட்டது. இம் மூன்று தேசக் கொடிகளையும் ஒன்றாய்ச் சேர்த்துக் காட்டுகிற கொடிக்கு யூனியன் ஜாக் என்று பெயர். 'யூனியன்' என்ற வார்த்தைக்கு ஒற்றுமை என்றும், 'ஜாக்' அல்லது 'ஜாக்கெட்' என்ற பதத்திற்கு சொக்காய் என்றும் அர்த்தம். அக்காலத்தில் போர்வீரர் அணிந்து



இங்கிலாந்து
கொடி

ஸ்காத்லாந்து
கொடி



அயர்லாந்து
கொடி



யூனியன் ஜாக்

கொண்டிருந்த சொக்காய்க்கு 'ஜாக்கெட்' அல்லது 'ஜாக்' என்று பெயர்.

'யூனியின் ஜாக்' என்னும் கொடியை, சக்கரவர்த்தி பிறந்த நாள், தர்பார் நாள், பள்ளிக்கூட வருஷோற்சவம் முதலிய விசேஷித்த நாட்களில் உயர்ந்த கம்பத்தில் கட்டி யாவரும் பார்க்கும்படி பறக்கவிடுகிறோம். படத்தில் காட்டியிருக்கிற மாதிரி கொடியைக் கட்டவேண்டும். அகலமான வெள்ளைக்கோடு எப்பொழுதும் இடது பக்கத்து மூலையிலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சமுத்திரத்திலாவது, வேறெவ்விடத்திலாவது ஆபத்து உண்டாகிவிட்டால் கொடியைத் தலைகீழாகக் கட்டுவார்கள். துக்க சங்கதியைத் தெரிவிப்பதற்குக் கொடியைக் கம்பத்தின் தலைப்பில் கட்டாமல், இறக்கி அக்கம்பத்தின் நடுவில் கட்டுவார்கள்.

தற்காலத்தில் இக்கொடி ஆங்கில ஆட்சி நிலவுகின்ற எல்லா நாடுகளுக்கும் பொதுக்கொடியாக இருந்து வருகிறது. ஆதலால் நாம் ஒவ்வொருவரும் இக்கொடியை கவுரவப்படுத்தி, அதிலிருக்கும் சின்னங்களின் உட்கருத்து என்னவென்று தெரிந்துகொண்டு, நமது நாட்டில் தர்மம் தழைத்தோங்க முயற்சி செய்யவேண்டும்.

அப்பியாசம்

1. பூர்வகாலத்தில் சேரன், சோழன், பாண்டியன் என்னும் அரசர்கள் உபயோகப்படுத்தின கொடிகள் எவை?

2. இங்கிலீஷ் இராஜ்யக் கொடிக்கு என்ன பெயர்? ஏன் அதற்கு அந்தப் பெயரிட்டிருக்கிறார்கள்?

3. அக்கொடியிலிருக்கும் சின்னங்கள் எவை? அவற்றின் அர்த்தம் என்ன?

4. இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அயர்லாந்து இம்மூன்று தேசங்களையும் பூகோளப் படத்தில் காட்டு.

5. இவற்றை இரண்டு வார்த்தைகளாகப் பிரித்து எழுது:—

விற்கொடி, அரவக்கொடி, சிங்கக்கொடி, வருஷோற்சவம்.

6. தற்காலத்தில் யூனியன் ஜாக் என்னும் கொடி ஆங்கில ஆட்சி நிலவுகின்ற சகல நாடுகளுக்கும் பொதுக்கொடியாக இருந்து வருகிறது.

இவ்வாக்கியத்திலிருக்கும் நான்குவித சொற்களையும் (பெயர், வினை, இடை, உரி), பெயரெச்சம், வினையெச்சங்களையும் எடுத்து எழுது.

30. இராஜ வாழ்த்து

நிதம்	உலகு	செழித்திட
எம்	மகிழ்ந்திட	நாட்டார்
செங்கோல்	பங்கம்	சுகித்திட
தழைத்திட	விந்தை	நாட்டம்

இராகம்—சங்கராபரணம் ஏகதாளம்

பல்லவி

சுபஜெய மங்களமே—என்றும்
சுபஜெய மங்களமே,
சுபமே, நிதமே, எமையாளும் எம்
ஆரும் ஜார்ஜ் அரசருக்கே.

சரணங்கள்

1. செங்கோல் தழைத்திடவே—உல
கெங்கும் மகிழ்ந்திடவே,
பங்கமின்றியன் பாயாளும்
ஆரும் ஜார்ஜ் அரசருக்கே. (சுப)

2. இந்தியா தேசமதை—மகா
விந்தையாய் நீதியுடன்
தந்தைபோ லரசாளும் எம்
ஆறும் ஜார்ஜ் அரசருக்கே. (சுப)

3. நாடு செழித்திடவும்—இந்திய
நாட்டார் சுகித்திடவும்
நாட்டமோ டரசாளும் எம்
ஆறும் ஜார்ஜ் அரசருக்கே. (சுப)

31. வேத வாக்கியங்கள்

திராட்சரசம்	நீங்காது
அமளி	புறத்தியான்

1. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே.

2. கடவுளுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தி உண்டு.

3. தாழ்மைக்கும், கடவுளுக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாம்.

4. கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.

5. குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவானானல் இருவரும் குழியில் விழுவார்கள்.

6. திராட்சரசம் பரியாசம் செய்யும்; மதுபானம் அமளிபண்ணும்; அதனல் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல.

7. நன்மைக்குத் தீமைசெய்கிறவன் எவனே அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது.

8. ஊமையனுக்காகவும் திக்கற்றவர்கள் எல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற.

9. உன் சத்துருவின் மாடாவது, அவனுடைய கழுதையாவது, தப்பிப்போகக் கண்டால் அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக.

10. உன் வாயல்ல, புறத்தியானே உன்னைப் புகழட்டும்; உன் உதடு அல்ல, அந்நியனே உன்னைப் புகழட்டும்.

11. உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.

12. உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக.

32. அதிவீரராமபாண்டியர்

அருளிச்செய்த

வெற்றிவேற்கை

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
4. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
5. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
6. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
7. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
8. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
9. தேம்படு பனையின் திரள்பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
10. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
11. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
12. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
13. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.

14. உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.

15. அடினு மாவின்பால் தன்சுவை குன்றாது.

16. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.

17. அரைக்கினுஞ் சந்தனம் தன்மண மறாது.

18. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.

19. கலக்கினுந் தண்கடல் சேறா காதே.

20. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

21. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

22. பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே.

23. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

24. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

25. கற்கை நன்றே கற்கை நன்றே.

26. பிச்சை புகினுங் கற்கை நன்றே.

27. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே.

28. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக வென்பார்.

29. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

30. யானைக் கில்லை தானமும் தருமமும்.

31. பூனைக் கில்லை தவமும் தயையும்.

32. ஞானிக் கில்லை இன்பமுந் துன்பமும்.

33. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.

34. முதலைக் கில்லை நீச்சும் நிலையும்.

35. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

36. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.

37. கேளுங் கிளையும் கெட்டோர்க் கில்லை.

38. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

39. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.

40. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைவர்.

41. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.

42. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்.

43. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாயினு மாகும்.

44. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

45. பெற்றமுங் கழுதையும் மேய்த்த வப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினு மாகும்.

46. இல்லோ ரிரப்பதும் இயல்பே யியல்பே.

47. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

48. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

49. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குறவர் தேய நன்றே.

50. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை யிறைவனும் மூர்க்கனும் பதரே.

51. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

52. வித்து மேரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

53. தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

54. வாய்பறை யாகவும் நாக்கடிப்பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

55. பொய்யுடை யொருவன் சொல் வன்மையினுல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

56. மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

57. பழியா வருவதூஉம் மொழியா தொழிவது.

58. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

59. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

60. வழியே யேகுக வழியே மீளுக.

33. அறப்பளீசுரசதகம்

பொருள் செயல் வகை

1. புண்ணிய வசத்தினுற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்கவேண்டும்
புத்தியுட னதுவொன்று நூருகவே செய்து
போதவும் வளர்க்கவேண்டும்
உண்ண வேண்டும் பின்புநல்ல வஸ்திராபரண
முடலிற் றரிக்க வேண்டும்
உற்றபெரியோர் கவிஞர்தம ராதுலர்க்குதவி
யோங்குபுகழ் தேடவேண்டும்
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்
வழிதேட வேண்டுமன்றி, [மோக்ஷ
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறியாக் குருடராம்.

செய்யத்தக்கவை

2. வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டுங் கற்ற
வழியிலே நிற்கவேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும் தேடி
வளரறஞ் செய்யவேண்டும்
சீலமுடை யோர்தனைச் சேரவேண்டும் பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டுங் கொண்டு
தியாகங் கொடுக்கவேண்டும்
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும் நாட்டி
நன்ருய் நடத்தவேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண்டும்
பண்ணினுமிகு பத்திவேண்டும்.

உத்தமராவோர்

3. அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கும்
அவனே மகாபுருடனும்,
அஞ்சாம லெதுவரினு மெதுபோகினுஞ் சித்தம்
அசைவிலான் மகாதீரனும்,
தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற
தோன்றலே மகாராஜனும்,
தூறிக் கலக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகாமேருவாம்,
அடுக்கின்ற பேர்க்கு வருமிடர்தீர்த் திரட்சிக்கும்
அவனே மகாத்யாகியாம்,
அவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயும்
அவனே மகாவுசிதனும்.

இதற்கிதுவேண்டுமெனல்

4. தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டும்,
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேக ரங்கள்வேண்டும்,
கனக்கின்ற வித்துவா னாகினுந் தன்னினுங்
கற்றோரை நத்தவேண்டும்,
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்திரிவேண்டும்,
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலுஞ்
சுதிகூட்ட வொருவன் வேண்டும்,
சுடர்விளக் காயினு நன்றாய் விளங்கிடத்
தூண்டுகோ லொன்றுவேண்டும்.

34. செய்யுள் பாகத்தின்

அரும்பத உரை

வெற்றிவேற்கை—வெற்றிதரும் வேலாயுதத்தை ஏந்திய கை

1. கசடு—குற்றம்
அற—நீங்க
2. செல்வர்—பணக்காரர்
கிளை—சுற்றத்தார்
3. மன்னர்—அரசர்
செங்கோல் முறைமை — செங்கோலின் ஒழுங்கு, அதாவது நீதி தவருமல் ஆளுதல்
4. வரும்பொருள் — இனி வரும் காரியம்
5. தந்திரி—படைத்தலைவன்
தறுகண்—அஞ்சாமையாகிய
ஆண்மை—வீரம்
6. உண்டி—உணவு
7. கற்று—வாசித்து
உணர்ந்து—தெளிந்து
அடங்கல்—அமைந்திருத்தல்
8. வறியோர்—தரித்திரர்
வறுமை—தரித்திரம்
செம்மை—ஒழுக்கம் கெடாதிருத்தல்
9. தேம்படு—இனிமை பொருந்திய
திரள்—திரண்ட
வான்உற—ஆகாயத்தைத் தாவ
வளம்—செழுமை
10. தெள்ளிய—தெளிந்த
தெள்நீர்—தெளிந்த நீர்
கயம்—குளம்
சினை—முட்டை
நுண்ணிதேயாயினும் — சிறியதேயானுலும்
அண்ணல்—பெருமை பொருந்திய
அணி—அழகிய
புரவி—குதிரை
ஆள்—காலாள்
படை—சேனை
11. பெரியோர்—உருவத்தில் பெரியவர்
12. சிறியோர்—உருவத்தில் சிறியவர்
13. பெற்ருேர்—பெற்ற பிள்ளைகள்
14. உற்ருேர்—உறவினர்
15. அடினும்—காய்ச்சினுலும்
ஆவின்—பசுவின்
சுவை—ருசி
16. சுடினும்—சுட்டாலும்
ஒளி—பிரகாசம்
17. மணம்—வாசனை
அருது—நீங்காது
18. கார்—கரிய
அகில்—அகில்கட்டை
பொல்லாங்கு—துர்நாற்றம்
கமழாது—வீசாது
19. தண்—குளிர்ச்சி பொருந்திய
20. கேண்மை—சிநேகம்
இருநிலம்—பெரிய பூமி
21. ஆண்டு—வருஷம்
மூர்க்கர்—மூடர்கள், கோபிகள்
22. பெருமை—உயர்வு
சிறுமை—தாழ்வு
23. பிழை—குற்றம்
பொறுப்பது—சகிப்பது
கடனே—கடமையாம்

24. அரிது—அருமை
25. கற்கை—நூல்களைப் படித்தல்
26. பிச்சைபுகினும்—பிச்சை யெடுக்கப்போனாலும்
27. குலநலம்—ஜாதியின் சிறப்பு
28. குடி—வமிசம்
29. விரும்பும்—விரும்புவான்
30. தானம்—ஈகை
31. தவம்—விரதம்
32. ஞானி—பேரறிவுடையவன்
33. சிதலை—கறையான்
செருக்கு—அகங்காரம்
34. நீச்சு—நீந்தல்
35. அச்சம்—பயம்
நாணம்—வெட்கம்
36. நலிந்தோர்—வியாதிக்காரர்
37. கேள்—சிநேகம்
38. உடைமை—செல்வம்
வறுமை—தரித்திரம்
39. குஞ்சரம்—யானை
ஊர்ந்தோர்—நடத்தினவர்
நண்ணுவர்—சேருவர்
40. அறக்கூழ்ச்சாலை—தரும அன்ன சத்திரம்
41. அறத்து—தருமத்திற்காக
கூவி—கூப்பிட்டு
இரப்போர்—பிச்சையெடுப்போர்
42. குன்று—மலை
இரு—பெரிய
நிதி—திரவியம்
43. எழுநிலை—எழு அடுக்கினையுடைய
மாடம்—வீடு
உக்கு—நொறுங்கி
பாழ்—பாழ்நிலம்
44. மணஅணி—மணக்கோலம்
பிணஅணி—பிணக்கோலம்
கொழுநர்—கணவர்
தழீஇ—தழுவி
ஆடை—சீலை
கூந்தல்—மயிர்
45. பெற்றம்—எருது
பொன் தொடி—பொன்னாலாகிய வளையல்
செறிந்து—கூடிப்பொருந்தி
நெற்பொலி—நெல்லினது அம்பாரம்
நெடுநகர்—பெரிய பட்டணம்
46. இல்லோர்—பொருள் இல்லாதவர்
47. உடையோர்—பொருள் உடையவர்
48. தறுகண்—அஞ்சாமையையுடைய
சிறுகண்—சிறிய கணுக்களுள்ள
49. சான்றோர்—அறிவில் பெரியோர்
தொல்பதி—பழமையான ஊர்
தேன்தேர்—தேனைத்தேடுகிற
50. குடி—குடிகளை
அலைத்து—வருத்தி
இரந்து—பொருள் வாங்கி
முடி—கிரீடம்
இறைவனும்—அரசனாகிய
51. வாணிபம்—வர்த்தகம்
பயன்—இலாபம்
வணிகர்—வியாபாரிகள்
52. வித்து—விதை
உளஆய் இருப்ப—நீங்காதிருக்க
எய்த்து—சோர்ந்து
53. பேதை—அறிவில்லாதவன்
54. கடிப்பு—அடிக்குங்கோல்
சாற்றுவது—சொல்லுவது
55. சொல்வன்மை—பேசும் சாமர்த்தியம்
56. மெய்—சத்தியம்
57. பழிஆ—(பின்) நிந்தையாக
மொழியாது—பேசாமல்
ஒழிவது—விடக்கடவன்
58. நெடுவழி—நீண்டபிரயாணம்
59. புணை—தெப்பம்
புனல்—நீர்
60. ஏகுக—போகக்கடவன்
மீளுக—திரும்பக்கடவன்

அறப்பளீசுர சதகம்—அறப்பளீசுரரைப் புகழ்கின்ற நூறு செய்யுள்கள் கொண்ட ஒரு பிரபந்தம்

1. ரட்சிக்க வேண்டும் – காப்பாற்ற வேண்டும்
போதவும்—மிகவும்
வளர்க்க—விருத்திசெய்ய
கவிஞர்—புலவர்
தமர்—உறவினர்
ஆதுலர்—தரித்திரர்
வறிது—வீண்

2. வித்தை—கல்வி
வளர்-விருத்தியடைவதற்கேதுவாகிய
சீலம்—நல்லொழுக்கம்
தியாகம்—கொடை
ஞாலம்—பூமி
நம்பன்—கடவுள்
இணையடி—இரண்டு பாதங்கள்

3. சித்தம்—மனம்
தீரன்—வலிமையுடையோன்
ஒன்றுதொடுத்து – ஒரு காரியத்தைப்பற்றி
தோன்றல்—ஆண்மகன்
தூறி—நிந்தித்து
துரை—பிரபு
மகாமேரு—பொன்மலை
இடர்—துன்பம்
தியாகி—உபகாரி
உசிதன்—சிரேஷ்டன்

4. சூரன்—வீரன்
தளசேகரங்கள்—சேனைக் கூட்டங்கள்
கனக்கின்ற—பெருமையடைகிற
நத்தவேண்டும்—விரும்பிச் சேர வேண்டும்
காசினி—பூமி
தொனிக்கின்ற—இனிமையாகப் பாடுகிற
சுடர்—ஒளியுள்ள
நன்றாய் விளங்கிட—நன்றாக ஒளி கொடுக்க

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1940. B 3011